Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20

# ஈழநாடு

தேசிய வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, மார்கழி 25- ஆம் நாள். றஜபு பிறை 9 (9-1-60) சனிக்கிழமை இதழ் 49.

# பிரிவினை வேண்டாம்: டட்லி கருத்து

## வடமாகாணத்தில் யு. என். பி. தலை காட்டாததேன்?

— நமது அரசியல் நிருபர் —

**யு. என். பியின் தலைவர் டட்லி சேனநாயக்கா, தேர்தலில் தமது கட்சிக்கு 80 ஸ்தானங்கள் கிடைக்குமென்று நம்புகிறார்.**

தமது கட்சியுடன்சேர்ந்து ஒத்துழைக்கத் தயாராக இருக்கும் யாரையும் தாம் சேர்த்துக்கொள்ளலாமென்றும், ஆனால், வேறு கட்சிகளைச் சேர்த்துக் கூட்டு மந்திரிசபை அமைக்கும் உத்தேசம் தமக்குச் சற்றும் கிடையாதென்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டதாக விஷயமறிந்த அரசியல் வட்டாரங்களிலிருந்து அறிகிறேன்.

வடக்கு மாகாணத்தில் ஏன் யு. என். பி, ஓர் அபேட்சகரையும் நிறுத்தவில்லை? என்று கேட்டதற்கு, "தமிழரின் நண்பர்கள் என்று கூறிக்கொள்ளும் சமசமாஜிக் கட்சியினர் யானை இறவுக்கு வடக்கிலும் சென்று தேர்தலில் போட்டியிடுகிறார்கள். நாங்கள் அப்படிச் செய்யாமல் ஒதுங்கி இருக்கத் தீர்மானித்தோம். தமிழர் தங்களுக்கான பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய விட்டுவிட வேண்டுமென்பதே எங்கள் விருப்பம்" என்றார்.

சமஷ்டிக் கட்சியின் கொள்கையையும் போக்கையும் டட்லி கண்டிக்கிறார். நாட்டைப் பிரிவினை செய்வதாக அக் கட்சியின் கொள்கை இருப்பதாயும், இப்படிக் கொள்கை மாறுவிடில், நாடு நாசமாகிவிடலாமென்றார்.

"சேர் யோன் கொத்தலாவலையை அடுத்த கவர்னர் ஜெனரலாக நியமிக்க நீங்கள் உறுதி கூறியிருப்பதாக பத்திரிகைகளில் வெளியான செய்தி உண்மையா?" என்று கேட்டதற்கு, "முதலில் நான் பிரதம மந்திரி ஆகிறேனோ என்பது தெரியவேண்டும். அதன் பிறகு தானே இந்த விஷயங்களெல்லாம் யோசிக்க வேண்டும்" என்று கூறினார்.

தேர்தலுக்குப்பின் தாம் மந்திரிசபையை அமைப்பதாயின், அது கூடுமானவரை எல்லா வகுப்பினருக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கும் முறையில் இருக்குமென்றும், சென்ற மந்திரி சபையில் ஒரு தமிழரும் இல்லாததால்தான் நாட்டில் வகுப்புத்துவேஷம் பரவ ஏதுவாயிற்றென்றும் அவர் கருதுவதாகக் கூறப்படுகிறது.

இப்போது யு. என். பி கட்சியும் தேர்தல் நிதி வசூலிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது. மற்றக் கட்சிகளை எல்லாம்விட யு. என். பியிடந்தான் தேர்தல் நிதி அதிகமுள்ளதாயும், அடுத்தபடி கொம்யுனிஸ்ட் கட்சி என்றும் கூறப்படுகிறது.

இத் தேர்தலில் ஒரு தொகுதியிலே உள்ள வாக்காளர் ஒவ்வொருவருக்கும் 30 சதவீதம் கணக்கிட்டு, அபேட்சகர்கள் தேர்தல் செலவு செய்யலாம். அதற்குமேல் செலவு செய்வது சட்டவிரோதம். கொடிகள், சுவரொட்டிகள், மோட்டார்கள் இச் செலவுகளெல்லாம் இம்முறை சட்டமூலமாகத் தடுக்கப்பட்டுள்ளதாகவும், தபாலில் முத்திரைச் செலவில்லாமல் தேர்தல் கடிதங்களை அனுப்ப அனுமதித்துள்ளதாயும், இம்முறை நியாயமான தேர்தல் செலவுகள் அதிகமாக முடியாதென்றும் மதிக்கப்படுகின்றது.

பிறருக்கு உதவி செய்யும் கரும்பினையும், தலை வணங்கி நிற்கும் செந்நெல்லையும் பொங்கற் புது நாளில் நினைவு கூருவோம்.

★

அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்.

### பொதுத்தேர்தலில் 898 அபேட்சகர்கள்

மார்ச் மாதம் 19ஆம் திகதி நடைபெறும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக 145 பார்லிமெண்ட் தொகுதிகளுக்கும் 898 அபேட்சகர்கள் போட்டியிடுவார்கள். பிரதான கட்சிகளின் நிலைமை பின்வருமாறு: யு. என். பி. — 127; ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி — 106; சமசமாஜக் கட்சி — 101; இலங்கை ஜனநாயகக் கட்சி— 98; எம். ஈ. பி. — 86; கொம்யூனிஸ்ட் கட்சி — 52; சமாஜவாதி மகாஜன பெரமுனை — 38; தமிழரசுக் கட்சி — 19; தமிழ் காங்கிரஸ் — 8; இலங்கை ஜனநாயக காங்கிரஸ் — 5; தமிழ் பேசும் முன்னணி — 2; ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி — 1.

## 'தை முதல் ஞாயிறு வந்தது'

காலை புலர்ந்தது; காசினி
காண நிமிர்ந்தது செங்கதிர்;
ஞாலம் ஒளிர்ந்தது—தைமுதல்
ஞாயிறு வந்தது; மைந்தர்கள்
—பால்நனி பொங்கும் அடா இனி!
பார்மிக நன், றென ஆடினர்;
சால மகிழ்ந்தனர் எம்மவர்;
—சாய்ந்தன தீமைகள், என்றனர்.

முன்றிலி லேசில மங்கையர்
முந்தினர்; கோலம் இழைந்தன;
–பொன்பொலி ஓவியம் இங்கிவை,
பூ! என எண்ணினர் ஆடவர்.
கும்பம் அமைந்தன; அண்மையில்
குத்து விளக்கொளி ஏறின.
இன்பம் எழுந்து பிறந்ததில்
இன்று நலங்கள் சிறந்தன.

பொங்கல் நடந்தது—வாசலில்
பூசல் எழுந்தது; சீறிய
வெங்கனல் வாணம் விசும்பினை
வீறுடன் கீறி அளந்தன.
எங்கும் வெடிப்பொலி; முன்புறம்
யாவும் 'படபட பட்' டொல!
தங்கையர் தம்பியர் துள்ளினர்.
தாயர், கண் ஆரமிழ் துண்டன.

பேனை அணிந்தகை யோடொரு
பேசல் துறந்தவர் ஆகினர்,
மோன நெடுந்தவம் ஒன்றினர்,
முத்தமிழ் பெற்றனர் பாவலர்.
வானம் அளந்தது, மண்ணையும்
மாறி வரும்படி சொல்வது,
ஈனமறுந்து விழும்படி
இன்கவி இன்று பிறந்தது!

பாடல் தொடங்கின;—செந்தமிழ்
பாயசம், என்றனர் நாவலர்.
ஆடல் தொடங்கினர், நூலிடை
ஆயிழை மார்கள்; அரங்கினில்
நாடகம் இன்றிர வென்றவர்
நாடி நடந்தனர்; சிந்தையில்
ஓடிய இன்ப உணர் வெனும்
ஊஞ்சலின் ஆடல் நிகழ்ந்தது.

— முருகையன்

# வானொலியில் நடைபெற்ற வகுப்புத் துவேஷ பிரசாரம்

**சென்ற புதன்கிழமை ஜாதிக விமுக்தி பெரமுனையின் தலைவரான கே. எம். பி. ராஜரத்னா, தமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் பற்றிப் பேசுகையில், வகுப்புத் துவேஷமான கருத்துக்களை வெளியிட்டார். அப் பேச்சில் அவர் குறிப்பிட்டதாவது:**

"தனிச் சிங்களம் மட்டுமே" என்ற கொள்கை நாடெங்கும் அமுல் நடத்தப்பட வேண்டும். தமிழ் உபயோக மசோதா, சிங்களம் மட்டும் சட்டத்துக்கு எதிரிடை என்பதை யாரும் விளங்கிக் கொள்வார்கள். சிங்களம் மட்டும் எனக் கூறிவிட்டு, பிறகு 'தமிழும்' எனக் கூறுவது அறிவுக்கு ஒவ்வாத விஷயமாகும். நாட்டின் அரசியல் மொழி சிங்களமே எனக் கூறிக்கொண்டு அதே சமயத்தில், தமிழுக்கும் அரசியலில் இடம் கொடுக்கப்பட வேண்டுமென்போர், பெரும் தீங்கிழைத்தவராவர். சிங்களம், இச் சிறிய நாட்டில் மட்டுமே உபயோகிக்கப்படுகின்றது. எனவே வேறெந்த மொழிக்கும் அரசியல் அந்தஸ்து கொடுப்பது சிங்களவரின் வாழ்வையே பாழ்படுத்துவதாகும்.

பௌத்தமதம் அரசியல் மதமாக்கப்பட வேண்டும். 1815-ஆம் ஆண்டுவரை பௌத்தமதமே இலங்கையின் தேசிய மதமாக இருந்தது. மீண்டும் இந்த நிலை ஏற்படச் செய்ய உடனடியாக பௌத்தமதக் கொமிஷனின் சிபார்சுகளை அமுலாக்கல்.

### இலங்கை இந்தியர்

இலங்கையில் வாழும் தென்னிந்தியர் இந்நாட்டு கலாச்சாரத்துக்கும், அரசியலுக்கும் பங்கம் விளைவிக்க கூடியமையால், அவர்கள் மீண்டும் இந்தியாவுக்கு அனுப்பப்படவேண்டும். நமது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் இது முக்கிய அம்சமாகும். இந்த முயற்சி ஈடேற, கீழ்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்:

1. இன்று தோட்டங்களில் இந்தியருக்கு மட்டுமே கிடைக்கும் மேலதிகமான அரிசி, இலவசக் கல்வி, இலவச வீடு, எல்லோருக்கும், — தோட்டத்துக் குழந்தைகள் உட்பட — வேலை, தொழிற்சங்க உரிமைகள், பறிக்கப்பட வேண்டும்.

2. இலங்கை விவசாயிகளுக்குக் கிடைக்காமல், தென்னிந்தியருக்கு மட்டுமே அளிக்கப்பட்டுள்ள தேசிய சேமலாப நிதிபோன்ற சலுகைகள், சிங்களவருக்கு அச்சமளிக்கின்றது. எனவே இந்தியர் இச் சேமலாப நிதியின் பயனை தென்னிந்தியாவில் மட்டுமே பெறுதற்குச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்.

4. நாட்டின் சொத்துரிமைகள், பிற நாட்டவரிடம் (தென்னிந்தியர் உட்பட) இருப்பதை தடை செய்ய வேண்டும்.

5. இலங்கையருக்கு மட்டுமே வேலை.

6. சர்வதேச சட்டப்படியும், டில்லி ஒப்பந்தப்படியும் பிரஜா உரிமை பெற விரும்புவோர் நாட்டின் அரசியல் மொழி ஒர

[9ஆம் பக்கம் பார்க்க]

# ஆசிரியருக்குக் கடிதங்கள்

## தேர்தலும் பொது மக்களும்
### தமிழினம் முன்னேற வழி

எதிர் வரும் மார்ச் மாதம் தேர்தல் நடைபெறவிருக்கின்றது. இந்தத் தேர்தலில் பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டியது மிக அவசியம். இதற்குக் காரணம் எமது கடந்த காலப் பார்லிமெண்ட் சரித்திரமே. பொது மக்களுக்குத் தகுதியான அங்கத்தவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும், கடமையும் உண்டு. உரிமையை நல்ல முறையில் பாதுகாக்கக் கடமை புரிய வேண்டியது பொது மக்கள் கடன். தமிழ் மக்களாகிய நாம் இன்று அடிமைகளாக, அரசியல் அனதைகளாக, மொழியுரிமை யற்றவர்களாகப் பல வழியாலும் ஆளும் கட்சியினரால் நசுக்கப்படுகிறோம். அவர்களை நடுநிலைமையுடன் நீதியை நிலைநாட்டி, ஒற்றுமையுடன் ஒன்று சேர்ந்து எதிர்த்துப் போராட நல்லெண்ணமும், நல்ல கொள்கையும், தியாக சிந்தையுமுள்ள அங்கத்தினர் தெரிவு செய்யப்பட வேண்டும். அத்தனை சிறந்த அங்கத்தவர்கள் தமிழரால் விரும்பும் தனிப் பெரும் கட்சியொன்றின் மூலம் பார்லிமெண்ட் செல்ல வேண்டும்.

பார்லிமெண்டுக்கு அபேட்சகர்களாக நிற்பவர்களே! தங்களுக்கு ஒரு வேண்டுகோள். இலங்கையில் தமிழ் பேசும் இனம் தொகையாற் சிறியது. அவர்கள் வேண்டுவது ஆளுக்கொரு கட்சியும், அவற்றிற்கொரு உருப்படாத கொள்கையும் அல்ல. அரசியல் தர்மம் உணர்ந்த, உண்மையில் மக்கள் வாழ்க்கைக்குத் தம் வாழ்க்கையைத் தியாகம் செய்த உத்தமர்களைத்தான் இன்று நாடு எதிர்பார்க்கிறது.

நீங்கள் தனிமையிற் சென்று சாதிக்கக் கூடியது ஒன்றும் இல்லை. தேர்தலில் வெற்றியடைவது ஒன்றையே நோக்கமாகக் கொண்டு வென்று பார்லிமெண்ட் சென்று மாத முடிவில் பணத்தைப் பெற்று வருவது பெரிதல்ல. தொண்டும் உழைப்புமே முக்கியம்.

எனவே, பார்லிமெண்ட் தேர்தலில் குதிக்கும் உத்தமர்களே! உங்கள் தனிப்பட்ட கட்சிகளையெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு சர்வ கட்சி மகா நாடு கூடுங்கள். உங்கள் கொள்கைகளைப் பொது மக்கள் முன்னிலையில் விளக்கி வையுங்கள். அவர்கள் நல்லதெனக் கூறும் கொள்கைகளை- பல கட்சிக் கொள்கைகளைத் திரட்டி தமிழர் கட்சியொன்று அமையுங்கள். அங்கே போட்டியொழியும். பொருமை அகலும். மக்களுக்கு நம்பிக்கை பெருகும். ஒற்றுமை வலுப்பெறும். ஆளுங் கட்சியினர் உங்கள் சொற்களுக்குச் செவிசாய்ப்பர்.

வாக்காளர்களே! இம்முறை நீங்கள் அபேட்சகர்களுக்குப் பாடம் கற்பிக்க வேண்டியது அவசியம். உங்களிடம் வரும் ஒவ்வொரு அபேட்சகரையும் 'உங்கள் பெயரென்ன? உங்கள் கட்சி என்ன? கொள்கை என்ன? கட்சியில் அங்கத்தவர்கள் எத்தனை பேர்? நேற்று இல்லாத கட்சியாய் இருந்தால் இன்று இக்கட்சி தோன்றிய காரணம்? மக்களுக்கு உங்கள் கொள்கைகளை விளக்கியதுண்டா? மக்கள் ஆதரித்தது உண்டா?' என்றெல்லாம் நீங்கள் கேட்க வேண்டும். தமிழகம் தலையெடுத்துத் தரணியிலே வாழத் தியாக மனப்பான்மை கொண்ட காவலர்கள்தாம் தேவை. நாட்டின் சுபிட்சத்துக்காக உழைக்கச் சித்தமுள்ள உண்மையாளரே நமக்கு வேண்டும்.

1. தமிழருக்கு இந்த நாட்டில் சம அந்தஸ்து.

2. தமிழரின் மொழிச் சிதைவுக்கு நிவாரணம்.

3. கலாச்சாரம், பண்பாடு சிறப்புற உரிமை.

4. தமிழர் முன்னேற வசதிகள்.

என்பன போன்ற காரியங்களை நிறைவேற்றக் கூடிய திறமையும் - கடமையுணர்ச்சியும் தியாக சிந்தையும் இருந்தால் வாக்களிப்போம், இல்லையேல் கொடுக்கமாட்டோம் என்று கூறிவிடுங்கள்.

இத்தனை காலமும் ஏமாற்றினீர்கள். ஏமாந்தோம், இடர்ப்பட்டோம், இனியும் வேண்டாம் இந்த அவல நிலை என்று எடுத்துக் காட்டுங்கள். இன்றைய நிலைமையை நன்கு ஆராய்ந்து தமிழினத்தின் உரிமைகளைக் காப்பாற்றக் கூடிய தொண்டர்களை இம்முறை தெரிந்து அனுப்புவதே வாக்காளர்களின் கடமையாகும்.

—உமாசுதன்
ஸ்டேஷன் வீதி,
சுன்னுகம்.

## பொதுத்தேர்தலில் போட்டியிடும் கட்சிகள்

1. அகில இலங்கைத்திராவிட முன்னேற்றக் கழகம் (அன்னுசி)
2. அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் (சைக்கிள்)
3. போசத் பண்டாரநாயக்கா பெரமுன (வண்ணுத்திப்பூச்சி)
4. பௌத்த குடியரசுக்கட்சி (பூ)
5. இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி (நட்சத்திரம்)
6. இலங்கை ஜனநாயக காங்கிரஸ் (மரம்)
7. அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி (வீடு)
8. இலங்கை ஜனநாயக கட்சி (குடை)
9. லங்கா சமசமாஜக் கட்சி (சாவி)
10. மக்கள் ஐக்கிய முன்னணி (வண்டிச்சக்கரம்)
11. சமாஜவாதி மகாஜன பெரமுன (கண்)
12. சிங்கள ஜாதிக சங்கமய (விளக்கு)
13. ஸ்ரீலங்கா தர்மராஜ கட்சி (பஸ்)
14. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி (கை)
15. தமிழ் பேசும் முன்னணி (கோப்பை)
16. இலங்கை சுதந்திர காங்கிரஸ் (தராசு)
17. உடரட்ட பெரமுன (கடிகாரம்)
18. ஐக்கிய தேசியக் கட்சி (யானை)

## சைக்கிள்காரர் குடை பிடித்தல்

சைக்கிள்காரர் குடை பிடித்துக்கொண்டு சவாரி செய்தல் குற்றமான செயல் என்றும், சிலர் தண்டிக்கப்பட்டுள்ளனர் என்றும் சென்ற வாரம் 'ஈழநாடு' இதழில் வெளியான செய்தி சைக்கிள்காரரிடையே திகைப்பையூட்டியிருக்கிறது. இது ஒரு குற்றமான செயல் என்பதைப் பல சைக்கிள்காரர் இன்னும் அறியாதிருக்கின்றனர்.

ஒரு கையினல் குடை பிடித்துக்கொண்டு சைக்கிளில் சவாரி செய்வது போக்குவரத்தும் பொதுசன நடமாட்டமும் அதிகமாக உள்ள வீதிகளில் விபத்துகளுக்குக் காரணமாக இருக்கலாம். சன நடமாட்டம், போக்குவரத்துக் குறைவான இடங்களிலும் இவ்விதியை நடைமுறைக்குக் கொண்டுவருவது நீதியான செயலாக அல்லது பொருத்தமான செயலாக இருக்குமா? இது நன்கு ஆராயப்பட்டு முடிவு செய்யப்பட வேண்டிய தொன்று.

குடையைக் கையில் பிடித்துக்கொண்டு சைக்கிளிற் பிரயாணம்செய்வது குற்றமான செயலாக இருக்குமானல் தப்பிக்கொள்வதற்கு மூன்றே மூன்று வழிகள்தான் இருக்கின்றன:

1. சைக்கிள்காரர் மழைக் கோட்டுகளை உபயோகித்தல்.
2. கையினற் பிடிக்காமல் குடையைச் சைக்கிளிற் பொருத்திக்கொள்ளுதல்.
3. இன்னெரு வழி மழை நாட்களில் சைக்கிள் சவாரி செய்யாமலிருத்தல்.

எங்கு செல்லும்போதும் குடையைக் கையில் கொண்டு செல்லலாம். ஆனல் மழைக் கோட்டை......? சுலபமாக இழந்துவிடலாம்.

ஓர் ஏழை சைக்கிள்காரன்
கோப்பாய்

## தமிழ்ப் பல்கலைக் கழகம்

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் போதிய இடவசதி இல்லாமையாலும், அது வர வர சிங்களவருக்கே கூடிய சலுகைகளை அளித்து வருவதாலும் தமிழ் மாணவர்களுக்கென ஒரு தனிப்பட்ட பல்கலைக் கழகம் மிகவும் அத்தியாவசியமாகிறது.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி மற்ற எந்த ஜாதியினருக்கும் இடமளிக்கப்படும். ஆகையினல் அதையிட்டு எவரும் பொருமையோ பயமோ கொள்வதற்கு நியாயமில்லை. அதனல் உண்மையில் தேசம் முழுவதற்குமே நன்மையுண்டாகுமாதலால் அரசினர் தங்கள் மனப்பூர்வமான ஆதரவையும் உதவியையும் அளிக்க வேண்டும்.

தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்துக்குத் தமிழ் பேசும் மக்களின் பரிபூரணமான ஆதரவு உண்டென்பதை திருக்கோணமலையில் நடந்த அஸ்தி வார விழாவில் கண்டோம். திடீரென்று சிலர் ஒரு இந்து கலாச்சார பல்கலைக் கழகம் வேண்டுமென்று ஆர்ப்பாட்டம் செய்வது வியப்பாயிருக்கிறது: இவ்வளவு காலமும் மௌனமாயிருந்துவிட்டு இப்பொழுது, இந்தக் கிளர்ச்சியை எழுப்பியவர்கள் வேண்டுமானல், சாந்திநிகேதனத்தைப் போல, தனிப்பட்ட முறையில் ஒரு கலாச்சார பல்கலைக் கழகத்தை அமைக்கட்டுமே! அதை விட்டுவிட்டு தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முன்னேற்றத்துக்குக் குந்தகம் விளைக்கப்படாது.

தமிழ்ப் பல்கலைக் கழகத்திலும் கூட, தமிழ் கலாச்சாரம் நன்கு பேணப்படுமென்பதை இவர்கள் மறந்து விடலாகாது. இந்துக் கலாச்சாரப் பல்கலைக் கழகம் ஆரம்பித்தால் உடனே கிறிஸ்தவர்களும் (அவர்களுக்கிடையில் இருக்கும் பல்வேறு பிரிவுகளும்) முஸ்லிம்களும் கலாச்சாரப் பல்கலைக் கழகங்கள் கோருவார்கள்.

கே. எஸ். சௌந்தரநாயகம்.
மானிப்பாய்.

## நகரைச் சுத்தமாக வைத்திருங்கள்
### யாழ்ப்பாண மேயரின் வேண்டுகோள்

1959ஆம் ஆண்டு ஜனவரி ஆரம்பத்தில் நான் விடுத்த புத்தாண்டு வேண்டுகோளுக்கு மதிப்பளித்து பொது மக்கள் பொறுப்புணர்ச்சியுடன் கையாண்ட சுயேச்சையான முயற்சிகளாலும், மனமுவந்தளித்த மகத்தான ஆதரவினலும் யர்ழ்ப்பாண மாநகரின் பல பகுதிகளையும் சீர்செய்து புத்தழகுடனும் புது அமைப்புடனும் விளங்கும்படி செய்ய எங்களால் முடிந்தது.

சென்ற ஆண்டு விடுக்கப்பட்ட எனது வேண்டுகோளுக்குப் பொதுமக்கள் அளித்த வரவேற்பினல் ஊக்கமும் உற்சாகமும் அடைந்த நான் யாழ்ப்பாண மாநகரத்தைச் சுத்தமும் சுகாதாரமும் பொருந்தியதாக வைத்திருக்கும் பொறுப்புடைய சுகாதார அதிகாரிகளுக்குச் சென்ற ஆண்டு வழங்கியது போன்ற அதே மாதிரி மனப்பூர்வமான ஒத்துழைப்பையும் உதவியையும் தொடர்ந்து செய்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் இந்த ஆண்டும் இவ் வேண்டுகோளை விடுக்கின்றேன்.

காணிகளில் சேரும் குப்பை கூளங்களைக் குப்பைவாளிகளில் சேகரித்து, தெருவோரங்களில் வைப்பார்களேயானல், நகர சுத்தித் தொழிலாளர் அவற்றை அப்புறப்படுத்துவார்கள். இதனல் வீடுகள் மாத்திரமல்ல, இம் மாநகரமே சுத்தமாக விளங்குவதற்கு உதவி செய்தவர்களாகிறீர்கள்.

இவ்விதம் செய்யமுடியாவிட்டால், குப்பை கூளங்களை எரித்துவிடுங்கள். அல்லது காணிக்குள் தகுதியான குழிகளில் அவற்றைப் புதைத்து பயனுள்ள பசளையாக மாற்றுங்கள். இம் மாநகரசபை சுகாதார உத்தியோகத்தர்கள் உங்களுக்கு இது சம்பந்தமாக இலவச ஆலோசனைகளைக்கூற எப்பொழுதும்ஆயத்தமாக இருக்கிறூர்கள். எங்களது 1960 ஆம் ஆண்டுத் தீர்மானம் எங்கள் நகரத்தையும் வீடுகளையும் அழகாகவும் கவர்ச்சிகரமானதாகவும் வைத்திருக்க உதவுவது மாத்திரமன்றி, பொதுமக்களின் சுகாதாரத்தையும் பாதுகாக்கக் கூடியதாக இருக்க உதவிபுரிவதே.

## அருமையான யோசனை

திரு. வில்மட் பெரேரா அருமையான சில யோசனைகளைச் சொல்லியிருக்கிறூர். சகல அரசியல் கட்சிகளும் மொழிப்பிரச்சினையை அடுத்த ஐந்து வருட காலத்துக்கு அறவே மறந்துவிடவேண்டுமென்றும், சிங்களம் தமிழ் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் அரசாங்க மொழியாகக் கொள்ள வேண்டுமென்றும் அவர் கூறியிருக்கிறூர்.

இலங்கை மக்கள் அனைவரும் நன்கு சிந்தித்துப்பார்க்கவேண்டிய விஷயம் இது. நமது நாட்டுக்கு இன்று முக்கியமானது என்ன? பொருளாதார விருத்தியும் நாட்டில் நிம்மதியாக நடமாட ஒழுங்கும் கட்டுப்பாடுமே அவசியமானவை.

எனவே, ஆபத்தான மொழி வெறியைக் கிளப்பி நாட்டைப் படுகுழியில் தள்ளிவிடாது திரு. வில்மட் பெரேராவின் அருமையான கருத்துக்களை அரசியல் வாதிகள் உட்பட அனைவரும் ஆராய்ந்து நம் நாடு வாழவழி செய்தல் அவசியம்.

க. பிள்ளையார்,
74, பூந்தோட்ட வீதி,
கொழும்பு-11.

## சகல கருமங்களையும் தமிழிலே செய்க

தமிழியக்கத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று கூறுவதாவது:

தமிழர்கள் தம் தாய்மொழியாந் தமிழுக்குத் தம் வாழ்வின் துறையனைத்திலும் முதன்மை கொடுத்தல் வேண்டும். இப்பொழுது பலர் தம் அலுவல்களைத் தமிழிலே செய்யாமற் பிற மொழிகளுக்கு அடிமைப்பட்டிருக்கிறூர்கள். இந்த இழிநிலையை நீக்கித் தமிழுக்கு முதன்மை அளிக்கச் செய்தற்காகவே தமிழியக்கந் தொண்டாற்றுகிறது. தமிழுக்கு முதன்மையளிப்பதற்குத் தமிழ் மக்கள் உள்ளத்திலே தமிழுணர்ச்சி பொங்குதல் வேண்டும். தைப்பொங்கல் திருநாளன்று தமிழுணர்ச்சி பொங்கச் செய்தற்காகத் தமிழர் வாழும் ஊர்களெங்குந் தமிழியக்க விழாக் கொண்டாடுமாறு தமிழியக்கம் வேண்டுகோள் விடுகிறது.

தமிழியக்கம் தமிழர் வாழும் இடமெங்கும் பரவித் தமிழுணர்ச்சியை உண்டாக்குதற்கு ஆவன செய்யுமாறு தமிழ்ப் பேரறிஞர்களையும் தமிழ்ப் பத்திரிகையாளர்களையும் தமிழர் நடாத்தும் பொது நிலையங்களின் உறுப்பினர்களையுங் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தமிழ் நூல்களைப் படிக்கவும், தமிழ்ப் பத்திரிகைகளை வாசிக்கவும், தமிழிலே எல்லாக் கருமங்களையுஞ் செய்யவும் தமிழர்கள் யாவரும் இனித் தயங்கக் கூடாது. "எனக்குத் தமிழ் தெரியாது" என்று தமிழர் கூறும் நிலையை ஒழித்துக் கட்டத் தமிழர்யாவரும் பாடுபடல் வேண்டும்."

# சுயேச்சையாகப் போட்டியிடும் காரணம்

## ஐக்கிய தமிழ் முன்னணியை அமைப்பதே

—ஏ. எல். தம்பியையா

யாழ்ப்பாணம்

வடமாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் குறைந்த பட்சம் 21 தமிழ்ப் பிரதிநிதிகளாவது புதிய பார்லிமெண்டுக்குத் தெரிவு செய்யப்படுவார்கள். ஆனல் அவர்கள் பார்லிமெண்டுக்குள் பிரவேசிக்கும் பொழுதே தமிழரசாயும், காங்கிரசாயும், இடது சாரிகளாயும் பிளவுபட்டுச் செல்கிருர்கள். எல்லோரும் ஒருமித்து ஓர் ஐக்கிய தமிழ் முன்னணியாகச் செல்வநாயின் எவ்வளவு நன்ருயிருக்கும். ஆகையினுல் தான் வேறு கட்சிகளில் சேராது தனித்து நின்று நான் போட்டியிடுகிறேன். இவ்விதம் தனித்து வெளியே நின்ருல் தான் கட்சி சார்புள்ளவர்கள் எல்லோரையும் ஒன்று சேர்க்க முடியுமென்பது என் நம்பிக்கை. "ஈழநாடு" சென்ற வார இதழில் குறிப்பிட்டது போல, பார்லிமெண்டில் பிரவேசித்த பின்பாவது தமிழர் எல்லோரும் ஒன்று படுவார்கள் என்று மனப்பூர்வமாக எதிர்பார்க்கிறேன். "தமிழருக்கு எப்போது விமோசனம்?" என்ற தலைப்பில் 'ஈழநாடு' தெரிவித்துள்ள செய்தியின் கடைசிப் பத்தியை நானும் கொழும்பிலுள்ள வேறு பல தமிழரும் முழு மனதுடன் ஆமோதிக்கிறோம்."

மேற்கண்டவாறு ஊர்காவற்றுறையில் சுயேச்சையாகப் போட்டியிடுபவரும் முன்னுள் எம். பி. யு. மாகிய திரு. அல்பிரெட் தம்பியையா "ஈழநாடு" பிரதிநிதியிடம் தெரிவித்தார்.

மேலும் அவர் சொன்னதாவது: சிங்களம் மட்டும் சட்டத்தில் இனிமேல் ஒரு எழுத்தையாவது மாற்ற முடியாத நிலைமை இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் அதன் அடிப்படையில் தமிழுக்கும் நியாயமான அளவு அந்தஸ்து கொடுக்கப்பட வேண்டும். அத்துடன் சிங்களவருக்கும் தமிழருக்கும் இலங்கை முழுவதிலும் சமமான உரிமைகளும் வசதிகளும் அளிக்கப்படவேண்டும். இதுவே எனது கொள்கை. இதை நிறைவேற்றுவதற்காக நான், தேர்தலில் வெற்றி பெற்ருல், மற்ற தமிழ் எம். பி. க்களுடன் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறேன்."

# கொடிகள் மத்தியில் தலைவர்கள்

## ஆதரவாளரின் ஆரவாரம்

## நியமனப் பத்திரம் சமர்ப்பித்த காட்சி

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம்

சென்ற திங்கட்கிழமை (4-1-60) யாழ்ப்பாணத்தில் தேர்தல் திருவிழாவே நடந்தது போலிருந்தது. அபேட்சகர்களும் கட்சி ஆதரவாளர்களும் வாக்காளர்களும் கூட்டம் கூட்டமாக வந்து கச்சேரியையும் மாநகரசபையையும் மொய்த்துக்கொண்டனர். 12 மணிக்கும் 1 மணிக்குமிடையில் இவ்விரு இடங்களிலும் வடபகுதி பார்லிமெண்ட் தேர்தலுக்கு நிற்கும் அபேட்சகர்கள் தங்கள் நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பித்தார்கள். தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களும், தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர்களும் தங்கள் தலைவர்களாகிய திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் நியமனப்பத்திரங்கள் அளித்த இடமான கச்சேரியில் ஆயிரக் கணக்கில் குழுமியிருந்தனர்.

### கார்கள் பறந்தன

தமிழரசுக் கொடியும் காங்கிரஸ் கொடியும் ஏறத்தாழ ஒரே மாதிரியிருந்தபடியினுல் யாழ்ப்பாணத் தெருக்களில் அன்று பறந்த நூற்றுக்கணக்கான கார்களில் எது எந்தக் கட்சியைச் சேர்ந்ததென்று கண்டுபிடிப்பதே கஷ்டமாயிருந்தது. இடதுசாரிகளின் செங்கொடியும் செஞ்சட்டைகளும், சுயேச்சைகளின் மஞ்சளும் சேர்ந்து நகர் முழுவதும் ஒரே வர்ணமயமாயிருந்தது. ஒவ்வொரு அபேட்சகரையும் வெளியில் கூடியிருந்த சனங்கள் ஆரவாரத்துடன் வரவேற்றனர். 12 மணிக்கு முன்னதாகவே அபேட்சகர்களும் அவர்களுடைய பெயர்களைப் பிரேரிக்கும் வாக்காளர்களும் நியமனப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் இடத்துக்கு வந்து சேர்ந்துவிட்டார்கள். ஆவேசம் கொண்ட ஆதரவாளர்கள் உட்செல்லாதவாறு பலமான பொலீஸ் காவல் இருந்தது.

### ஒரே அமர்க்களம்

நியமனப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அபேட்சகர்கள் வெளியே வந்ததும், வெளியே ஒரே அமர்க்களமாய்ப்போய் விட்டது. முன்னுள் எம். பி. கள் திரு. ஏ. அமிர்தலிங்கம் திரு. வி. ஏ. கந்தையாவும் புடைசூழ, கூப்பியகரங்களுடன் சாந்தமாக அடியெடுத்து நடந்து வந்தார் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகம். ஆதரவாளர்கள் உடனே "தமிழரசுத் தந்தையே வருக" என்று பெருங் கூச்சலிட்டு அவரைச் சுற்றிக் கூத்தாடத் தொடங்கிவிட்டார்கள். திரு. செல்வநாயகம் வழக்கமான 'சேட் கோட்'டுக்குப் பதிலாக பட்டு வேட்டியும்பட்டு ஜிப்பாவும் அணிந்திருந்தார். அவர் காருக்குள் ஏறுவதற்குமுன் சனவெள்ளம் பத்திரிகை நிருபர்களையும் படம் பிடிப்பவர்களையும் ஒரு கலக்கு கலக்கிவிட்டது!

காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலமும் பட்டு வேட்டி பட்டு உத்தரீயம் அணிந்து கைப்பிரம்புடன் காட்சியளித்தார். அவரும் தமது நண்பர்கள் சூழ அரசாங்க அதிபரின் அறையை விட்டு வெளிவந்ததும் தூரத்திலேயே அவரைக் கண்டுவிட்ட சனங்கள் 'பொன்னுன பொன்னன்" என்று கத்த ஆரம்பித்துவிட்டார்கள். அதற்குப்பின் தெருவெல்லாம் ஒரே சுலோகங்கள் தான். "எங்கள் நாயகம், செல்வநாயகம்" "போடு, போடு, சைக்கிளுக்கு—" என்று இப்படிப் பல.

பெரியகடைவரைக்கும் ஊர்வலங்கள் சென்றன.

### ஊர்வலம்

ஆனல், சத்தங்கள் கோஷங்கள் இல்லாமல், காட்சியளித்த ஊர்வலம் யாழ்ப்பாண மேயர் திரு. அல்பிரெட் தங்கராசா துரையப்பாவினுடையது. அவரையும் ஆதரவாளர்கள் மாலையிட்டு அழைத்து வந்தனர். வெளியே சுமார் 250 கார்கள் காத்துநின்றன. மேயர் நேரே தமது காருக்குச் சென்று டிரைவர் ஆசனத்தில் அமர்ந்துகொண்டு காரைச் செலுத்தினுர். பின்னுல் 250 கார்களும் ஒன்றன்பின் ஒன்ருக யாழ்ப்பாணம் தெருக்களில் ஊர்வலம் சென்றன.

சமசமாஜி அபேட்சகர்கள், செனேட்டர் பி. நாகலிங்கம், ஏ. விஸ்வநாதன், முதலியோர் தாங்கள் பாட்டாளி வர்க்கம் என்பதை வலியுறுத்தவும் போலும் கால்நடையாகவே தெருக்களில் ஊர்வலம் வந்தனர். அரிவாளும் சம்மட்டியும் பொறித்த செங்கொடி தாங்கியதோழர்கள், கொம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர்கள் திரு. ஏ. வைத்தியலிங்கம், திரு. பி. கந்தையா ஆகியோரைச் சூழ்ந்து நின்றனர்.

# இரத்தினக் கம்பளம்

பதுமன்

தலைக்களவான தொப்பியா? அல்லது தொப்பிக்கு அளவான தலையா? என்ற பிரச்சினை நாளாந்த வாழ்க்கையில் எழுவதுண்டு. தலைக்களவான தொப்பி கிடைத்துவிடுமாயின் எவ்வளவோ தலையிடி தீர்ந்துவிடும். அதுதான் எப்போதும் கைகூடும் காரியமாயிருப்பதில்லையே!

இந் நாட்களில் புதியதொரு சிக்கல் எழுந்துள்ளது. கட்சிக்கேற்ற அபேட்சகர்களா? அல்லது அபேட்சகர்களுக்கேற்ற கட்சியா என்பதுதான் அது. கட்சிக்கேற்ற அபேட்சகர்களைத் தேடிப்பிடிக்க முடியாத கட்சித் தலைவர்கள் வெட்கித் தலைகுனியவில்லை. கட்சிகளைத் தேடித்திரிந்த அபேட்சகர்களுக்குத் தலைப்பாகை கட்டித் தேர்தல்களத்தில் நிறுத்தியிருக்கின்றனர். இவர்களுட் சிலர் கத்தரித் தோட்டத்து வெருளிகளைப்போலக் காட்சியளித்தாலும் ஆடுமாடுகள் வந்து 'உரிமைப் பயிரை' மேயவிடாது காவல்புரிய உதவுகின்றனர் என்பது கட்சித் தலைவர்களின் நம்பிக்கை.

### 'சோதியே சுடரே.....'

முன்னர் ஒருசமயம் வடபகுதியில் நடைபெற்ற பார்லிமெண்ட் தேர்தல் ஒன்றில் போட்டியிட்ட அபேட்சகர் ஒருவர் விளக்கைத் தமது சின்னமாகப் பெற்ருர். அடுத்தநாட் காலை அவருடைய தொகுதிகளிலுள்ள சுவர்களிலும், மதில்களிலும், மல சலகூடங்களிலும் "சோதியே சுடரே சூழொளி விளக்கே" என்ற மாணிக்கவாசக சுவாமிகளின் அருட்பத்தில் உள்ள ஓர் அடி கொட்டை எழுத்துக்களில் காட்சி அளித்தது. அந்தச் சுவரொட்டியின் நடுவே அவருடைய தேர்தல் சின்னமாகிய விள்க்கு மின்னிக் கொண்டிருந்தது. தேர்தல் காற்றுச் சூருவளியாகி ஓய்ந்த போது விளக்கு அணைந்துவிட்டது. தோல்வியுற்ற அபேட்சகர் தைரியத்தை இழக்கவில்லை. "எனக்குக கிடைத்த வாக்குகள் அத்தனையும் காத்திரமானவை. ஏனையோரின் வாக்குகள் வெறும் சருகுகள். அவை அடித்த காற்றுடன் அள்ளுபட்டிருக்கின்றன" எனக் கரகோஷத்துக் கிடையே வெளுத்து வாங்கினுர்.

### ஒரு கோஷம்

இதனை எதற்காக இன்று நினைவூட்டுகிறேன் என்ருல், சென்ற திங்கட்கிழமை யாழ்ப்பாணக் கச்சேரியில் நடைபெற்ற தேர்தல் கொடியேற்ற விழாவின்போது எழுந்த கோஷம் ஒன்றை இங்கு குறிப்பிடுவதற்காகவேதான். 'பொன்னுன பொன்னும், பத்தரை மாற்றுத் தங்கமும்' அங்கு பளிச்சிட்டபோது வாக்காளர் நாதவெள்ளத்தில் அலைக் கதிர்களைத் தள்ளிய காட்சி கண்கொள்ளாக் காட்சியாக விருந்தது. இதனைப் படம் பிடிக்கச் சென்றவர்கள் வெள்ளத்துடன் அள்ளுப்பட்டுக் கரைபுரண்ட கோலத்தைப் படம்பிடிக்கப் பதுமனிடம் 'கமெரா' இருக்கவில்லை. ஆகவேதான், 'பொங்கலோ பொங்கல்' என்று சொல்லிப் பேனுமுனையில் உருட்டித் தள்ளியிருக்கின்ருர் அவர்.


### தேர்தல் சுழியோட்டம்

தேர்தல் வெள்ளத்தைப் பற்றிப் பேசும் போது பிரதமர் தஹநாயக்காவுக்கு நீர்விளையாட்டில் ஏற்பட்டுள்ள மோகம் நினைவுக்கு வருகின்றது. கிராம மக்களிடையே நீந்தும் பழக்கத்தை விருத்திசெய்ய விரும்பி அவர் எல்லா பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பியுள்ள கடிதத்தில் நீந்துவதற்கான குளங்களை வெட்டுவதற்குத் தகுந்த இடங்களைத் தெரிந்தெடுக்குமாறு உத்தரவிட்டிருக்கிருர். இதற்கான செலவை அரசாங்கமே கையேற்குமாம். மக்கள் நீந்திப்பழக வேண்டுமென்ற எண்ணம் தகநாயக்கா போன்ற அரசியற் சுழியோட்டக்காரரின் மூளைக்கு எட்டியிருப்பது பதுமனுக்கு நூதனமாகத் தோன்றவில்லை. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பது தமிழுக்குப் புதிதல்ல. எனினும் நாட்டிலும்வீட்டிலும் ஏட்டிலும் அரசியற் சூழ்ச்சிகள் மலிந்து வருவதினுல் எல்லோரும் சுழியோடப் பழகுவதற்குக் குளங்கள் மலிவது நன்றே.

### விசுக்கோத்து மன்னன்!

அந்தக்காலத்தில் யாழ்ப்பாணத்திலே பேதுருப்பிள்ளையின் மடத்து விசுக்கோத்துக்கு நல்ல மானம். வருத்தக்காரருக்கு அதுதான் சொல்லிவைத்த பண்டம். இப்போது மடத்து விசுக்கோத்து பட்டர் றஸ்க்காக உருவிலும் பெயரிலும் மாறிவிட்டது. இருந்தாலும் நாட்டிலே இன்றுந்தான் விசுக்கோத்துகளுக்குப் பஞ்சமில்லை. இவர்களின் கொட்டத்தை மட்டம்தட்டுவது போல் அடுத்தவாரம் ஈழத்துக்கு வருகின்ருர் விசுக்கோத்து மன்னர் அலன் கார். இவர் பிரிட்டனிலுள்ள ஒரு விசுக்கோத்துக் கம்பெனியின் அதிபர். விசுக்கோத்து மன்னரே வாரும். எங்கள் சர்க்கரைப் பொங்கலைச் சாப்பிட்டுப்பாரும்!

ஒரு ரூபாவுக்கு மிகுதியான மைல்கள்




BRIDGESTONE TIRES

பிரிட்ஜ்ஸ்டோன் டயர்கள்

Distributors:

Tuckers Autodrome

ஏகவினியோகஸ்தர்கள்:

ஓட்டோஸ் லிமிடெட்

யாழ்ப்பாணம்.

போன்: 496 தந்தி: "ஓட்டோஸ்"

## 17. தொழிலுக்குத் தொழில்




திரும்பிப் பார்த்தபோது இராமன் மிகுந்த பிரயாசையோடு தன் சைக்கிளை மணலிற் தள்ளிக்கொண்டு வந்தான். அந்தச் சைக்கிள் எவ்வளவு பாரம். பின்னுற் பாரம் ஏற்றுவதற்கென்றே, அவன் கொல்லனிடம் சொல்லிப் பலமான இரும்புக் ‘கரியர்’ அடிப்பித்துப் பின்னுற் பூட்டியிருக்கிறுன். பென்னம் பெரிய துணிமூட்டை அதில் எப்போதைக்குமே இருக்கும். இப்போதும் இருந்தது.

அவனுக்கு அவனுடைய தாய் தந்தையர் இராமலிங்கம், என்றே, இராமுப்பிள்ளை என்றே நீளமான பெயர் வைத்திருக்கலாம். ஆனல் கட்டாடி எல்லாருடைய அழுக்குத் துணிகளையும் வெளுப்பவன். சுருட்டுக்காரச் செல்லையா அண்ணனைக் கேட்டால் ‘எளிய சாதிப் பயல்’ என்று அருவருப்போடு சொல்வார். அப்படிப் பட்டவன் இராமுப்பிள்ளை, இராமலிங்கமாகவோ இருக்கமுடியுமா? வெறும் இராமனுகத்தான் இருந்தான்.

பெயர் குறுகி இருந்தாலும் ஆள் நல்ல வளர்த்தி. பனை மரம் மாதிரி உயரம். உயரத்திற்குத் தக்கதாக உடம்பும் இருந்தது.

உழைத்து உழைத்து வலுவேறிய கையும் கால்களும். மாநிறமான அவன் தேகத்திலே, கைப்புயங்களிலும், முன்னங்கைகளிலும் சதை திரண்டிருப்பது பார்க்க அழகாக இருக்கும். கெண்டைக் கால்களுக்கு மேலே முழங்கால் வரையும் முறுகறப்பட்டு நிற்கும் குதிரைச் சதைகளில், பச்சை நரம்புகள் முறுக்கேறி நிற்பது வெளிப்படையாகத் தெரியும்.

அவன் நல்ல உழைப்பாளியுங்கூட. கணக்குப் பார்த்தால் தர்மலிங்கம் வாத்தியார் அளவு சம்பளம் அவனும் எடுக்கிறுன். அந்தக் காலத்திலிருந்தே ஊரில் இருக்கும் உத்தியோகத்தர்களுக்கும் பெரிய மனிதர்களுக்கும் அவன்தான் வெளுக்கிறுன். அவனுடைய ‘வெள்ளை’ நன்றுக இருக்கிறதாம் என்று எல்லோருமே சொல்கிறுர்கள். அதனுல் தான் அவன் ‘கிறுக்குத்தனம்’ பண்ணினுலும் எவருமே அவனை விட்டுவிட விரும்பவில்லை!

அது மட்டுமா? அவனுடைய ‘சாதிக்’ குள்ளேயே இராமன் ஒரு தனிப்பிறவி. தன்னந் தனியே நாலுபேருக்கு வகை சொல்லக்கூடிய உடற் பலமும், நாலாயிரம் பேருக்கு வகை சொல்லக்கூடிய மனப்பலமும் அவனுக்குண்டு. இதனுல் அவன் எவருக்குமே தலை வணங்குவதில்லை. ஊரில் உள்ள சில்லரைச் ‘சண்டியன்கள்’ அவனிடம் வால் காட்டுவதில்லை. எவரிடமும் அவனுக்குப் பயம் கிடையாது.

பின்னர் எதற்காகப் பயப்பட வேண்டும்? அவன் நன்றுக உழைக்கிறுன். துப்பரவாக வெளுக்கிறுன். அவனுடைய தொழிலில் எவருமே அவனுக்கு உதவி செய்யவில்லை, அப்படியிருக்க ஏன் யாருக்கும் பயப்படவேண்டும்? சுருட்டுக்காரச் செல்லையா அண்ணன் நேருக்கு நேரே அவனை ‘எளியசாதிப் பயல்’ என்று திட்டினுல், நிச்சயமாக இராமன் அவரோடு சண்டைக்குப் போய் விடுவான்.

இப்படியாகவெல்லாம் இராமனைப்பற்றி எண்ணியபோது வேலாயுதத்துக்கு ஒரு உண்மை பளிச்சிட்டது. குட்டுகிறுர்களே என்று சதா குனிந்து கொண்டிருந்தால், உயர்ந்த சாதிக்காரர்கள் என்று சொல்லிக்கொள்வோர், இராமனைப் போன்றவர்களைச் சதா குட்டிக் கொண்டே இருப்பார்கள். ஆனல் இராமனைப் போன்றவர்கள் நிமிர்ந்து நிற்கத் தொடங்குவார்களானுல், அவர்கள் குட்டுவதையே விட்டு விடுவார்கள்!

அவர்கள் நிமிர்ந்து நிற்பதாக இருந்தால் எல்லோரும் இராமனைப்போல உழைக்க வேண்டும். அவனைப்போலத் தம் தம் காலில் நிற்கும் திராணிபெற வேண்டும். அப்படிப் பெற்றுவிட்டால் உயர்ந்த சாதி, எளிய சாதி என்ற வேற்றுமையே இல்லாமற் போய் விடும்.

இப்படியாகத் தனக்குட்டானே, ஓர் சித்தாந்தத்தை வேலாயுதம் உருவாக்கிக் கொண்டிருக்கையில், இராமன் வள்ளத்தண்டை வந்துவிட்டான். அருகில் வந்தபோது அவன் ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருப்பது வேலாயுதத்துக்குக் கேட்டது. வேலாயுதம் அந்தப் பாட்டை நன்றுகக் காது கொடுத்துக் கேட்டான். இராமன் பாடிக் கொண்டிருந்தான்.

“சேவித்தும் சென்றிரந்தும்
தெண்ணீர்க் கடல் கடந்தும்
பாவித்தும் பாராண்டும்
பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழினுடம்பை வயிற்றின்
கொடுமையால்
நாழியரிசிக்கே நாம்.”

இராமன் பாடசாலையிலே படித்திருக்கிறுனும். அவனுக்கு இப்படிப் பாட்டுக்கள் எவ்வளவோ தெரியும். இந்தத்துறையைக் கடந்து செல்லும்போது அவன் எத்தனையோ பாடல்களைப் பாடியிருக்கிறுன். சுயமாக இருப்பதைவிடச் சற்றுத் ‘தண்ணி போட்டு’ மயக்கமாக இருந்தால் ஒரே பாட்டாகத் தானிருக்கும்.

இன்றைக்கும் இராமனுக்கு வெறியாகவே இருக்கலாம். எப்படியிருந்தாலும், இன்றைக்கு அவன் பாடியபாட்டு வேலாயுதத்திற்கு மிகவும் பிடித்திருந்தது. ‘நாழியரிசிக்கே நாம்’ என்ற கடைசி அடிகளை வேலாயுதம் பலமுறை வாய் விட்டுச் சொல்லிக்கொண்டிருந்தான்.

ஆம். மனிதர்கள் ஓடுகிறுர்கள், ஆடுகிறுர்கள். வெள்ளாண்மை வெட்டவும், சுருட்டுவிற்கவும், காய்கறிகள் விற்கவும், தண்டு வலித்தும், மாடுசாய்த்தும் எங்கெங்கெல்லாமோ செல்கிறுர்கள். எல்லாரும் எதற்காகச் செல்கிறுர்கள்? வெய்யிலிலும் பனியிலும், மழையிலும் இருட்டிலும் ஏன் போகிறுர்கள்?

எல்லாருக்கும் ஒரே ஒரு இலக்கு, ஒரே ஒரு நோக்கம். இராமன் சொல்வதுபோல எல்லாரும் ‘நாழியரிசிக்கே நாம்’ தானே! கிணற்றைச்சுற்றி நடக்கும் கமலைமாடு போல, மனித வாழ்க்கையே சோற்றைச் சுற்றித்தான் ஓடுகிறது. அப்படியாகச் சோற்றைச் சுற்றியே ஓடுவதாற்தான் அதிலே வேதனையும், ஏன் சுவையும் இருக்கிறது!

வேலாயுதத்திற்குத் தான் எப்போதோ பார்த்திருந்த ஒரு படம் ஞாபகத்திற்கு வந்தது. மணிமேகலை என்ற அந்தப்படத்திலே பௌத்த சன்னியாசிப் பெண் ஒருத்தி வருகிறுள். அவள் கையிலே ஒரு பாத்திரம் இருக்கிறது. அந்தப் பாத்திரத்திலிருந்து அள்ள அள்ளச் சோறு குறைவில்லாமல் வந்து கொண்டேயிருக்கிறது. அந்தப் பெண், தன் பாத்திரத்தை வைத்துக்கொண்டே உலகம் முழுமைக்கும் சோறு கொடுக்கிறுள்.

இப்படி ஒரு பாத்திரம், இப்போது இருந்துவிட்டால் எப்படி இருக்கும் என்று வேலாயுதம் சிந்தித்துப் பார்த்தான்.

அப்படி ஒரு பாத்திரம், அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபி இருந்தால், எல்லாரும் பசிக்கும்பொழுது சென்று சாப்பிட்டுக் கொள்வார்கள். ஆனல் எவரும் விதைக்கவோ, வெட்டவோ மாட்டார்கள். மீன்பிடிக்கவோ தண்டுவலிக்கவோ மாட்டார்கள். மாடுசாய்க்கவோ, காய்கறி பயிரிடவோ மாட்டார்கள். உலகம் ஒரு சோம்பேறிகள் மடமாகப் போய்விடும். வாழ்க்கையில் உப்புச்சப்பிராது. சை. அதுவும் ஒரு வாழ்க்கையா?

வாழ்க்கையின் சுவைகெட்டுவிடும் என்றுதான், தெய்வம் இந்தக்காலத்தில் யாருக்கும் அமுதசுரபியைக் கொடுப்பதில்லை என்று வேலாயுதம் எண்ணிக் கொண்டிருக்கையில் இராமன் தன் மூட்டையை அவிழ்த்துச் சைக்கிளையும், மூட்டையையும் தனித்தனியாகத் தோணியிற் தூக்கிவைத்துக் கொண்டான்.

வேலாயுதம் தோணியைவிட ஆயத்தம் பண்ணியபோது மறுபடியும் சைக்கிள்மணி கேட்டது. திரும்பிப்பார்த்தால் வாஸ் அவசரஅவசரமாக வந்து கொண்டிருந்தான். இன்றைக்கு நேரகாலத்தோடு வேலை முடிந்துவிட்டது போலும். எனவே, சிறிது தரித்து, அவனும் வள்ளத்தில்ஏறியதும் வேலாயுதம் தோணியை விட்டான்.

வெய்யில் இப்போது வறுத்துக் கொட்டவில்லை. ஆனலும் வெதுவெதுப்பாகத்தான் இருந்தது. காற்று இலேசாக அசைந்து கொண்டிருக்கா விட்டால் இந்தச் சாயும்வெய்யிலையே தாங்கமுடியாது.

வள்ளம் கோரைப்புற்களின் ஓரமாகப் போய்க்கொண்டிருந்தது. வேலாயுதம் இராமனிடம் கேட்டான்: “என்னப்பா இந்தநேரத்திற் போகிறுய்? திரும்புகிறதா அல்லது மூதூரிலேயே இராத்தங்கலா?”

ஆம். சாதாரணமாக இராமன் வாரத்திற்கொருதடவை அதிகாலையிலேயே இந்தத் துறையைக் கடந்து செல்வான். மூதூருக்குச் சென்று வெளுத்த துணிகளைக் கொடுத்துவிட்டு மதியந் திரும்பும் பொழுது அவனும் திரும்பிவிடுவான். ஆனல் இன்றைக்குப் பொழுது சாய்ந்து அவன் புறப்பட்டதில் ஏதோ ஒரு விசேஷம் இருக்கத்தான் வேண்டும் என்று வேலாயுதம் நினைத்தான்.

அவன் நினைத்தது சரியாகவே போய்விட்டது. ஏனென்றுல் இராமன் சொன்னுன், “நாளைக்கு மூதூரிலே ஒரு கல்யாணம். வெள்ளை கட்டப் போகிறேன்”.

கல்யாணம் என்றதும் வேலாயுதத்திற்கு தன் மகளின் ஞாபகம் வந்தது. எத்தனை நாட்களுக்குத்தான் அவளையும் சும்மா வைத்துக் கொண்டிருப்பது? என்றுலும், சீதனந்தான் இல்லாவிட்டாலும் கல்யாணச் செலவுக்காவது காசு வேண்டாமா? வெள்ளை கட்ட வேண்டாம். ஓமம் வளர்க்க வேண்டாம். நட்டு முட்டும் நாதஸ்வரமும் வேண்டாம். ஆனலும் வேறே செலவுகள் இல்லையா? கல்யாணம் முடிந்ததும் மகளும் மருமகனும் ஒரு மாதமாவது வீட்டிலே சும்மா இருந்து, கவலையின்றிச் சாப்பிட வேண்டாமா?

கோடை பிறக்கட்டும், அப்போது நீர்கொழும்பு மீன்பிடிக்காரர்கள் வந்துவிடுவார்கள். வலையடியிலிருந்து மீன் வாங்கிக்கொண்டு, ஒருநாளைக்குப் பத்துப் பதினைந்து வியாபாரிகளாவது துறையைக் கடந்து செல்வார்கள். கையிலே நாலு காசு புரளத் தொடங்கி விடும்.

இதற்குள் அத்தானும் கோடை வெள்ளாண்மை வெட்டிவிடுவார். ஆவணி மாதத்தில் எப்படியும் கல்யாணத்தை நடத்திவிடலாம் என்று வேலாயுதம் எண்ணினுன்.

இப்படி எண்ணிக்கொண்டே ‘யாருக்குக் கல்யாணம்?’ என்று கேட்டான் வேலாயுதம்.

இராமனுக்கு, வேலாயுதத்தின் கேள்வி காதில் ஏறவில்லை. முன் அணியத்திலே அவன் தன்னை மறந்த லயத்தில், ஞானியைப்போல இருந்தான். அவனுக்கு வெறி!

அவனிடம் பேசிப் பிரயோசனம் இல்லை என்று வேலாயுதம் எண்ணிக்கொண்டிருக்கையில் வாஸ் சொன்னுன்: “முருகுப்பிள்ளை மாத்தயாவுட மகள். அவளுக்குத்தான் கல்யாணம்”

வேலாயுதம், பணக்கார வீட்டுக் கல்யாணங்களை நினைத்

[5 ஆம் பக்கம் பார்க்க]

‘ஹென்ற்லி’
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்ற்லி

★ சேட்
★ ஷோட்ஸ்
★ காற்சட்டை

ஹென்ற்லி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்ற்லி (காமென்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.

# பண்டிதமணியின் குடுமி!

அல்வாய் 'அநுசுயா'

பழைய இலக்கியங்களிலே சொல்லப்படும் அன்னம், யாளி, அசுணம் முதலிய உயிரினங்கள் சில இக்காலத்திலே இல்லாத பொருள்களாகவே கருதப்படுகின்றன. இன்னும் சில ஆண்டுகள் சென்றுவிட்டால், ஆண்கள் குடுமியும் இல்லாத பொருளாக மாறிவிடும் நிலையிலேயே ஆண் குடுமி வைக்கும் வழக்கம் மிக வேகமாகச் சுருங்கி வருகிறது. இவ்வாறு காலகதி அடைந்து வரும் குடுமி—எமது பண்டிதமணியைப் பெருமைப் படுத்துகின்றதா? என்ற 'ஐயப்பாடு சிலரிடம் எழுந்திருக்கக்கூடும்.

ஓய்வு பெற்ற பின்பு, ஓய்வு இல்லாமலே இலங்கையின் பல பாகங்களில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டங்களிற் கலந்து கொண்டார் பண்டிதமணி. இக்கூட்டங்கள் ஒன்றிலேனும் நான் பேசவேண்டுமென்ற ஆசை கைகூடவில்லை. ஆதலால் ஈழநாடு ஈன்ற சைவத் தமிழ்ப் பண்டிதமணி திரு. சி. க. அவர்களைப் பற்றிய என் கருத்தினை, ஈழநாடு வாயிலாக வெளியிடலாம் எனத் துணிந்தேன்.

நான் கலந்து கொள்ளாத கூட்டங்களிற் பேசப்பட்ட கருத்துக்களைப் பத்திரிகைகளிற் படித்தறிந்தேன். சில குறிப்பிட்ட கருத்துக்களையே பலரும் பல விழாக்களில் வெளியிட்டனர். சில கூட்டங்களில் "கூறியது கூறல்" மலிந்து காணப்பட்டது. இதனால், சபையிலுள்ளோர் அலுப்படைந்த சந்தர்ப்பமும் உண்டு.

பாராட்டு உரை நிகழ்த்தியவர்கள் எவர்களேனும் அவர்தம் குடுமியைப்பற்றி யாதும் பேசவில்லை என்ற நம்பிக்கைதான், இதனை எழுதத் தூண்டுவதாயிற்று. இற்றைக்கு 25, 30 ஆண்டுகளின் முன்பு யாழ்ப்பாணம் "பஸ்" நிலையத்திலே பண்டிதமணி கதருடையுடன் நின்றுகொண்டிருந்தார். இல்லை! நிற்பாராயினர். அப்போது சில கன்னிப் பெண்களிடம் பின்வரும் உரையாடல் நடைபெற்றது:—

"அங்கே நிற்பவர் யார் தெரியுமா......?"

"ஆரோ இந்தியச் செட்டியாராக இருக்கலாம்......"

"இல்லை, இவர் யாழ்ப்பாணத்தவர்......"

"அப்படியானால், சிங்கள நாட்டிலே வியாபாரஞ் செய்யும் பெரிய வர்த்தகராயிருக்கலாம்......"

"அதுவுமில்லை, இவர் ஓர் உபாத்தியாயர்!பண்டிதர்......"

"உனக்கு எப்படித் தெரியும்......?"

"என்னுடைய அக்காளுக்கு, இவரை விவாகம் பேசினபோது, இவர் "குடுமிக்காரன்" என்று அறிந்து அக்காள் மறுத்துவிட்டாள்!"

இப்படி எத்தனை "நாகரிகப்" பெண்மணிகள் வெறுத்துவிட்டிருப்பார்களோ, அத்தனை பேருக்கும் தமிழ்த் தாயின் பெருநன்றி உரியது. பண்டிதமணியின் மனத்திண்மைக்கு, குடுமியும் சிறிது உதவியது போலும். பெண்வீட்டாரின் நெருக்குதலினாலே மணம் முடித்த சில பெரியோர்களும் உள்ளார்களல்லவா? நமது ஞானசம்பந்தமூர்த்தி நாயனாருக்கும் இப்படி ஒரு திருமணம் நடந்தது தானே! எனவே, பண்டிதமணியின் சிறந்த சைவத்தமிழ் ஒழுக்கத்துக்குத் துணை செய்த குடுமியையும் வியந்து பாராட்ட வேண்டியதே. இது பேச்சாளர் கடமையாகும்.

ஈழத் திருநாட்டிலே பண்டிதர், வித்துவான், சைவப்புலவர் என்னும் பட்டங்கள் பெற்றவர் பலர் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களெல்லாம் குடுமி சிதைத்து "மொட்டையர்களாய்" இருப்பதினாற்றான், பண்டிதமணியைப் போல், அறிவும், ஆசாரமும் அடையமுடியவில்லை என்று நான் எண்ணுவதுண்டு.

"கேரா" வைத்திருக்கும் மங்கையர்களும், "சாரம்" உடுக்கும் தமிழறிஞர்களும், மலிந்து வரும் இக்காலத்திலே, பண்டிதரின் குடுமி நிலைத்திருப்பது ஆச்சரியந் தானே! மேலும், சைவ சமயத்திலே, மெய்கண்டார் முதல், உமாபதி சிவம் ஈறான சந்தான குரவர் நால்வர் போற்றப்படுகின்றனர். இவர்கள் "திருக்கைலாச பரம்பரைச் சந்தானம்" எனப்படுவர்.

யாழ்ப்பாணத்திலும் நாவலர் சந்தானம் ஒன்று தோன்ற வேண்டுமன்றோ. முதற் குரவர் நாவலர். இரண்டாமவர் பண்டிதமணியே. புகழ் பெற்ற "இரண்டு மனுஷர்களா" கிய, குமாரசுவாமிப்புலவர், கைலாசபிள்ளை முதலியவர்கள் கல்வியறிவு ஒழுக்கங்களில் மேம்பட்டவர்களாயினும், நாவலர் ஐயாவைப்போல், பிரம்மச்சாரிகளாகவாழாமையால், சந்தான பரம்பரைக்கு உரியவர்கள் ஆகார். ஆகவே, பிரம்மச்சரிய விரதியாகிய சைவப் பெரியார் பண்டிதமணி அவர்களே, பலவகையாலும் "நாவலர் சந்தானத்தின்" இரண்டாம் குரவராவர்.

## இலங்கை சட்டக் கல்லூரி தமிழ்க் கழகச் செயற்குழு

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற இலங்கை சட்டக் கல்லூரி ஆண்டுவிழாவில் பின்வருவோர் புதிய உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. அ. ச. நடராசா.

உப தலைவர்: திரு. வெ. விஜயசுந்தரம்.

செயலாளர்: திரு. ஆ. தவநேசன்.

உப செயலாளர்: திரு. த. யோகநாதன்.

பொருளாளர்: ஜனாப் எம். ஐ. எம். அப்துல் மஜீத்.

பத்திராதிபர்: திரு. எஸ். சிறீதரன்.

## துறைக்காரன்

[4ஆம் பக்கத் தொடர்ச்சி]

துக்கொண்டான். இரவைப் பகலாக்கிக்கொண்டிருக்கும் மின் விளக்குகள், பெரிய பெரிய பந்தல்கள், தோரணங்கள் கட்டிய வளைவுகள், விருந்துச் சாப்பாடு, வெறியர்களின் அட்டகாசம், சண்டை......

இப்படியாக எண்ணமிட்டுக் கொண்டே, "கல்யாணம் நல்ல சிறப்பா நடக்கும்போல" என்று வாசைக் கேட்டான்.

ஆனால் அதற்குட் தட்டுத் தடுமாறி எழுந்து, ஞானங் கலைந்துவிட்ட நிலையில் இராமன் சொன்னான்: "சிறப்போ சிறப்பில்லையோ, நமக்கென்ன? எது எப்படிப் போனாலும் எனக்கு வேண்டியது கூலி. நூறு ரூபாயில் ஒரு செம்புச் சல்லி குறைந்தாலும் நான் வாங்கமாட்டேன்."

நூறுரூபாய்! நினைத்தாலே வேலாயுதத்துக்குத் திகிலாயிருந்தது. எத்தனையோ பேர் நூறு ரூபாய் இல்லாமற் தம் பிள்ளைகட்குக் கல்யாணம் செய்துகொள்ள முடியாமலிருக்கிறார்கள். ஆனால், இங்கே வெள்ளை கட்ட மட்டும் நூறு ரூபாய்!

அவன் யோசிப்பதைக் கண்ட இராமன் சொன்னான். "நூறு ரூபா வேணுமா? ஏழெட்டுப் பேருக்கு நாலு நாளைக்கு முழுசா வேலையிருக்கு. ஒரு நாளைக்கு ஒருவனுக்கு நாலு ரூபாக் காசில்லாட்டி ஏன் இந்தத் தொழிலை".

அவன் பேச்சை வாஸ் ஆமோதித்து "கல்யாண வீட்டிலே வாறவனும் போறவனும் தேவையில்லாமல் குடிப்பான். அதிலே செலவழிக்கிற காசை நம்மைப்போல தொழிலாளிக்குக் கொடுத்துவிட்டால் என்ன. நூறுரூபா இல்ல நீ நூற்றைம்பது ரூபா வாங்கு" என்று இராமனைத் தட்டிக் கொடுத்தான்.

வாசுக்கு எப்போதும் நல்ல மனந்தான். எப்போது பேசினாலும் எதைப் பேசினாலும் தொழிலாளி, தொழிலாளி என்றுதான் அடித்துப் பேசுவான். தொழிலாளிக்குச் சம்பளம் கூட்டவேண்டும் என்பதுதான் அவன் பேச்சின் முடிவாயிருக்கும். உலகத்தின் எல்லாத் தொழிலாளரிடத்துமே அவனுக்கு அன்பு. அவன் நினைத்தால் . இப்படிப் பேசிப் பேசியே எந்தச் சலவைத் தொழிலாளியையும் முருகுப்பிள்ளையின் கல்யாண வீட்டிற்கு வெள்ளை கட்டாமல் வேலைநிறுத்தம் பண்ணச் செய்துவிடுவான்!

ஆனால் இன்றைக்கு இராமனிடம் அவன் அப்படிச் சொல்லவில்லை. ஆனாலும் நூற்றைம்பது ரூபாய் தராவிட்டால் வேலைநிறுத்தம்பண்ணச் சொல்வானோ என்று எண்ணமிடுகையில், தோணி இக்கரையை அடைந்துவிட்டது.

—தொடரும்




## பூஜ்யம் தபால்

எண்ணூற்றுத் தொண்ணூற்றெண்பர்
பார்லிமெண்ட் தேர்தல்
அபேட்சகர்கள்,
இலங்கை.

தலைவர்களே!

உங்கள் எல்லோருக்கும் எனது நன்றியும் வாழ்த்துக்களும்.

நன்றி ஏன் தெரியுமா? பார்லிமெண்ட் ஸ்தானங்களை 101 லிருந்து 151 க்கு உயர்த்தியதால் எங்களுக்குச் சேவை செய்ய இம்முறை போதிய ஆட்கள் கிடைப்பார்களோ? அரசியல் நடக்குமோ? என்று சந்தேகப்பட்டேன்.

ஆனால் நீங்கள் இவ்வளவு பேர் உங்களது பொன்னான நேரத்தை எங்களுக்காகத்தியாகம் செய்யத் தயாராக முன் வந்ததைப் பார்த்ததும், இலங்கையின் எதிர்காலத்தைப் பற்றி எனக்குச் சிறிதும் கவலையில்லை.

இதற்குப்பதிலாக, உங்களில் யாரைத் தெரிவு செய்வது, யாரை விடுவது என்பது தெரியாமல் எங்களில் பலருக்கும் திகைப்பாக உள்ளது.

உங்களில் பலர் எங்களுக்குப் புதிது. கறுப்பா சிவப்பா என்பதும் தெரியாது. உங்களில் யார் சிறந்தவர் என்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆகையால், ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு பொது இடத்தில், அங்கு போட்டியிடும் அபேட்சகர் எல்லாரும் கூடி, எங்களுக்கு ஏககாலத்தில் காட்சி அளிப்பதுடன், எங்களது சந்தேகங்களையும் தீர்ப்பது நல்லது.

முற்காலத்தில் சுயவரம் நடப்பதுண்டு. கேள்விப்பட்டிருக்கலாம். ஒரு பெண்ணை மணக்க விரும்புவரெல்லாம் சேர்ந்து ஓர் இடத்தில் கூடுவர். பெண் எல்லாரையும் கண்டு, தனக்குப் பிடித்த நாயகனுக்கு மாலையிடுவாள்.

அதேபோல அபேட்சகராகிய நீங்கள் அந்தத்தத் தொகுதிகளில் ஓர் இடத்தில் சேர்ந்து காட்சிஅளித்தால் நாங்கள் எங்களுக்குப் பிடித்தமானவருக்கு "மாலையிட" உதவியாகஇருக்குமல்லவா?

ஒரு சின்ன விஷயம். நரி இடம் போனால் நல்லதா, வலம் போனால் நல்லதா? என்று கேட்டதற்கு, அது மேலே விழுந்து பிடுங்காமல் இருந்தால் போதும் என்று ஒருவர் கூறியதாகக் கதையுண்டு.

நீங்கள் இடது சாரியாயினும் சரி, வலது சாரியாயினும் சரி, தேர்தல் போட்டிகளில் கலாட்டாக்கள் எதுவும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுகிறேன். தேர்தலுக்குப் பிறகும் எங்களுக்கெல்லாம் நன்மை ஏற்படாவிடினும், எங்கள் மண்டை மீண்டும் உடைபடாமல் பார்த்துக் கொள்ளும்படியும் தயவாக வேண்டுகிறேன்.

தேர்தல் என்றாலே எங்களுக்கெல்லாம் திகிலாக இருக்கிறது. தென்னாலிராமனின் பால் வேண்டாப் பூனையைப்போல்.

இப்படிக்கு
**பூஜ்யம்**

**குறிப்பு:**
உங்களில் 151 பேருக்கு பார்லிமெண்டில் கட்டாயம் இடம் கிடைக்கும். மற்ற 747 பேர்களைப் பற்றித்தான் எனக்குக் கவலை.

கீதையிலே பகவான் ஒரு யோசனையைக் கூறியுள்ளார்! "பலனைப்பற்றிகவலைப்படாமல், ஒவ்வொருவரும் தங்கள் கடமையைச் செய்யவேண்டும்" என்று. ஆகவே வெற்றி தோல்வியைப்பற்றி எண்ணமல், முன் வைத்த காலைப் பின் வைக்காமல், தேர்தல் போராட்டத்தில் ஈடுபடுங்கள். இந்தத் தேர்தலில் வெற்றி பெற முடியாவிடினும், அடுத்து எவ்வளவோ தேர்தல்கள் உள்ளன. அதை எண்ணியாவது இன்று முதல் சமூகப்பணியிலே ஈடுபடுங்கள், பயன் இல்லாமற் போகாது.

**பூஜ்யம்**

# அழகுக் கோலம் போடுவோம்


— எம். எஸ். எஸ். ஐயர் —

அதிகாலையில் துயில் நீங்கியதும், மாதர் தமது வீட்டுவாசலைப் பெருக்கி, நீர்தெளித்து, நல்லகோலம்போட்டு, லட்சுமீகரம் செய்வர். வீதியிலே சுவாமி வருகிறது என்றால், தெருவெங்கும் கோலமாயிருக்கும். தேர் திருவிழாநாட்களிலும் அப்படித்தான். வீட்டு வாசலைக் கோலத்தினால், கண் குளிர, கருத்துக்குளிரச் செய்தல் மாதரின் மரபு!

கோலம் போடுகையில் நேர்க்கோடு இழுத்தாலும்சரி, வட்டம் வரைந்தாலும்சரி, அளவு கோல் கொண்டு அமைத்தது போலவே தோன்றும். கலாசாலைகளிலே படிக்கும் மாணவர் தம்மிடமுள்ள கருவிகொண்டு அத்தகைய நேர்க்கோடும் வட்டமும் அமைத்தல் மிக அரிதாகும். அந்த அரியதிறன் எங்ஙனம் அமைந்தது? சித்திரமும் கைப்பழக்கம் என்பர் பெரியோர்.

### உருவும் வடிவும்

நல்ல சித்திரக்காரனும் சரி, ஓவியம் வரைவோனும் சரி, அக



கோலங்கண்டு குதூகலிக்க, உற்று உற்றுப்பார்த்துஉள்ளம் கிளர்க்க நேரிடும். கோலங்களில் உருவும் வடிவும் ஒன்றா, இரண்டா? எண்ணிறந்தனவாம். இதன் உண்மையை உணரவிரும்புவோர், போகிப் பண்டிகையன்று பொங்கல் தினத்தன்று வீதி வாயில்களின் கோலங்களைப் பார்க்கவேண்டும்.

படிக்கட்டு அமைந்த தடாகமும் நடுவிலே நீரும், நீரின் ஊடே தாமரை முளைகளும் தோன்றும்படி ஒரு கோலம் இருக்கும். நான்குகால், எட்டுக்கால், பதினாறுகால் கொண்ட மண்டபமும், மண்டபத்தின் உச்சியிலே கோபுரமும் விளங்கும் வண்ணம் ஒரு கோலம் காட்சியளிக்கும். யானை, பசு, கிளி போன்ற கோலங்களும் பார்ப்போரின் உள்ளத்தை அள்ளும்.

### வழிவழிவந்த பண்பு

கோலம் போடுகையில், பெண்குழந்தைகளின் சித்தம் ஆண்டவன்பால் குவிந்துகிடக்கும். அப்பயிற்சியும் உணர்ச்சியும் எங்ஙனம் படிந்தன? பள்ளிக்கூடத்தில் பயின்ற? அன்று. வழிவழியாகத் தாயிடமிருந்து மகளிடம் அமைந்த பண்பாகும். அன்றியும் கண் கண்டது கை செய்யும் என்பது பழமொழி. தாய் கோலம் வரைகையிலே மகள் கூர்ந்து கவனிப்பாள். உடனே 'அம்மா! நான் போடுகின்றேன்' என்பாள்.

ஈசுவர பக்தியும், கலைப் பயிற்சியும் குழந்தைப் பருவத்திலேயே கோலத்தின்மூலம் குழந்தைகளிடம் படிந்துவருகின்றன. தக்க வயது வரும் பொழுது இக் குழந்தையர் நல்ல தாயாராய், பண்புமிகுந்த பாரியராய் விளங்குவர் என்பதில் என்ன தடை? ஆதலினால் தான், 'இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றுமில்லை' என்றாள் ஔவை.

### எல்லாம் பரிமளிக்கும்

அழகாய் அற்புதமான கோலம் வரையும் பெண்ணானவள் வீட்டு வேலைகளையும் செவ்வனே நடத்துவாள்; சிறக்கவும் நடத்துவாள். எல்லாம் பரிமளிக்கப் பார்ப்பாள். அத்தகைய பெண்ணுள்ள வீட்டில் இலட்சுமிதேவி எப்போதும் வாசம் செய்வாள். வீட்டின் வெளியிலும் உள்ளும் போடுவதற்கு அரிசி மாவையே கையாளுவார்கள். ஏன்? வீடேறிவரும் எறும்பினையும் விருந்தென மதித்து, உணவு ஊட்டுவதின் உட்கருத்தை உன்னிப் பாருங்கள். அரிசி மாவினால் கோலம் போடாமல் கூழாங்கல்லை உடைத்தும் பொடியாக்கிய மாவினால் கோலம் போடுவதாயின் காந்தள் மலரினும் மெல்லிய கை விரல்கள் கன்றிவிடும்.

மாதரும் மகளிரும் கட்டும் சேலைகளிலே, தாவணிகளிலே, பாவாடைகளிலே ஓரத்தில் கரையிருக்கும். கரையிலே விதம்விதமான பூ வேலை பொருந்தியிருக்கும். எதற்காக? அழகின் வடிவான மாதர் அழகுக் கலையிற் படிந்த மாதர், தமது ஆடையிலே அழகை விரும்புதல் இயற்கை அல்லவா?

### புராதன வழக்கம்

சுபமான எக்காரியம் வீட்டில் நடப்பதாயினும், வீட்டிலே தரையினைக் கோலம் போட்டு அலங்கரித்தல் வழக்கம். அரிசி மாவை நீரில் கரைத்து, இரண்டு மூன்று நாள் அழியாதிருக்கும் வகையில் கோலம் வரைதலும் உண்டு.

தோரணங் கட்டி வீட்டின் முகப்பை அலங்கரித்தால் வீட்டு முகப்பின் தரையைக் கோலத்தால் அலங்கரித்தல் கடமை. பொங்கல் புது நாளன்று வாசலளவே கோலம் வரைதல் புராதனமான வழக்கம். கோலத்தின் நான்கு ஓரங்களிலும் செம்மண் கோடு இழுத்து அழகுக்கு அழகு செய்வர்.

### அழகுணர்ச்சி தளர்தல்

பல்லாண்டு பல்லாண்டாகப் பரிமளித்து வந்த அழகுக் கலையாண கோலம் வரைதல் வர வர மங்கி வருகின்றது. இதனால் தெய்வ பக்தி குன்றுகிறது. கைத்திறன் மறைகிறது. அழகுணர்ச்சியும் தளர்கிறது. சரீவரக்கோலம் வரையாவிடின், 'என்ன அவசர கோலம் இது?' என்பர். அரைகுறையாக ஒரு காரியஞ் செய்தால், 'அவசரக் கோலம் அள்ளித்தெளித்திருக்கின்றான்' என்பர்.

கலாசாலையிலே ஓவியமும் சித்திரமும் வரையப் பயிற்சி கொடுப்பர். அதற்கு முன்னதாக வீடு என்னும் கலாசாலையிலே, அன்னையார் என்னும் ஆசிரியர் தம் மகளிர்க்கு இளவயதிலேயே ஓவியம், கோலம் போடக் கற்றுக் கொடுத்தல், நமது பண்டைய மரபு. அக்கோல வரிசை செழித்தோங்குக! பொங்கல் அழகுக் கோலம் பொங்குக!

# வடக்கு மாகாணத் தேர்தல் தொகுதிகளும், அபேட்சகர்களும், கட்சிகளும் சின்னங்களும்

### ஊர்காவற்றுறை (74)

வி. ஏ. கந்தையா, முன்னாள் எம். பி., தமிழரசு, வீடு. அல்பிரட் வி. தம்பியையா, சுயேச்சை, —. வி. வி. நல்லதம்பி, சமசமாஜி, சாவி.

### வட்டுக்கோட்டை (75)

ஏ. அமிர்தலிங்கம், முன்னாள் எம். பி. தமிழரசு, வீடு. ஏ. வைத்திலிங்கம், கொம்யூனிஸ்ட், நட்சத்திரம். முதலியார் பி எம். சங்கரப்பிள்ளை, தமிழ் காங்கிரஸ், சைக்கிள். எஸ். சுந்தரசிவம், சமசமாஜி, சாவி. சி. எஸ். இரத்தினசபாபதி, சுயேச்சை, —.

### காங்கேசன்துறை (76)

எஸ். ஜே. வி. செல்வநாயகம், முன்னாள் எம். பி. தமிழரசு, வீடு. ஆர். என். சிவப்பிரகாசம், தமிழ் காங்கிரஸ், சைக்கிள். வி. காரளசிங்கம், சமசமாஜி, சாவி.

### உடுவில் (77)

புதுத் தொகுதி

வி. தர்மலிங்கம், தமிழரசு, வீடு பி. நாலிங்கம், சமசமாஜி, சாவி. வி. பொன்னம்பலம், கொம்யூனிஸ்ட், நட்சத்திரம். எஸ். எச். பேரின்பநாயகம். சுயேச்சை, —. வி. வீரசிங்கம், சுயேச்சை, —. ஜே. டி. ஆசீர்வாதம், சுயேச்சை, —. என், சிவனேசன், சுயேச்சை, —.

### யாழ்ப்பாணம் (78)

ஜீ. ஜீ. பொன்னம்பலம், முன்னாள் எம். பி. தமிழ் காங்கிரஸ், சைக்கிள். எஸ். கதிரவேற்பிள்ளை, தமிழரசு, வீடு, ஏ. விஸ்வநாதன், சமசமாஜி, சாவிஅல்பிரட் த. துரையப்பா, சுயேச்சை, —.

### நல்லூர் (79)

புதுத் தொகுதி

டக்டர் ஈ. எம். வி. நாகநாதன், தமிழரசு, வீடு. ஏ. துரைராஜசிங்கம், சமசமாஜி, சாவி. எம். கார்த்திகேசன், கொம்யூனிஸ்ட், நட்சத்திரம். சி. அருளம்பலம். தமிழ் காங்கிரஸ், சைக்கிள். ஆர். சி. மன்மதராயன், சுயேச்சை, —.

### கோப்பாய் (80)

எம். பாலசுந்தரம், தமிழரசு, வீடு. எஸ். பி. நடராஜா, கொம்யூனிஸ்ட். நட்சத்திரம், கே. வி. எஸ். சண்முகநாதன், சமசமாஜி, சாவி. ரி.குணரத்தினம், தமிழ் காங்கிரஸ், சைக்கிள். எஸ். சிவசுப்பிரமணியம், சுயேச்சை, —, எஸ். கே. நல்லதம்பி, சுயேச்சை, ....

### உடுப்பிட்டி (81)

புதுத் தொகுதி

கே. ஜெயக்கொடி, தமிழரசு, வீடு. ஆர். ஆர். தர்மரத்தினம், சமசமாஜி, சாவி. எம். சிவசிதம்பரம், தமிழ் காங்கிரஸ், சைக்கிள். பி. கந்தையா, கொம்யூனிஸ்ட், நட்சத்திரம்.

### பருத்தித்துறை (82)

கே. துரைரத்தினம், தமிழரசு, வீடு. ரி. ஜெயதேவன், சமசமாஜி, சாவி. கே. சேனாதிராஜா, கொம்யூனிஸ்ட், நட்சத்திரம். என். நடராஜா, தமிழ் காங்கிரஸ், சைக்கிள். கே. சிவக்கொழுந்து, சுயேச்சை, —, எஸ். சுந்தரலிங்கம், சுயேச்சை, —.

### சாவகச்சேரி (83)

வி. என். நவரத்தினம், முன்னாள் எம். பி. தமிழரசு வீடு. வி. குமாரசுவாமி, தமிழ் காங்கிரஸ்., சைக்கிள். ஏ. எஸ். கனகரத்தினம், சமசமாஜி, சாவி,

### கிளிநொச்சி (84)

புதுத் தொகுதி

ஏ. சிவசுந்தரம், தமிழரசு., வீடு. வி. ஆனந்தசங்கரி, சமசமாஜி., சாவி. அன்ரன் பொன்னம்பலம், சுயேச்சை., —. எஸ். சரவணமுத்து, சுயேச்சை., —. பி. ஆறுமுகம், சுயேச்சை,, —.

### மன்னார் (85)

வி. ஏ. அழகக்கோன், தமிழரசு., வீடு. ஏ. சி. நூர் முகமது, சுயேச்சை., —. எம். ஷாஹுல் ஹமீது, சுயேச்சை., —. ஜோன் மார்க், சுயேச்சை., —.

### வவனியா (86)

சி. சுந்தரலிங்கம், ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி., கப்பல். எஸ். சுப்பிரமணியம், தமிழரசு., வீடு. பி. முத்தையா. வன்னிநாட்டுவிவசாயிகள் முன்னணி., —. ரி. சிவசிதம்பரம், சுயேச்சை., —.

—தொடரும்

# புதிய தேர்தல் ஒழுங்கு விதிகள்
## சுவரொட்டிகள், வாகனங்களுக்குத் தடை
## தபால் மூலம் வாக்களித்தல்

— வ. மகாதேவன் —

151 அங்கத்தவர்களை இலங்கைப் பார்லிமெண்டுக்குத் தெரிவு செய்வதற்காக 19-3-1960இல் 145 தொகுதிகளில் தேர்தல்கள் ஒரே நாளில் நடைபெறும்போது பல புதிய தேர்தல் ஒழுங்கு விதிகள் நடைமுறையிலிருக்கும். இப் புதிய விதிகளை 1959இல் நிறைவேற்றப்பட்ட 11ஆம் 26ஆம் இலக்க இலங்கைப் பார்லிமெண்ட் தேர்தல் திருத்தச் சட்டங்களில் காணலாம். தேர்தல் காலங்களில் ஏற்படக்கூடிய ஒழுங்கீனங்களையும் வீண் கலவரங்களையும் தடைசெய்வதே புதிய தேர்தல் விதிகளின் பிரதான நோக்கமாகும்.

### கட்டுத்தொகை

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் செலுத்தவேண்டிய கட்டுத்தொகை ரூபாய் 1000. ஒரு தேர்தல் தொகுதியில் அளிக்கப்படும் மொத்த வாக்குகளில் எட்டிலொன்றுக்குக் குறைவாக ஓர் அபேட்சகருக்குக் கிடைத்தால் அவரது கட்டுப் பணம் திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது. தேர்தல் அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் அபேட்சகர்கள் ரூபாய் 500 கட்டுப்பணமாகச் செலுத்தலாம் எனத் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

### விளம்பரங்களுக்குத் தடை

அச்சகத்தின் பெயர், விலசம், வெளியிடுபவரின் பெயர் விலாசம் முதலியன இன்றி வெளிவரும் பிரசுரங்கள், விளம்பரங்கள்முதலியவற்றிற்குக் கடந்த தேர்தல் வரை தடை விதிக்கப்பட்டிருந்தது. குற்றம் புரிபவர்களுக்கு 500 ரூபாய்க்கு மேலதிகமாகாத அபராதம் என்றும் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. பொது இடங்கள், பொது வாகனங்கள், வீதிகள், அரசாங்கத்திற்கோ, தலதாபன சபைகளுக்கோ சொந்தமான இடங்களில் சுவரொட்டிகளையோ, விளம்பரங்களையோ, சின்னங்களையோ, கொடிகளையோ, சுற்றறிக்கைகளையோ விநியோகம் செய்வதை அல்லது ஒட்டுவதை அல்லது தொங்கவிடுவதைப் புதிய தேர்தல் விதிகள் தடைசெய்கின்றன. ஆனால், தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெறும் இடங்களில் அல்லது அபேட்சகர் அல்லது அபேட்சகரின் 'ஏஜண்டு' தேர்தல் தினத்தன்று உபயோகிக்கும் வாகனங்களில் இவற்றை அல்லது தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான இடங்களில் இவற்றை விளம்பரப்படுத்த அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இவற்றை மீறி நடப்பவர்களுக்கு ஒரு பொலிஸ் நீதிமன்ற நீதிபதி 100 ரூபாய் அபராதமோ அல்லது ஒருமாதம் வரை சிறைத்தண்டனையோ அல்லது இரு தண்டனைகளையும் சேர்த்தோ விதிக்கலாம் என அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இவ் விதிகளை மீறி ஒட்டப்படும் விளம்பரங்கள், அறிக்கைகள் முதலியவற்றை அகற்றுவதற்குப் பொலிசாருக்கும் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

மத சம்பந்தமான வைபவங்களிலோ, கூட்டங்களிலோ தேர்தல் பிரசாரங்கள்செய்தல், தேர்தல் கூட்டங்கள் நடத்துதல் அல்லது நடத்துவதற்கு அனுமதி அளித்தல், தேர்தல் சின்னங்களையோ கொடிகளையோ பறக்கவிடுதல், விளம்பரங்கள் அறிக்கைகள் முதலியவற்றை அக் கூட்டங்களில் விநியோகித்தல் போன்றவை வன்மையாகத் தடைசெய்யப்பட்டிருக்கின்றன.

### வாகனங்களுக்குத்தடை


வாக்காளரை ஏற்றிச் செல்வதற்கு ஒருவாகனத்தையோ, கப்பலையோ, மிருகத்தையோ இரவல் கொடுத்தல், இரவல் பெறுதல் வாடகைக்குப் பெறுதல் முதலியன சட்டவிரோதமானவை எனப் புதிய தேர்தல் விதிகள் விதிக்கின்றன. ஒரு வாகனச்சொந்தக்காரர் தமது வீட்டில் வசிப்பவர்களை வாக்களிக்கும் நிலையத்திற்கு ஏற்றிச் செல்வது அல்லது வாக்காளர்கள் பொது வாகனங்களிலோ அல்லது கப்பல்களிலோ ஏறி வாக்களிக்கும் நிலையங்களுக்குச் செல்வது இவ்விதிகளுக்கு புறநடையானவை.

### தபால்மூலம் வாக்களித்தல்

பொதுத்தேர்தல் நடைபெறும் தினத்தில் வாக்களிக்கும் நிலையத்திற்கு வரமுடியாமல் வேறிடங்களில் தங்கியிருந்து கருமமாற்றிவரும், இலங்கை இராணுவம், கடற்படை, விமா

[15ஆம் பக்கம் பார்க்க]


நீங்கள் செய்ய விரும்பும் கணக்கற்ற தையல் வேலைகளை



நெக்கி

தையல் மெஷின் செய்துகொடுக்கும்


NECCHI

உலகத்திலேயே மிகச்சிறப்பு வாய்ந்த தையல் மெஷின். இலங்கையிலுள்ள வீடுகளிலெல்லாம் நெக்கிதான் இடம்பெற்று வருகிறது. ஏனெனில் நெக்கி மூலம் பெண்களின் கனவுகள் நனவாகின்றன.

உங்கள் பல்வேறு தையல்வேலைகளையும் மிகவும் இலகுவாகவும், திறமையுடனும் செய்து விடுகிறது நெக்கி தையல் மெஷின்.

சாதாரண தையல்மெஷினில் வேலை செய்வதனால் ஏற்படும் களைப்போ, சோர்வோ நெக்கி மெஷினை உபயோகிக்கும் பொழுது ஏற்படவே மாட்டாது.

நெக்கி சூப்பர்நோவா ஓட்டமெட்டிக்கா தையல் மெஷின், பலவித வர்ணப் பூவேலைகளையும், லேஸ் வேலைகளையும், பட்டன் துவாரங்களையும் எவ்வித கஷ்டமுமின்றி தைத்துக் கொடுக்கும் திறமை வாய்ந்தது.



நெக்கி நோரா, ஓட்டோமெட்டிக்கா ரூ.825-தொடக்கம்.

நெக்கி எஸ்பெரியா ரூ.375-தொடக்கம்.

நெக்கி மிரெல்லா (மின்சாரத் தாலும் கையினாலும் இயங்குவது) ரூ. 625 தொடக்கம்.

விற்பனையாளர்கள்:

தி நியூ சீத்தா ஸ்டோர்ஸ் (கம்பஹா)

கெந்தலா ஸ்டோர்ஸ் (கெந்தலா)

பி. ஏ. எஸ். ட்ரான்ஸ்போர்ட் லிமிடெட் (ஹோமகம)

தி பயனியர் ஸ்டோர்ஸ் (கண்டி)

5 வருஷ உத்தரவாதத்துடன் கட்டுப்பணத்திற்குக் கிடைக்கும்.

மெஷினின் பாகங்களை எம்மிடமே பெற்றுக் கொள்ளலாம்.

விபரங்களுக்கு.

றிச்சட் பீரீஸ் அன் கோ., லிமிடெட்

மெயின் வீதி, கொழும்பு. போன்: 4753


# தமிழர் தன்மானத்துடன் வாழ வழி தனிச் சுதந்திர நாடுதான்
## ஈழத் தமிழ் முன்னணிக் கட்சியின் பத்து அம்சத் திட்டம்

வவனியா முன்னாள் பார்லிமெண்ட் பிரதிநிதி திரு. செ. சுந்தரலிங்கத்தின் தலைமையில் இயங்கும் ஈழத் தமிழ் ஒற்றுமை முன்னணி, தனது கொள்கைகளையும், குறிக்கோள்களையும் விளக்கி, பத்து அம்ச அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது. அதன் சுருக்கம் வருமாறு:

1. ஈழம் ஒரு தனி சுதந்திர நாடாக்கப்பட்டு பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தில் ஓர் அங்கத்தவ நாடாக இருக்க வழிசெய்தல்.

**ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி, தனி நாடு பெற்றாலன்றித் தமிழர் பயமின்றி வாழவும், நீதியையும், நேர்மையையும் பெறவும் முடியாதெனத் தீர்க்கமாக எண்ணுகின்றது.** இலங்கையில் தமிழ் நாடும் சிங்கள நாடும் சமாதானமுடன் ஒன்றி வாழ முற்பட்டாலன்றி இலங்கையில் சமாதானம் நிலவ முடியாதெனவும் நம்புகின்றது.

2. ஈழத் தமிழர் இப்பொதுத் தேர்தலில் கீழ்க்கண்ட அரசியலமைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்யும்படி வேண்டப்படுவர்.

1. ஒரே இலங்கை: அதாவது சிங்கள அரசு.

2. சமஷ்டி அரசியல்: அதாவது சிங்கள-தமிழரசு.

3. ஒரு தனித் தமிழ் நாடு: அதாவது ஈழத் தனித் தமிழரசு.

சிங்களமக்கள் விரும்பினால் மட்டுமே சமஷ்டி அரசியல் ஏற்படமுடியும். ஆனால் இதுநாள் வரை, சிங்களவரின் தலைமையில் இயங்கும் எந்தக்கட்சியோ சிங்கள அரசியல் வாதியோ இத்தகைய அமைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. அது மட்டுமின்றி சமஷ்டி அரசியலமைப்பை முற்றும் எதிர்க்கின்றனர். இங்கு சமஷ்டி அரசியல் ஏற்படமுடியாது என்ற அடிப்படையிலே இம் முடிவிற்கு வந்துள்ளனர்.

ஈழத்தமிழ் ஒற்றுமை முன்னணி ஒரு தனி ஈழத் தமிழ்நாடு வேண்டும் என விரும்புகின்றது. இலங்கையின் சமாதானம் ஒழுங்கு, நல்ல அரசியல் ஆகியவற்றை நிலைபெறச்செய்ய இலங்கையின் பிரிவு தவிர்க்கமுடியாததாகின்றது. ஈழநாட்டிலே தமிழும், ஆங்கிலமும் சமஅந்தஸ்துடன் இருக்கும். ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழோ, அதற்குப்பின்னரோ தமிழ்ப் பிரதேசங்களில் குடியேறி, ஈழ அரசியலின்கீழ் வாழவிரும்பும் சிங்களவர்களுக்காக சிங்கள மொழியும் சமஅந்தஸ்துடன் அரசியல் மொழியாக ஏற்றுக் கொள்ளப்படும்.

முடியுமானால் சிங்கள மக்களின் நல்லெண்ணத்துடன் ஈழத்தமிழ்நாட்டைப்பெற முற்படவேண்டும். ஆனால் அவசியமேற்படின் அப்படியில்லாமலும் பெறல்வேண்டும்.

3. ஈழத்தமிழரின் சமஉரிமை, சுதந்திரம், வாழ்வு ஆகியவற்றுக்கான போராட்டத்தில் தலைவர்களின் ஒற்றுமை.

அடுத்த பார்லிமெண்டில் தெரிவு செய்யப்படும் 151 பிரதிநிதிகளில் பதினெட்டுக்கும் இருபத்து மூன்றுக்கும் உட்பட்ட தொகையான ஈழத்

[15ஆம் பக்கம் பார்க்க]

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு மார்கழி மீ 25உ (9-1-60)

EELA NADU: National Tamil weekly Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna.
*Colombo Office*: 142, New Bullers Road, Colombo 4.

## இலங்கையில் அமைதியை நிலைநாட்ட

பார்லிமெண்டின் மொத்தம் 151 ஸ்தானங்களில் அதிகமான அபேட்சகர்களை நியமிக்க முன்வந்திருப்பது யு. என். பி. என்னும் ஐக்கியதேசியக்கட்சிதான். ஆனால், அந்தக் கட்சியும் வடக்கு மாகாணத்திலே போட்டியிடத் துணியவில்லை. கிழக்கு மாகாணத்திலே 10 ஸ்தானங்களில் ஏழு தொகுதிகளில் அது தலைகாட்டக் காணோம்.

காரணம் என்ன? அந்தக் கட்சியின் மொழிக் கொள்கைதான். சிங்களம் அரசாங்க மொழியாக இருந்துவருமென்று அக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் தெரிவிக்கின்றது. 1947ஆம் வருஷத்தில் யு. என். பி. யின் ஸ்தாபகரான பெரிய சேனநாயக்கா, சிங்களம், தமிழ் இரண்டும் அரசாங்க மொழிகளாக இருக்க வேண்டியதை உணர்ந்தார். இரண்டுக்கும் சம அந்தஸ்து அளிக்கச் செய்தார். அதனால் தமிழர் பலர் அக் கட்சியில் சேர்ந்திருந்தனர்.

ஆனால், 1956ஆம் வருஷ தேர்தலுக்குக் கட்சியின் மொழிக் கொள்கை சிங்களம் மட்டும் என்று மாற்றப்பட்டது. தமிழர் விலகினர். ஐ. தே. கட்சி ஒரு வகுப்புவாதச் சிங்களக் கட்சியாக மாறியது. பண்டாரநாயக்காவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனிச் சிங்கள கோஷம் எழுப்பி (24 மணியில் சிங்களம்) தேர்தலில் வெற்றிபெற முனைந்ததால். இதற்குப் போட்டியாகவே யு. என். பியும் தனது மொழிக் கொள்கையை மாற்றவேண்டி ஏற்பட்டுவிட்டதாகச் சமாதானம் சொல்லலாம். காரணம் எதுவாயினும், போட்டாபோட்டியுடன் இந்தமொழிக்கொள்கையில் குரங்குத்தனம் செய்ததால்தான், நாட்டில் வகுப்புத் துவேஷங்கள் அதிகரித்து, கலகங்களுக்குக் காரணமாக இருந்ததென்பதை யாரும் மறுக்க முடியாது.

நாட்டில் மீண்டும் அமைதி ஏற்படுத்த வேண்டுமென்றும் அதற்காகவே யு. என். பி. பாடுபடுமென்றும் அதன் தேர்தல் விஞ்ஞாபனம் உறுதி கூறுகின்றது. இச்சமயம், மொழிச் சட்டத்தைத் தமிழருக்கு நியாயம் வழங்கும் முறையில் மாற்றுவதாகச் சொன்னால் தேர்தலில் பாதகம் ஏற்படலாமென்று யு. என். பி. அஞ்சியிருக்கலாம் என்றாலும், தமிழருக்கு நியாயம் வழங்கி அவர்களது ஒத்துழைப்பையும் பெறாத நிலையில் நாட்டிலே அமைதியோ, சமூக சமரசமோ ஏற்படுவது குதிரைக் கொம்பே.

இவ்விஷயமாக யு என். பி. விஞ்ஞாபனம் ஒரு புதிய யோசனையைச் சேர்த்திருப்பது குறிப்பிடத்தக்கது. "அரசாங்க நிர்வாகத்தில் ஆங்கிலம் படிப்படியாக மாற்றப்படும்" என்று தெரிவிக்கிறார்கள். ஏற்கெனவே நிறைவேறியுள்ள மொழிச் சட்டப்படி 1961-ஆம் ஆண்டில் ஆங்கிலம் அடியோடு கைவிடப்பட வேண்டும். இது அனுபவ சாத்தியமில்லை என்பதை உணர்ந்து, படிப்படியாகவே ஆங்கிலம் கைவிடப்படுமென்கின்றனர்.

மேலும் சிங்களம் தெரியாத பிரஜைகள், அரசாங்கம், வர்த்தகம் முதலிய விஷயமாகத் தங்கள் அலுவல்களை எவ்விதமான வசதியீனமுமின்றிப் பார்க்க இடமளிக்கவேண்டியது தங்கள் கடமையும் பொறுப்புமாகுமென்பதையும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். அரசாங்க உத்தியோகங்களுக்கான பிரவேச பரீட்சையை, கல்வி கற்றமொழியிலேயே எழுதலாமென்றும் சேவையில் சேர்ந்தபின் மற்றொரு தேசிய மொழியை ஓரளவு பயிலவேண்டியிருக்குமென்றும், ஆங்கிலம் இரண்டாவது மொழியாகக் கட்டாயமாகப் போதிக்கப்படுமென்றும் கூறியுள்ளனர். இந்த யோசனைகள் யு. என். பி. யின் களனி மாநாட்டுத் தீர்மானத்தை விட முன்னேற்றமானவைகளே என்றாலும் இவை தமிழருக்குத் திருப்தி அளிக்க முடியாது.

இந்தியர் பிரச்சினையைத் தீர்க்க அந்த அறிக்கையில் மூன்று யோசனைகள் கூறப்பட்டுள்ளன. 1. சட்டவிரோத குடியேற்றத்தைத் தடுக்க தீவிரமான நடவடிக்கைகளை எடுப்பார்கள். 2. இந்தியப் பிரஜைகளாக இருப்பவர்கள் அவசியமானபோது திருப்பி அனுப்பப்படுவர். 3. இவ்விரு வகையிலும் சேராத (நாடற்ற) வர்களுக்கு இலங்கையைவிட்டு வெளியேறத்தக்க தூண்டுதல்கள் அளிக்கப்படுமாம். மூன்றாவதாகக் கூறப்பட்ட "நாடற்றவர்" விஷயமே உண்மையான பிரச்சினை. தூண்டுதல்களை ஏற்காமல் இங்கேயே தங்கி இருப்பவர் விஷயமென்ன? அவர்கள் இங்கு மனித உரிமைகளின்றி, அரசியல் உரிமைகளின்றி, மானங்கெட்ட வாழ்க்கையை நடாத்தி வரவேண்டுமா? இந்நாட்டில் அமைதி ஏற்பட வேண்டுமாயின், அம் மக்களுக்கு மனித நீதி வழங்க வேண்டும்.

அவர்களது வாக்குரிமையையும், பார்லிமெண்ட் பிரதிநிதித்துவத்தையும் பறித்தது அரசியல் பித்தலாட்டமாகும். இங்கு ஜனநாயகம் கேலிக்கூத்தாக்கப்பட்டுள்ளது. மனிதாபிமானத்துடன், சர்வதேச சட்டப்படி இவர்களுக்கு உரிமைகள் வழங்கும் போதுதான் இலங்கையில் அமைதி ஏற்பட்டு நாடும் முன்னேற முடியும்.

---

## வானொலியில் வகுப்பு வெறி

வெள்ளவத்தையிலும் கல்கிசையிலும் தென் இலங்கையிலேகுடியேறியுள்ள மற்ற இடங்களிலிருந்தும்தமிழர்களை எல்லாம் அகற்றிவிடவேண்டுமாம்! ஜாதிக விமுக்தி பெரமுண (கே. எம். பி. இராஜரத்ன) சென்ற புதன்கிழமை இலங்கை வானொலி மூலம் செய்த தேர்தல் பிரசாரத்தில் இவ்விதம் கூறியதாக ஓர் அன்பர் அறிவித்துள்ளார். இது உண்மையானால், எவ்வளவு ஆபத்தாகுமென்பதை நாம் விளக்கத் தேவையில்லை.

பல அரசியல் கட்சிகளுக்கும் தங்கள் தேர்தல் பிரசாரங்களை வானொலி மூலம் செய்ய முதல் முதலாக இப்போது வசதி அளிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கதே. ஒவ்வொரு கட்சியின் கொள்கை, வேலைத் திட்டம் எல்லாவற்றையும் மக்கள் கேட்டு அறிந்து வாக்களிக்க அது ஓரளவு உதவக்கூடும். பிரிட்டனில் வானொலி மட்டுமன்றி, டெலிவிஷன் மூலமும் தேர்தல்பிரசாரம் நடத்த பல கட்சிகளுக்கும் அனுமதி அளிக்கின்றார்கள். ஆகவே, அரசாங்கம் நடத்தும் வானொலியில் எல்லாக் கட்சிகளுக்கும் தேர்தல் பிரசாரம் நடத்த அனுமதித்துள்ளது முற்போக்கு நடவடிக்கையே.

ஆனால் இலங்கையிலே பல வகுப்புவாதக் கட்சிகளும், தேர்தல் காலத்திலே காளான்கள் போல் கிளம்பியுள்ளன. வானொலிமூலம் பிரசாரம் செய்ய அவற்றுக்கு இடம் கொடுத்தால், வகுப்புவாத துவேஷப் பிரசாரங்களை அவர்கள் செய்து நாட்டில் மீண்டும் வகுப்புவாதத் தீயை மூட்டுவார்களோ என்று அஞ்சினோம். அஞ்சியபடியே நடப்பது நாட்டுக்குப் பெரிதும் துரதிருஷ்டமாகும்.

வானொலி தேர்தல் பிரசங்கப் பிரதிகளை முன்கூட்டியே பெற்று, அவற்றைத் தணிக்கை செய்வதாயும் அதன்பிறகே, ஒலிபரப்ப அனுமதிப்பதாயும் அறிவிக்கப்பட்டது. மேற்குறித்த வகுப்புத்துவேஷப் பிரசாரம், அனுமதிக்கப்பட்டது உண்மையா? அப்படியானால் அனுமதித்தது யார்? என்பதை பிரதம மந்திரி உடன் விசாரித்து அறியவேண்டும். இது அற்ப விஷயமல்ல. நாட்டிலே மீண்டும் வகுப்புத்துவேஷத்தையும் கலகங்களையும் மூட்டிவிடச் சில விஷமிகள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். தேர்தல்காலம் அதற்கு மிக வாய்ப்பானது. ஆகவே, இதற்குச் சற்றும் இடம் கொடாமல், பிரதமர் இவ்விஷயத்தில் அதிக கண்டிப்புக் காட்டவேண்டியது அவரது பொறுப்பும் கடமையுமாகும்.

---

## கேலிக் கூத்து

தமது 'காவந்து' மந்திரிசபையிலிருந்து ஐந்து மந்திரிகளை பிரதமர் தகநாயக்கா நீக்கிவிட்டதைக்குறித்து நாம் வியப்படையவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் புதிய தலைவர் ஸி. பி. டி' சில்வா, தமது மந்திரிபதவியை ராஜினாமாச் செய்தபோதே, அக்கட்சியைச் சேர்ந்த ஐந்து மந்திரிகளும், தங்கள் தலைவர் காட்டியவழியை மரியாதையாகப் பின்பற்றியிருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் தங்கள்பதவிகளில் ஒட்டிக் கொண்டிருந்ததால் தான் இப்போது விரட்டப்பட்டு இப்படிஅவமதிப்பு அவர்களுக்கு ஏற்பட்டது. ஆகவே பிறரை நோவதைவிட அந்த ஐவரும் தங்கள்பதவி ஆசையைத்தான் நொந்துகொள்ள வேண்டும்.

காவந்து மந்திரி சபையிலிருந்து, மந்திரிகளைப் பிரதமர் எதேச்சாதிகாரமாக நீக்கும் இவ்வித காரியத்தைப்போல் உலக ஜனநாயக பார்லிமெண்ட் சரித்திரத்தில் எங்குமே கண்டதில்லை என்கிறார் பதவி இழந்த மரைக்கார். உண்மையே. ஆனால் இலங்கையிலே ஜனநாயகம் நடக்கிறதென்று மரைக்கார் நினைத்திருந்தாரா? அப்படி யாரும் நினைத்திருந்தால் அது பெரிய தவறு.

என்று வாக்காளர் இடாப்பிலிருந்து இரண்டரைலட்சம் தமிழ் வாக்காளரின் பெயர் திடீரென நீக்கப்பட்டதோ, அன்றே இலங்கையில் ஜனநாயகம் கொலைசெய்யப்பட்டது. என்று சிங்களம்மட்டும் சட்டத்தை அவசரமாக ஒருதலைப் பட்சமாக நிறைவேற்றி, சிறுபான்மையோரின் அடிப்படை உரிமையும் பறிக்கப்பட்டதோ அன்று ஜனநாயகம் புதைக்கப்பட்டது.

சென்றசெப்டம்பர்மாதம் 26-ம் திகதியிலிருந்து தகநாயக்காவின் தலைமையில் நடைபெறும் காவந்து மந்திரிசபையின்நோக்கம், தேர்தல்வரை நாட்டில் அமைதிநிலவவும், தேர்தலை ஒழுங்காக நடக்கும்படி பார்த்துக் கொள்ளவும்தான். இவ்வித சமயங்களில், இந்தியாவிலுள்ளதுபோல் கவர்னர்ஜெனரலே இடைக்கால நிர்வாகத்தை ஏற்று, தேர்தலை நடத்த நமது அரசியலில்இடமிருந்தால் இந்த கேலிக்கூத்துகளெல்லாம் இல்லாமற்போயிருக்கும்.

---

## பொங்கல் புதுநாள் வாழ்வின் முதல் நாள்

**கமலபூஷணி திருநாவுக்கரசு**
மட்டக்களப்பு

**பொந்நெல் கதிர் உதிர்த்த அரிசியும், நுரை பொங்கக் கறந்தெடுத்த பசும் பாலும், கண்பொழிதேனைச் சிந்தி நின்ற கன்னலும், ரசஞ்சொட்டும் தீங்கனிகளும் மெத்தன மணம் பரப்பும் இஞ்சியும் மஞ்சளுஞ் சேர்ந்து பொங்கல் மணம் வீசும் பொங்கல் திருநாள், களிகூரும் வெறு நாளாகாது. நம் மனதின் எண்ண அலைகளை அசைக்கும் முதல் நாளாகட்டும்.**

நம்மை விட்டகலும் கொட்டும் மழையுடனும் கடுங் குளிருடனும், கழிந்த வாழ்வின் துயர நினைவுகள் மறையட்டும். இளவெயிலைப் பரப்பி வரும் பருதியின் ஒளிக் கதிர்கள் நம்புது வாழ்வில் நல்லெண்ணத்தைப்பரப்பட்டும். ஆதவனிலிருந்து தெறித்துஇன்று நம்மைத்தழுவும் புதுக் கதிர்களின் இளவெப்பத்திலே நம் மனத்திலே புதுத் தீர்மானங்கள் முளைவிட்டெழட்டும்.

அப்பொழுதுதான்,

வருடாவருடம் வந்து செல்லும் பொங்கல் புது நாள் நம் நல்வாழ்வின் முதல் நாளாகும்.
குளிரில் அமுங்கிச் செயல்குன்றிக் கிடந்த இயற்கை பொங்கலுடன் மலர்வுறுவதுபோல் மக்களின் மனதும் நல்லெண்ணத்தின் மெருகாகும்.

அதன் பலன்,

தனிப்பட்ட மனிதனுடைய நல்வாழ்வின் திருத்தம்.
கூடிவாழும் சமூகத்தின் வளர்ச்சி, நாட்டின் நலன் பெருக ஒற்றுமை.

அன்று தான்,

இயற்கையிலே, பொங்கல் பானையிலே, பொங்கல் வாழ்விலே, சகல துறைகளிலும் பொங்கல் ஒரு புதுப் பொங்கல்.

---

## யாருக்கு வெற்றி?

தேர்தலிலே யார் ஜெயிப்பார்கள்? எந்தக் கட்சி வெற்றி பெறும்?. இதைப்பற்றித்தான் ஊரெல்லாம் பேச்சு.

தேர்தல் சோதிடங்கள் பல அதிகமாக அடிபடுகின்றன. ஒரு நண்பர் யு. என். பி.க்குத்தான் வெற்றி என்கிறார். அதற்கு திட்டமான மெஜாரிட்டி பலம் அதாவது 80 ஸ்தானங்கள் கிடைக்குமென்றும் கூறி ரூபாய் 100 பந்தயமும் கட்டியிருக்கிறார்.

எந்தக் கட்சிக்கும் தனிப்பட்ட முறையில் மெஜாரிட்டி பலம் கிடைக்க முடியாதென்றும், ஆகக் கூடப்போனால் யு. என். பி.க்கு 45 முதல் 60 ஸ்தானங்கள்கிடைக்கலாமென்பதும் மற்றொரு நண்பரின் கட்சி.

இரு நண்பரும் இப்படி பேசிக்கொண்டிருக்கையில், மற்றொருவர் வந்தார். டட்லி 85 ஸ்தானங்கள் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார். ஆனால் கொழும்பு நகரசபைத் தேர்தலில் அவர் 25 எதிர்பார்த்தாராம். அவை அநேகமாகக் கிடைத்து விட்டதாயும் அது போலவே இப்போதும் கிடைக்கலாமென்கிறார்.

டட்லி வேறுயாருக்கும் பயப்படவில்லையாம். பிலிப்பின் எம். ஈ. பி. கட்சியைக் கண்டுதான் அஞ்சுகிறாராம். பௌத்தம், இடது சாரி கோஷங்கள் முதலியவைகளைக் கொண்டு அவர் அதிக வாக்குகள் பெற்றுவிடலாமென்றும், அந்தப் போட்டியைச் சமாளிப்பதுபற்றியே டட்லியும் சகாக்களும் கவலையுடன்ஆலோசனைசெய்து வருவதாயும் தெரிவித்தார்.

* * *

கொழும்பு நகரசபைத் தேர்தலில் பிலிப்பின் கட்சியில் ஒருவர்கூடவெற்றிபெறவில்லை. அடியோடு மண்ணைக் கௌவினர். அப்படியிருக்க, பார்லிமெண்ட் தேர்தலில் கட்சிக்கு என்ன சான்ஸ்? என்று கேட்டேன்.

நாட்டுப் புறங்களில் பிலிப்புக்கு அதிக செல்வாக்கு உண்டென்றும்வகுப்புவாத கோஷங்கள் அங்கு எடுபடலாமென்றும் கூறினர்.

ஆனால் யு. என். பி. யின் கோஷமெல்லாம் "சட்டம், ஒழுங்கு" இவற்றை நிலைநாட்டுவதைப் பற்றித்தான். சென்ற மூன்று வருஷங்களாக நாட்டில் வகுப்புக் கலகங்கள் ஏற்பட்டு, மக்கள் அமைதியாக வாழமுடியாமற் போனதால், மக்களில் பெரும்பாலோரும் அமைதியையே ஆவலுடன் விரும்புவதாயும், ஆகவே அந்த கோஷத்துக்கு அதிகமான ஆதரவு இப்போது கிடைக்கலாமென்றும், கொழும்பு நகரசபைத் தேர்தல் முடிவுகள் இதற்கு அத்தாட்சி என்றும் சொல்லப்படுகின்றது.

* * *

நியமன தினத்தன்று, டட்லிக்கு பல மாலைகள் போட்டு தடபுடலாக வரவேற்பு நடந்ததைப் பார்த்தபோது, அந்தக் கட்சி தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் டட்லி பிரதமராகவே வந்துவிட்டது போலவே இருந்தது!

டட்லி ஒரு சமயம் பிரதமரானால், உண்மையில் பின்னலிருந்து ஜே. ஆர். ஜயவர்த்தனதான் ஆட்டி வைப்பாரென்றும், டட்லியின் ஆட்சி அதிக நாள் நீடிக்க சில போட்டி அரசியல் சக்திகள் விடமாட்டாதென்றும் மற்றொருவர் சோதிடம் கூறுகிறார்.

ஒவ்வொருவரும் தங்கள் மனப் போக்கின்படி ஆருடம் கூறுகிறார்கள். போட்டி உண்மையில் டட்லிக்கும் என். எம்.முக்கும்தான் என்கிறார், என்.

(9ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் திருநாள்: நான்கு கட்சித் தலைவர்கள் செய்தி

## ஒற்றுமையே நல்வாழ்வின் திறவுகோல்

— ஜீ. ஜீ. பொன்னம்பலம் —

[தலைவர்- அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்]

சமாதானத்துக்கும் சுபிட்சத்துக்கும் சின்னமாக விளங்கும் பொங்கல் திருநாளில், தமிழ் மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கும் வாய்ப்பை அளித்தமைக்கு, நான் நன்றியுடையவனுயிருக்கிறேன்.

தமிழ் மக்கள் எல்லோருக்கும் அதிக மகிழ்ச்சியையும் நிறைவையும் கொடுக்கக்கூடிய வெவ்வேறு வழி வகைகளை, தமிழர்கள் தத்தம் புத்திக் கெட்டியவாறு வகுத்துக் கொண்டிருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வருட தைப்பொங்கல் வருகின்றது.

ஆகையால், நாம் கைக்கொள்ள வேண்டிய மார்க்கம் வித்தியாசப் பட்டிருப்பது போலத் தோற்றலாம். இந்த சமயத்தில் வேற்றுமைகளைத் தூக்கிப் பாராட்டாது தமிழினத்தின் அடிப்படையான ஒற்றுமையை நினைவுறுத்தும்படி எனது சகாக்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். பல பல நூற்றுண்டுகளாகக் கௌரவத்தோடும் மரியாதையோடும் வாழ்ந்து வந்த தமிழர்கள் தொடர்ந்து அவ்வித வாழ்க்கை நடத்துவதற்கு முன்னெப்போதும் ஏற்படாத ஆபத்துக்கள் இன்று ஏற்பட்டுள்ளன. எமது உள்ளங்களை விருப்பு வெறுப்பில்லாமல் விசுவாசத்துடன் பரிசோதிக்க வேண்டிய காலம் இதுதான்.

நம் முன்னேர்களால் இயற்றப்பட்ட உறவுப் பிணைப்புகள் சில சமயங்களில் உடைத்தெறியப்படும் போலத் தோற்றுகிறது. இதைத் தடுத்து, மீண்டும் அந்தப் பிணைப்புகளை உறுதிப்படுத்த வேண்டும். இந்த லட்சியத்தை முன் வைத்து "ஈழநாடு" உழைக்குமென்றும், இத்தீவில் தமிழர் எங்கு வாழ்ந்தாலும் அங்கங்கெல்லாம் அவர்கள் ஒளி வீசும் கண்களோடும், நிமிர்ந்த தலையோடும் வாழ்வதற்குரிய சூழ்நிலையைப் பெற முயலுமென்றும் நான் மனப் பூர்வமாக நம்புகிறேன்.

ஒற்றுமைதான் நல்வாழ்வின் திறவுகோல்.

## தமிழர் வரலாற்றில் நெருக்கடியான கட்டம்

— அ. அமிர்தலிங்கம் —

[அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி]

தமிழினத்துக்குத் தனித் திருநாளாக விளங்குவது பொங்கல் புதுநாளாகும். ஆண்டுமுழுவதும் உழைத்த உழவன் தன் வியர்வையின் விளைவை சுவைக்கும் நாள் அந்நாளாகும். சாதிமத பேதமின்றித் தமிழ்மக்கள் எல்லோரும் கொண்டாடும் இவ் விழாவின்போது எல்லோருடைய மனதிலும் குதூகலமும் புது நம்பிக்கையும் பரிணமிப்பது இயல்பு. "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற ஆன்றேர் மொழி எமது நம்பிக்கையை மேலும் பெருக்குகின்றது.

தன் வரலாற்றிலே மிகவும் நெருக்கடியான கட்டத்தில் இன்னல்பல சூழ்ந்து, இருளில் தத்தளிக்கும் மரக்கலம்போலத் தடுமாறும் தமிழினமும் தன் துன்பம் துடைக்கப்படும் நாள் எப்போது என்று எதிர் பார்த்து ஏங்குகின்றது. ஏழை, பணக்காரன், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேதமின்றி எல்லோரும் மகிழும் இந்நாள் நமக்குப் புகட்டும் ஒரே பாடம் ஒற்றுமையின் அவசியமாகும். இதனால் இந்த ஒற்றுமை உள்ளத்தூய்மையானதாக, கொள்கையின் அடிப்படையில் அமைந்ததாக இருந்தாலன்றி நிலைக்கமாட்டாது. ஒரே கொள்கையில், ஒரே குரலில், ஒரே தலைமையில் தமிழினம் அணிவகுக்கும் நாளை நாம் காணும் வழி இத் தையில் பிறக்குமென்று நம்புவோமாக.

"வெள்ளம் போல் தமிழர் கூட்டம்
வீரம்கொள் கூட்டம் அன்னர்
உள்ளத்தால் ஒருவரே
மற்றுடலினல் பலவாய்க் காண்பார்".

என்ற கவிஞர் கூற்றுக்கு இலக்காகத் திகழ திடசங்கற்பம் செய்யும்படி ஒவ்வொரு தமிழ் மகனையும் வேண்டுகிறேன்.

## சிங்கள - தமிழ் கூட்டுறவே தமிழினத்தின் கண்ணீரைத் துடைக்கும்

— பி. நாகலிங்கம் —

[சமசமாஜக் கட்சி]

தமிழ் பேசும் மக்கள் மொழி உரிமை இழந்து, இன பேதக் கொள்கையால் பாதிக்கப் பட்டு, பலவித அல்லல் துன்பங்களுக்குள்ளாகியிருக்கின்ற காலம் இது.

2000 ஆண்டுகளுக்கு மேல் இந்நாட்டில் வாழ்ந்த மூதாதையர் எத்தனை நூறு முறை இத்தகைய சிக்கலான பிரச்சினைகளை நெஞ்சுத் தைரியத்தோடு எதிர்த்து சமாளித்தார்கள். அவர்கள் அப் பிரச்சினைகள் தங்களைத் தோல்வியடையச் செய்யாமல் தாங்களே அவற்றைத் தோல்வியடையச் செய்திருப்பாரென்று நாம் ஏன் எம் மனங்களில் கற்பனை செய்து பார்க்க முடியாது?

தனித் தமிழர் கொண்ட கட்சிகளோ, தனிச் சிங்களவர் கொண்ட கட்சிகளோ, தமிழினத்தின் கண்ணீரைத் துடைத்து அதற்கு ஆறுதல் கூற முடியாது. சிங்களமக்களையும் தமிழ்மக்களையும் கொண்ட ஒரு கட்சியே தமிழரின் இன்னல்களைத் தீர்க்க முடியும். அத்தகைய ஒரே ஒரு பெரிய தேசியக் கட்சி இன்று இலங்கை சமசமாஜக் கட்சிதான்.

ஐந்து பார்லிமெண்டுகளில் தமிழ்ப் பிரதிநிதிகள் அங்கத்துவம் வகித்தும் தமிழினத்தின் அபிலாஷைகள் முற்றுப் பெறவில்லை. ஆகையால் இனியாவது ஊன்றிச் சிந்தித்து அதன்படி ஒழுக வேண்டியது மக்கள் கடமை. உழவர் திருநாளாகிய பொங்கல் திருநாள் நாட்டின் சுபிட்சத்துக்கு வழி வகுக்க வேண்டுமென்பது எமது ஆசை.

## தேசிய ஒற்றுமையே தமிழர் நல்வாழ்வுக்கு உகந்த ஒரே வழி

— அ. வயித்திலிங்கம் —

[கொம்யூனிஸ்ட் கட்சி]

விவசாயிகள் தினமாகிய தைப் பொங்கலன்று 'ஈழநாடு' அன்பர்கள் எல்லோருக்கும் என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

இலங்கை வாழ் மக்கள், சிறப்பாக தமிழ் பேசும் மக்கள், ஆழ்ந்து சிந்தித்து கடமையாற்ற வேண்டிய காலம் நெருங்கி விட்டது. கிட்டத்தட்ட முப்பதாண்டு அரசியல் வாழ்வின் பயனாக நாம் சில துறைகளில் முன்னேற்றமடைந்துள்ள போதிலும், இன்னும் பல துறைகளில் பின் தங்கி விட்டோம்.

தமிழர்கள், இன்று வெறுப்பும் ஏமாற்றமுமடைந்த ஒரு நிலையில், பெரும்பான்மை சமூகத்துடன் ஒற்றுமையாக வாழலாமா என்ற பிரச்சினையால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். சிலர் அவ்வித ஒற்றுமை நடவாத காரியம் என்கிறார்கள். நாம் அதை ஒப்புக் கொள்ளவில்லை. பெரும்பான்மையான தமிழரும் எம்மை ஆதரிப்பார்கள் என்பது திண்ணம். இரு சமூகத்திலுமுள்ள வகுப்புவாத வெறியர்களால் எழுப்பப்பட்ட தீயானது எப்படிக் கொழுந்து விட்டெரிந்ததென்பதை 1958-ம் ஆண்டு மே மாதம் கண்டவர்கள், இனிமேலும் இத்தகைய கோர சம்பவம் நிகழலாகாதென்று விரும்புகிறார்கள். இதற்கு வழி என்னவென்று சிந்திக்கும் காலம் நெருங்கி விட்டது. இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி கூறும் வழி இன்று நிலவும் அரசியல் கொந்தளிப்பை ஓரளவாவது தணித்து, தேசிய ஒற்றுமையை வளர்க்கும் என்பது எமது கருத்து.

இலங்கை ஓர் ஒற்றையாட்சி நாடாகவே இருக்க வேண்டும். சமஷ்டி அரசியல் வெறும் கானல் நீர். அதை வேறெந்த மக்கள் சமுதாயமும் விரும்பவில்லை.

சுதந்திரமடைந்த பிற ஆசிய நாடுகளாகிய இந்தியா, பர்மா, மலாயா, இந்தோனேஷியா ஆகியன ஒரே ஒரு மொழியைத்தான் அரசகரும மொழியாக ஏற்றுக் கொண்டிருக்கின்றன. அரச கரும மொழி என்றால் என்ன? அரசாங்கம் பிறநாட்டு அரசாங்கங்களுடன் உபயோகிக்கும் மொழியே அரச கரும மொழி. ஆகையினால் சிங்களம் அரச கரும மொழியாயிருக்கலாம். பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தமே இதை ஒப்புக் கொண்டது. மொழி விஷயத்தில் நாம் பின்பற்றும் கொள்கை தமிழரின் கௌரவத்துக்கு எவ்வித இழுக்கையும் உண்டு பண்ணவில்லை.

தமிழருக்கு, தங்கள் பரம்பரையான தாயகங்களில், பிரதேச சுயாட்சி இருக்க வேண்டும். அப் பகுதிகள் முழுவதிலும் தமிழே நிர்வாக மொழியாயிருக்கும். பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தத்தின்படி தமிழ்ப் பகுதிகளில் பல பிரதேச சபைகளுக்கு இடம் கொடுக்கப்பட்டிருந்தது. எமது கொள்கையின்படி, தமிழருக்கு ஒரே ஒரு தனி நிர்வாகமிருக்கும்.

தமிழ் மக்கள் இலங்கையில் எப்பகுதியில் இருந்தாலும் அவர்கள் எல்லோருக்கும், தமிழில் அரசாங்கத்துடன் தொடர்பு வைத்துக் கொள்ளவும், தமிழில் கல்வி கற்பதற்கும், தமிழில் பரீட்சை எடுப்பதற்கும் உரிமையுண்டு. இது சட்ட ரீதியாக உறுதியாக்கப் படவேண்டும்.

இதைத் தவிர வேறெந்த மார்க்கமும் தேசிய ஒற்றுமைக்கு வழிதேட மாட்டாது.

[8ஆம் பக்கத் தொடர்ச்சி]

எம். பக்தர். முடிவு எப்படியாயினும், இப்போது இலங்கையிலேயே அரசியல் அரங்கம் வெகு ருசி.

தலைவர்கள் ஒருவருக்கொருவர் ஏசிப்பேசிக் கொள்ள தேர்தல் கூட்டங்களும் ஆரம்பமாகி விட்டன. இன்னும் மூன்று மாதங்களுக்கு ஒரே அமர்க்களம்தான்!

ஐயாறன்.

## வாழைச்சேனையில் நடைபெற்ற வகுப்புத் துவேஷ பிரசாரம்

[8ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளவு பயின்றிருக்க வேண்டுமென்பது அவசியம். ஆனல் இரண்டரை லட்சம் இந்தியருக்கு, இந்த சட்டத்திற்கு மாறுபாடாக கொடுக்கப்பட்டுள்ள பிரஜா உரிமை மீண்டும் பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

7. கள்ளக் குடியேற்றத்தைக் கண்டிப்பாகத் தடுத்தல்.

8. கள்ளக் குடியேற்றக்காரர்களுக்கு எவ்விதத்தில் உதவினலும், அவர்கள் நாட்டிற்கெதிராக குற்றம் செய்தவர்களாகக் கருதப்பட வேண்டும்.

9. தோட்டப் பகுதிகளிலிருக்கும் எல்லாப் பாடசாலைகளும் சிங்களப் பாடசாலைகளாக மாற்றப்பட வேண்டும்.

10. இந்தியரை நாடு கடத்த எல்லாவித உதவியும் அளித்தல்.

பௌத்த மதக் குழந்தைகளுக்கெதிராக மத குருக்களினல் செய்யப்பட்ட குற்றத்தை அழித்துவிடு முகமாக அரசாங்கம் எல்லாப் பாடசாலைகளையும் எடுத்து நடத்த வேண்டும்.

பிற நாட்டவரின் எல்லாத் துறைகளும் தேசியமயமாக்கப் பட வேண்டும்.

நாட்டின் கலாச்சாரத்தைப் பாதிக்கும் ஆங்கிலப் பத்திரிகைகள் தடை செய்யப்பட வேண்டும்.

இந்தியர் மயமாக இருந்து கொண்டு நாட்டின் கலாச்சாரத்தைப் பயமுறுத்தும், சினிமாத் தொழில் தேசியமயமாக்கப்பட வேண்டும்!

**ரத்மலானை, வெள்ளவத்தை பம்பலப்பிட்டியா ஆகிய இடங்களில் தமிழர்கள் குடியிருப்புகள் சிங்களவருக்கு அச்சத்தையூட்டி, சமாதானத்தைக் குலைத்து நெருக்கடியைஏற்படுத்துகின்றபடியால், இவை கலைக்கப்பட வேண்டும்.**

முன்னைப் போலவே ஏகாதிபத்திய வாதிகள் இந்நாட்டுத் தலைவர்கள் சிலருடன் சேர்ந்து செய்யும் சதி, சிங்கள நாட்டையே அழித்துவிடக்கூடிய நிலைக்கு வந்திருக்கின்றது. ஆகையால் இன்று வீடிழந்து அனதைகளாக இருக்கும் சிங்கள மக்கள் எப்பொழுதும் விழிப்பாக இருக்க வேண்டும். நாம் மேற்கூறிய வழிகள் மூலமே நாட்டின் நலனையும், நமது வருங்காலச் சந்ததிகளையும் பாதுகாக்கலாம்.

### பரிதாப நிலை

இன்று இலங்கையர், குறிப்பாக சிங்களவர் இருக்கும் பரிதாப நிலையே, நம் நாட்டை 400 ஆண்டுகளாக சூழந்திருந்த இருள் இன்னும் நீங்கவில்லை என்பதைக் காட்டும்.

சிங்கள அரசர்களின் கீழ் இந்நாட்டு மக்கள் அனுபவித்த சுபிட்சமும், இன்பமும் ஏகாதிபத்தியவாதிகளின் வருகையுடன் அழிந்தது. ஆயிரம் கல்வி நிலையங்களில், எரிந்த விளக்குகள் ஒவ்வொன்றாக அணைந்தன. இன்றும் நாட்டின் சரித்திரம் சிங்களவரை பெருமூச்செறியச் செய்கின்றது.

இன்று நாட்டிலே ஏற்பட்டுள்ள மத, கல்வி, பொருளாதார நெருக்கடிகள், பத்தாண்டு சுதந்திரத்தின் பின்னரும் நாடு இருக்கவேண்டிய நிலையில் இல்லை என்பதைக் காட்டுகின்றது. இந்நாட்டு சமூகவாழ்விலே ஏகாதிபத்திய வாதிகள் கலக்கப்பட்ட, பலநாட்டுபழக்கவழக்கங்கள், நமது தலைவர்களை, சொந்த நலனையும் அதிகாரம், செல்வாக்கு ஆகியவற்றையுமே குறிக்கோளாக கொள்ளச் செய்திருக்கின்றன. கடந்த முப்பது ஆண்டுகள், நாட்டின் வரலாறு, இவர்கள் நாட்டு மக்களின் நலனுக்கு உழைக்கவில்லை என்பதைக் காட்டும்.

### பலகட்சிகள்

இலங்கையில் இன்று பல கட்சிகள் இருக்கின்றன. பல, 30 ஆண்டுகளாக இருந்ததாகவும் வேறும்பல சுதந்திரப் போராட்டத்தின் முன்னணியில் நின்றதாகவும் கூறிக்கொள்கின்றன. ஆனல் இந்நாட்டின் சாதாரண மனிதன் இவர்களை அருவருப்புடனும் வெறுப்புடனுமே நோக்குகின்றன். பத்தாண்டு சுதந்திரத்தின் பின்னர் இந்த நிலை மேலும் தெளிவாகின்றது. இலங்கையின் புதல்வர்கள் இங்கு பிறந்து, வளர்ந்து, மடிந்து இந்நாட்டின் மறுக்கமுடியாத உரிமையுடையவர்களாக இருப்பினும், எதேச்சாதிகார சக்திகளினல் தம்நாட்டிலேயே வேற்று நாட்டவராக்கப்பட்டிருக்கின்றனர்.

இலங்கையின் தலைநகரான கொழும்பை ஒருமுறை சுற்றி நோக்கினல், சிங்களநாடு எந்த நிலையிலிருக்கின்றது என்பதை உணரமுடியும். கொழும்புக் கோட்டை, 'ஒரு சிறிய இங்கிலாந்தாகவும்', புறக்கோட்டை சென்னையின் ஒரு சிறு பிரதி போலவும்காட்சியளிக்கின்றன. நிலமும், கட்டிடங்களும் இந்தியரின் உரிமையாக இருக்கின்றன. இதன் விளைவாக, சிங்களவர்த்தகர் நடைபாதைக்கு விரட்டப்பட்டிருக்கின்றனர். மேலும், சிங்களபௌத்தர்களுக்கு அரசாங்கஉத்தியோகமோ படைத்தளங்களிலும் பொலிஸ் இலாகாவிலும் உயர்பதவியோ கிடைக்காது. கொழும்பு வீதிகளிலே நடக்கும் ஒருவன் இது இலங்கையின் தலைநகரா என சந்தேகிக்க வழியுண்டு. அசுத்தமான நடைபாதைகளிலும், கடைகள் முன்னும், வீடற்று, துயரத்துடனிருக்கும் பல நாதியற்றவர்களைக் காணலாம். சிங்கள அரசர்களின் கடைசிக் கோட்டையாக விளங்கிய மலைநாட்டிலே, சிங்களவரிடமிருந்து வெள்ளை ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களது பின்னேடிகளான இந்தியரும், நல்ல நிலங்களையெல்லாம் பறித்துக் கொண்டார்கள். ஒரு புறத்தில் தேயிலைத் தோட்டங்களும் மறுபுறத்திலே மண்கரைதலும், வறுமையும் தாக்கி இவர்கள் உணவின்றி நாட்டின் வைத்தியசாலைகளை நிரப்புகின்றனர்.

ஜாதிக விமுக்தி பெரமுனையை இலங்கை மக்களுக்கு அறிமுகப்படுத்தவேண்டிய அவசியமில்லை. இலங்கை மக்களின் போராட்டத்தின் விளைவாகப் பிறந்ததே இம் முன்னணி. சிங்களமக்களின்சார்பாகப்போராடிய ஒரே கட்சி என்ற காரணத்தால் இக்கட்சி சட்டரீதியாகத் தடை செய்யப்பட்டு, இக்கட்சியின் தலைவர் திரு கே. எம். பி. ராஜரத்னவும் சிறையில் வைக்கப்பட்டார்.

அருள்வழி



முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே
.பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே
உன்னைப் பிராஞகைப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்கா [வோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்னவகையே யெமக் கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோர் எம்பாவாய்.

# பாவை நோன்பை விளக்கும் திருவெம்பாவைச் சிறப்பு

— ந. ரா. ஆடலரசு —

நமதருமைத் தமிழ் மொழிக்குள்ள தனிச் சிறப்புக்கள் பல. அவற்றுள் ஒன்று அது உருக்கந்தருவதில் ஒப்பற்ற மொழி என்பது.

தமிழின் இத் தனிச்சிறப்பாகிய குழைவிக்குந் தன்மைக்கு எடுத்துக்காட்டாக இருப்பது திருவாசகம். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்று வழங்கப்பெறும் பழமொழியே இதற்குப் பெருஞ் சான்ருகும்.

இத்தகைய திருவாசகத்தில் ஒரு பகுதியாக இருப்பது திருவெம்பாவை. மாணிக்கம் போன்ற சொற்களால் திருவாசகம் பாடி 'மாணிக்கவாசகர்' என்றே பெயர்பெற்ற அடிகளாரிடம், 'திருவாசகம் பாடிய வாயால் ஒரு கோவை பாடுக' என்று கேளாமல், 'பாவை பாடிய வாயால்' என்று இறைவன் குறிப்பிட்டார் என்பது கொண்டும் இத் திருவெம்பாவைக் குள்ள பெருஞ் சிறப்பினை உய்த்துணரலாம்.

## காரணம் என்ன?

இவ்வளவு சிறப்பு திருவெம்பாவைக்கு இருப்பதற்குக் காரணம் என்ன என்று எண்ணி அறிதல் வேண்டும். திருக்கோவையார், மணிவாசகர் காலத்துக்கு முன்னிருந்த பண்டைச் செந்தமிழ் இலக்கியங்களில் பயின்று வரும் அகத்துறைப் பாடல்களின் போக்கைத் தழுவி அவற்றின் துறைகளை மேலும் விரிவாக்க நானூறுவகைப்படுத்தும் புதுவகையில் பாடப்பட்ட முதற் கோவை என்பதையும் அறிதல் வேண்டும்.

திருவெம்பாவை, அக்கால மக்கள் தம் வாழ்வில் கைக்கொண்டிருந்த பாவைநோன்பை அடிப்படையாகக்கொண்டு பாடப்பெற்ற பாடல்கள் ஆகும். பாவை நோன்பு பற்றிய குறிப்புகள், பரிபாடல், கலித்தொகை போன்ற பழந்தமிழ் நூல்களில் இருக்கின்றன.

'சிவம்', 'சைவம்' என்னும் இரண்டு சொற்களையும் தமிழில் முதன் முதல் வழங்கியவர் மணிவாசகரே என்றும், அவரே அம்பலவாணர் கோவிலை முதன் முதல் தில்லையில் நிறுவியவர் என்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

## தாய்க்குலம்

இவை நிற்க, ஒரு நாட்டின் பண்பாடும், அந்நாட்டு மக்களின் சிறப்பும் அங்கேயுள்ள தாய்மார்களாலேயே பெரும்பாலும் ஓம்பி வளர்க்கப்படும். இயல்பிலேயே பொறுப்புணர்ச்சிமிக்க தாய்மார்கள், இளமைமுதலே தக்க முறையில் கல்வி கேள்வி பழக்க வழக்கங்களில் சிறந்திருந்தாற்ருன் தம் வழியில் தோன்றும் மக்களை நன்முறையில் வளர்த்து, நாட்டுக்கும் மொழிக்கும் பண்பாட்டுக்கும் பயன்படும்படி செய்யமுடியும். அந்த அளவுக்கு கருவிலேயே திருவேற்றத்தக்க உணர்ச்சிச் சிறப்பு தாய்க்குலத்துக்கு இயற்கையிலேயே அமைந்திருக்கின்றது. ஔவையாரும், பெருங்கோப்பெண்டும், கண்ணகியும், கோப்பெருந்தேவியும், மணிமேகலையும், மங்கையர்க்கரசியும், திலகவதியும், காரைக்கால் அம்மையாரும் இத் தென்றமிழ் நாட்டில் தம் ஆற்றல் செய்துகாட்டிய மெய்திகழ் செய்திகள் போற்றத்தக்கன.

அன்னைக்குலம் ஆற்றல் மிக்கது என்பதற்கு இவர்கள் வரலாறுகளே சாலப் போதும்.

இப்படிப்பட்ட தாய்க்குலத்தில் வரும் குழந்தைகளை இளமைமுதலே ஒருமை நெறியிலும், உணர்ச்சிப்போக்கிலும் பழக்கி வளர்க்கவேண்டியது எவ்வளவு முதன்மையானது!

## பாவை நோன்பு

பாவை நோன்பு, பாவையர்களை—திருமணமாகாத கன்னிப் பெண்டிர்களை—மேதகவுடைய காதல் திறத்திலும், வையந் தழைய மழைவளங் கொழிக்கும் பொற்பின் மிக்க கற்பு நெறியிலும் பழக்குவதாக வன்றே இருக்கின்றது!

தெருள்நிறை அருள்நெறி தெளிந்து மன்னுயிர்கள் இன்புற்று வாழ, மழை நலம் சிறந்து மாநிலம் செழிக்க, கொள்கைப் பிடிப்புடை கொழுநரை மறந்து நல்லறமியற்றும் இல்லறம் நடாத்த விழைவார் மேற்கொள்வது பாவை நோன்பு என்பதற்கு மாணிக்கவாசகர் அருளியுள்ள திருவெம்பாவையில் குறிப்புகள் நிரம்பக் கிடக்கின்றன.

## நமது கடமை

பழந்தமிழ் நாட்டின் பண்பை ஓம்பும் முறையில் அக்கால இலக்கியவாழ்க்கை மரபுகளை அடிப்படையாக வைத்து ஒரு புதுவகை இலக்கியமாகத் திருவெம்பாவையை முதன் முதலிற் பாடியருளியவர் நமது மணிவாசகரே. அதையடுத்தே சூடிக்கொடுத்த நாச்சியார் என்னும் ஆண்டாள் அம்மையாரும் திருவெம்பாவையை நம் திருமால் நெறிச் செல்வர்களுக்காக அருளியிருக்கிருர்கள். ஆனல், இந்நாளில் இவ்விரு இலக்கியங்களுக்குவிழா நிகழ்த்தப்படுகின்றதேயல்லாமல், பாவை நோன்பு எடுக்கும் வழக்கம் நாட்டுமக்களிடத்தில் காணப்படவில்லை. அவர்கள் அவ்வழக்கத்தை மேற்கொள்ளவேண்டும்.

கன்னிப் பெண்களுக்கென அமைக்கப்படும் குருகுலங்களில் இந்த நோன்பைப் புகுத்தி வழக்கப்படுத்துவது நல்லது. அதோடு பாவைப் பாடல்களின் கருத்துக்களை ஆண்டு தோறும் அதற்குரிய மார்கழி நாளில் தக்க சான்ருேர்களைக் கொண்டு பலரும் கேட்கும்படி செய்வதும் சிறந்த பயனைத்தரும்.

மிகச் சிறந்த

அலுமினியப்

பாத்திரங்களுக்கு

எங்களிடம் வாருங்கள்

சி. வி. பாட்

டாம் வீதி, :: கொழும்பு.

# கன்னியாகுமரியின் பிரசாதம்

## அர்ச்சகர் மீது மந்திரி புகார்

கோவில் பிரசாதத்தை அர்ச்சகர் "தூக்கி எறிந்ததால்" இந்தியப் புகையிரதப் பகுதி உதவி மந்திரி எஸ். வி. ராமசாமிக்குக் கோபம் வந்துவிட்டது. இதைப்பற்றி தாம் இந்து தர்ம பரிபாலன சபைக்குப் புகார் செய்யப் போவதாகக் கூறிவிட்டு உணர்ச்சியுடன் கோவிலிலிருந்து திரும்பினர். அவர் மனைவியாரும் அவருடன் தரிசனத்திற்குச் சென்றிருந்தார்.

இச் சம்பவம் கன்னியாகுமரி கோவிலில் சென்ற வாரம் நடைபெற்றது. கோவில் நிர்வாகிகள் பின்னர் மந்திரியைக் கண்டு அக் கோவிலில் எல்லாருக்குமே அப்படித்தான் பிரசாதம் கொடுப்பது வழக்கமென்றும் இது அவமதிப்பது அல்ல என்றும் சமாதானம் கூறினர்கள்.

என்ருலும் மந்திரிக்கு ஆத்திரம் தணியவில்லை. பின்னர் நாகர் கோவிலில் நடைபெற்ற வழக்கறிஞர் மாநாட்டில் இதைப் பற்றிப்புகார் கூறி, தீண்டாமை ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றியும் அது அமுலில் வரவில்லை என்று வருந்தினர்.

வழக்கறிஞர் மாநாட்டுக்கு இது சம்பந்தமில்லை என்று அட்வகேட் ஜெனரல் கூறவே, தாம் மனிதன் என்ற முறையிலேயே இதைப் பிரஸ்தாபித்ததாயும் மந்திரி என்ற முறையில் கூறவில்லை என்றும் உணர்ச்சியுடன் கூறினர்.


தமக்கும் இவ்வாறே பிரசாதம் கிடைத்ததாயும், இதில் வேற்றுமை எதுவுமில்லை என்றும் மற்ருெருவர் கூறவே கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டது. மந்திரி பேச எழுந்தார். கூச்சல் அடங்கவில்லை. தலைவர் சமாதானம் செய்யமுயன்றும் பயனில்லாததால், மந்திரி ராமசாமி தமது பேச்சை அத்துடன் முடித்து மாநாட்டு மண்டபத்திலிருந்து வெளியேறினர்.

## கிளிநொச்சிப்பகுதியில் சாதனைவாரக்கொண்டாட்டம்

கிளிநொச்சி திருநெறிக்கழகம் கரைச்சிப்பிரிவின் பலபாகங்களிலும் 9-1-60 தொடக்கம் 5 தினங்களுக்கு பஜனை ஊர்வலம், கூட்டுப்பிரார்த்தனை, சைவ சமயப் பிரசாரங்கள் நடைபெறுகின்றன.

உருத்திரபுரம், பரந்தன், ஜெயந்திநகர், முரசுமோட்டை, தருமபுரம், வட்டக்கச்சி, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் இக் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. இந்நாட்களில் எல்லா இடங்களிலும் சைவப் பெரியார்கள் விரிவுரைகள் ஆற்றிவருகின்றனர். கிளிநொச்சி அரசினர்பாடசாலையில் யோகாசன வகுப்பும் நடாத்தப்படும். கிளிநொச்சிப்பகுதி சைவமக்களிடையே சமய மறுமலர்ச்சியும் ஆத்மீக உணர்வும் உண்டாதற் பொருட்டு இது போன்ற சாதனைவாரக் கொண்டாட்டங்களைச் சென்ற 7 வருடகாலமாக இக்கழகம் நடாத்தி வருகிறது. மேலும் 27-1-60 இல் கரைச்சிப்பகுதி மாணவர் பேச்சுப் போட்டி ஒன்றையும் நடாத்துகிறது. இதன் பரிசளிப்பு விழாவிற்குப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை பங்குபற்றுவார்.

## உண்மைக் கதைகள்: பனுமாக் கால்வாய் - I



**பனுமாக் கால்வாய்:** "பெரிய கால்வாய்" என அழைக்கப்படும் பனுமாக் கால்வாயே, உலகின் மிகப் பெரிய கால்வாயாகும். அத்துடன் மனிதனின் மாபெரும் சாதனைகளுள் ஒன்ருகவும் அது விளங்குகின்றது. கடல் மூலம் போக்குவரத்துச் செய்வதற்கு இக் கால்வாய் மிகவும் உதவியாகவிருக்கின்றது.



**யோசனை:** இந்தியாவுக்குச் செல்வதற்கு ஒரு வழியைத் தேடி அலைந்த ஆராய்ச்சியாளர்கள், அந்தக்காலந் தொட்டே ஒரு யோசனை கொண்டிருந்தனர். அது தான், மத்திய அமெரிக்காவினூடாக, அத்லாந்திக், பசிபிக் சமுத்திரங்களை இணைக்கும் ஓர் கால்வாயை வெட்டுவதென்பது. *1513*-ஆம் ஆண்டில், ஸ்பாணியரான பல்போவா என்பவர் பசிபிக் சமுத்திரத்தைக் கண்டு பிடித்தார்.



**முதல் முயற்சி:** *1876*-ஆம் ஆண்டில் பனுமாக் கால்வாயை ஆக்குவதற்கான முதல் முயற்சி எடுக்கப்பட்டது. பேர்டினண்ட் லெஸெப்ஸ் என்னும் பிரெஞ்சுக்காரரின் தலைமையின் கீழ், அத்லாந்திக், பசிபிக் சமுத்திரங்களை இணைக்கும் கால்வாயை வெட்டும் பெரும் பணி ஆரம்பமாகியது.

(தொடரும்

# சிறுவர் பகுதி

## இன்பப் பொங்கல்

**தைப்** பொங்கல் தமிழர் திருநாள். வீடுகளில் எல்லாம் பொங்கற் பானை பூரித்து வழியும். அனைவரின் உள்ளங்களிலும் இன்பம் பொங்கித் ததும்பும். அழகிய கோலம் அனைவரையும் வரவேற்கும்.

ஆண்டு தோறும் தமிழர் இல்லங்களில் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படும் பொங்கல் விழா சிறுவர் சிறுமியருக்கு அளவிலா ஆனந்தத்தைத் தருவதாகும். விடியற் காலை படுக்கையிலிருந்தபடியே சர்க்கரைப் பொங்கலின் இனிமையை எண்ணி, தம்பி, தங்கைமார் இன்பமடைவார்கள்.

காலை விடிந்ததும், அவர்களுக்கு ஒரே உற்சாகம் தான்! தமது பட்டாசுகள், வெடிகள் மத்தாப்புக்கள் எல்லாவற்றையும் கொளுத்தி ஆடிப்பாடி மகிழ்வர். ஆனல், அந்த மகிழ்ச்சியிலும் அவர்கள் ஒன்றை மாத்திரம் மறந்துவிட மாட்டார்கள். அதுதான் தித்திக்கும் பாற் பொங்கல்.

இப் பொங்கல் தினத்தில் பாலர்களின் உள்ளங்களில் இன்பம் பொங்கட்டும்.

## நல்ல நாள்

—அழகனர்—

மாடு கன்று காளைகள்
மகிழ்வு கொண்டு ஓடிடும்;
பாடு பட்ட உழவனே
பெருமை கொண்டு மகிழுவான்!

வீடு நிறையப் பண்டமே
விளங்கு கின்ற நல்ல நாள்;
ஓடும் காளை கன்றுகள்
உவகை கொள்ளும் நல்ல நாள்!

தம்பி தங்கை யாவரும்
தமக்குப் பிடித்த உடையுடன்
இன்ப மோடு எங்குமே
இருக்கும் இனிய நல்ல நாள்!

புதிய பானை தன்னிலே
பொங்கு கின்ற பால் என
அதிக அன்பு நம்மிடம்
அதிக ரிக்கும் நல்ல நாள்!

அங்கும் இங்கும் எங்கணும்
அழகைத் தந்த நல்ல நாள்;
பொங்கல் என்னும் நல்ல நாள்;
பெருமை மிக்க நல்ல நாள்!

சிறுவயதிலே பெரியவர்கள்:

## மகாத்மா காந்தி

(சு. சிவமலர் — பதிவு எண். 490)

நம் நாட்டில் பல பெரியார்கள் இருந்தார்கள். அவர்களுள் மகாத்மா காந்தியும் ஒருவர் ஆவர். அவர் சிறந்த அறிவாளி, அன்பு மிகுந்தவர். அவர் ஒருமுறை தந்தையிடம் பொய் பேசிவிட்டார். அதற்காக அவர் மிகவும் வருந்தினர். காந்திக்குநண்பர்ஒருவர் இருந்தார். நண்பருடன் கூடிக் கொண்டு வெளியே சென்ருர். வெளியேசென்றகாந்தி திரும்பி வந்தார். தந்தையிடமும் தாயிடமும் ஏதோ பொய் சொன்னர். இப்படிப் பொய் சொல்லிவிட்டு பின்பு அவர் தாம் செய்தது குற்றம் என்று கண்டார். தமது மனத்துக்குள் வருந்தினர். என்ன செய்யலாம் என்று யோசித்தார்.பின்புகாந்திதமது குற்றத்தை ஒரு கடிதத்தில் எழுதினர். அதைத் தந்தையிடம் கொடுத்தார். அக் கடிதத்தில் தனது குற்றத்தைப்பற்றி எழுதியிருந்தார். 'தந்தையே, தாங்கள் என்னை அன்புடன் வளர்த்துவந்தீர்கள். என் நன்மைக்கே எப்பொழுதும் பாடுபடுகிறீர்கள். ஆனல் தங்கள் அன்புக்கு மாருக நடந்துவிட்டேன். நான் தங்களிடம் பொய் பேசிவிட்டேன். நான் செய்த குற்றத்தை நானே உணர்கிறேன். குற்றத்தைச் செய்ததற்காக மனம் வருந்துகிறேன். தாங்கள் என் குற்றத்துக்காக என்ன தண்டனை விதித்தாலும் ஏற்றுக்கொள்கிறேன். என்னை மன்னித்துவிடுங்கள். தாங்கள் என்னை மன்னித்ததாகக்கூறும் வரை என்மனம் ஆறுதல் அடையாது. இனி எப்படிப்பட்ட குற்றமும் செய்யமாட்டேன்' என எழுதினர். காந்தியின் தந்தை கடிதத்தைப் படித்தார். அவர் ஒன்றும் பேசவில்லை. முன்னேநின்ற காந்தியை அன்புடன் பார்த்தார். கண்ணீர் சிந்தினர். காந்தியை அருகில் அழைத்தார். தமது தந்தையின் மன்னிப்புக் குணத்தைக் காந்தி கண்டார். அன்றுமுதல் காந்தி பொய் பேசும் பழக்கத்தைக் கைவிட்டார்.

செல்வக் குழந்தைகளே!

எனது மருமக்கள் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள். பொங்கல் திருநாளை உழவர் திருநாள் என்றும் சொல்வார்கள். ஆம், உழவர்களின் உழைப்புத்தான் உலக மக்களுக்கு உணவு அளிக்கின்றது. இந்த நல்ல நாளில் அவர்களுக்கு நன்றி கூறி இறைவனை வணங்குவோம். பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

சின்னமாமா

## நான் பிரதமரானுல்....

(வி. ஜி. சங்கரப்பிள்ளை — பதிவு எண். 53)

உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் தான் உயர்ந்த பதவி வகிக்க வேண்டும் என்ற ஆசையுண்டு. இது மனித இயற்கை. எனக்கும் பிரதமராக இருக்க வேண்டும் என்ற ஆசையுண்டு.

நான் பிரதமரானுல் முதலில் அமைதியை நிலைநாட்டுவேன். அதன் பின், உணவுப் பொருள்கள் முக்கியமானதாகையால், விவசாயத்தை விருத்தி செய்து மக்களுக்குத் தேவையான உணவை இலங்கையிலேயே உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்வேன்.

உடை உற்பத்தி செய்வதற்காக இலங்கையெங்கும் நெசவு சாலைகளை உண்டாக்குவேன். உடைக்கு வேண்டிய பருத்தியை இலங்கையிலேயே உற்பத்தி செய்வேன். இதன் மூலம் அன்னிய செலாவணியைக் குறைப்பேன். உடைகளை மக்களுக்குக் குறைந்த விலைக்குக் கொடுப்பேன்.

மக்கள் சௌகரியமாக இருப்பதற்கு வேண்டிய வீடுகளைக் கட்டுவேன். இவைகளை மிகவும் குறைந்த வாடைக்குக் கொடுப்பேன். நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பேன். போக்கு வரத்து வசதியைச் சீர்படுத்துவேன். மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பேன்.

நாட்டிலே சாதி, சமய வேறுபாடுகளை அகற்றுவேன். குந்தியிருந்து வயிறு வளர்த்துக் கொண்டு தொழிலாளரைக் கஷ்டப்படுத்தும் முறையை ஒழிப்பேன். அந்நியரைச் சொந்த நாட்டுக்கு வரவிடாமல் படைப்பலத்தை அதிகரிப்பேன். உள்நாட்டுப் பகைவரையும் தேசத் துரோகிகளையும் தண்டிப்பேன்.

## நல்லறிவு பரப்பும் நூல் நிலையங்கள்

(ம. இரத்தினசபாபதி-ப.எ. 202)

மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு நல்லறிவு வேண்டும். நல்லறிவைப் பெறுவதற்கு நூல்களும் சிறந்த துணையாகின்றன. அதனுல் சிறந்த நூல்களைச் சேகரித்து யாவருக்கும் பயன்படும்படி வைத்தல் நன்மையாகும். பலருக்கும் பயன்தரும்படி நூல்களைச் சேர்த்து வைக்குமிடம் நூல் நிலையமாகும்.

உலகத்தில் நாள்தோறும் பல மாற்றங்களும் விருத்திகளும் ஏற்பட்டுக் கொண்டிருத்தலைக் காண்கிறோம். புதுப்புது விஷயங்கள் நிறைந்த புத்தகங்கள், பத்திரிகைகள் தினந்தோறும் வெளியாகின்றன. அவற்றை யாவரும் விலை கொடுத்து வாங்கிப் படித்தல் முடியாத காரியமாகும். ஆதலாற் பொது நிதி திரட்டிக் கிராமங்களில் நூல் நிலையம் அமைத்தல் இன்றியமையாத தொண்டாகும்.

நூல் நிலையத்தில், பாலர் இளைஞர், முதியோர் ஆகிய எல்லாத்திறத்தினருக்கும்ஏற்ற நூல்களிருத்தல் வேண்டும். பழைய பண்பாடுகளை அறிவிக்கும் நூல்களும் புது விருத்திகளை விளக்கும் நூல்களும் இருத்தல் வேண்டும். அறிவுக்குரிய சஞ்சிகைகளும் வெளியீடுகளும், மக்கள் அமைதியாக இருந்து படிக்க வசதியான ஆசனங்களும் நல்ல சூழ்நிலையும் இருக்க வேண்டும்.

ஓர் ஊரில் ஒரு நூல் நிலையம் இருந்தால் அவ்வூரிலுள்ள மக்கள் சீர்திருந்தியவர்களாகவும், அறிவுடையவர்களாகவும் சமாதானமாக வாழுபவர்களாகவும் இருப்பார்கள்.

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

★ ஈழநாடு சிறுவர் பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் இங்கு வெளியாகும் விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி 16-1-60க்கு முன்னர் சின்னமாமா, 'ஈழநாடு சிறுவர்பகுதி', தபாற்பெட்டி எண் 49, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துக்கு அனுப்பவேண்டும்.

இங்கே வெட்டவும்

### ஈழநாடு சிறுவர் பகுதி

விண்ணப்பப் பத்திரம்
(9-1-60)

அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு
வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னை ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்..........................................

விலாசம்......................................

..............................

..............................

கையொப்பம்

பெற்ருர் அல்லது
ஆசிரியரின் கையொப்பம். வயது............

இங்கே வெட்டவும்

# கிழக்கு மாகாணத் தேர்தல் தொகுதிகள்

## 9 தொகுதிகளுக்கு 11 பிரதிநிதிகள்

— பொ. கிருஷ்ண சுவாமி —

[சென்றவாரத் தொடர்ச்சி]

### தொகுதி இல. 88 மூதூர்.

இத் தொகுதியின் எல்லைகள்: வடக்கில் கட்டுக்குளம் பற்றும் கடலும், கிழக்கில் கடல், தெற்கில் கோருளைப் பற்றும் வட மத்திய மாகாணமும், மேற்கில் வட மத்திய மாகாணமுமாகும்.

கொட்டியார் பற்றுவின் பிரிவுகளான, பச்சிலம்பற்றை, மல்லிகைத் தீவு, தோப்பூர், சம்பூர், கட்டைபறிச்சான், மூதூர் கிராம சங்கப் பிரதேசமும், தம்பலகாமம் பற்றுவைச் சேர்ந்த கின்னியா, கந்தளாய், தம்பலகாமம், துறைமுகக் கிராமங்கள் ஆகியவை இதனுள்ளடங்கும்.

இங்கு வாழும் 78,000பேரில் 76,400 பேர் வாக்காளர். இங்கு 49 சதவிகிதம் சோனகரும், 33. 2 சதவிகிதம் தமிழரும், 15. 1 சதவிகிதம் சிங்களரும் வாழ்கின்றனர். இவர்களில் 49. 9 சதவிகிதம் முஸ்லிம்களும், 32.3 சதவிகிதம் இந்துக்களும், 14.2 சதவிகிதம் பௌத்தருமாவர்.

இத் தொகுதி இரண்டு பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும்.

### மட்டக்களப்பு மாவட்டம்

இப் பகுதியில் கரையோரங்கள் மாத்திரமே சனச் செறிவுடன் காணப்படுகின்றன. விந்தனைப் பற்று, கல்ஓயா பள்ளத்தாக்கு ஆகிய உள்ளூர்ப் பிரதேசங்கள் சனச் செறிவுடன் இருக்கின்றன. இம்மாவட்டத்திலே இலங்கைத் தமிழரும், சோனகருமே பெரும்பான்மையினர். காத்தான்குடி, கல்முனை, நிந்தவூர், அக்கரைப்பற்று, பொத்துவில் ஆகிய பகுதிகளில் முஸ்லிம்கள் அதிகமாக வாழ்கின்றனர். எனவே இங்குள்ள தொகுதிகளும் இதக்கேற்ப நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. மட்டக்களப்பு-ஏருவூர் தொகுதியில் தமிழரும் சோனகரும் நிறைந்திருப்பதால் இது இரு பிரதிநிதிகள் தொகுதியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

விந்தனைப்பற்றுவில் வாழும் 8900 சிங்களவர்கள் இதுகாறும் தாங்கள் தமிழ் தொகுதியாகிய மட்டக்களப்பில் வாக்காளர்களாக இருந்ததாகவும், ஆனல் ஏதேனும் சிங்களத் தொகுதியில் சேர்க்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர். இதற்கேற்ப இப் பகுதி புதிய தொகுதியாகிய அம்பாறையுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

### தொகுதி இல. 89 கற்குடா

வடக்கில் திருக்கோணமலை மாவட்டமும், கிழக்கில் கடலும், ஏருவூர் பற்றின் எஞ்சிய பாகங்களும், தெற்கில் ஏருவூர் பற்றின் எஞ்சிய பாகமும் விந்தனைப் பற்றும், மேற்கில் வட மத்திய மாகாணமும் இதன் எல்லைகள்.

ஏருவூர் வடக்கு கிராம சங்கப் பிரிவும், கோராளை தெற்கு, மத்திய கோராளை, கோராளை வடக்கு கிராம சங்க வட்டாரம் ஆகியவை இத் தொகுதியில் அடங்குகின்றன.

இங்கு வாழும் மக்கள் தொகை 41,800. இவர்களுள் 41,400 வாக்காளர். 64.2 சதவிகிதம் தமிழரும், 30.6 சதவிகிதம் சோனகரும், 4.2 சதவிகிதம் சிங்களவருமாவர். இவர்களில் 63.6சத விகிதமானேர் இந்துக்கள், 30.6 சதவிகிதம் முஸ்லிம்கள், 3.1 சதவிகிதம் கிறிஸ்தவர்கள்.

### தொகுதி இல. 90 மட்டக்களப்பு

இத் தொகுதியின் எல்லைகளாக வடக்கில் ஏருவூர் பற்றின் ஒரு பகுதியும், கிழக்கில் கடலும், தெற்கில் எருவில் போரைத் தீவு, மான் முனைப் பற்று தெற்கு, வேவகம் பற்று, விந்தனைப் பற்றின் ஒரு பிரிவு மேற்கில் விந்தனைப் பற்றின் எஞ்சியுள்ள பகுதியும், ஏருவூர் பற்றின் ஒரு பகுதியும் அமைந்துள்ளன.

விந்தனைக் கிராம சங்க வட்டாரத்தின் ஒரு பகுதியும், மண் முனை, கிராம சங்க வட்டாரமும், எருவில் கிராமசங்க வட்டாரம், காத்தான்குடி பட்டினசபை வட்டாரம், மட்டக்களப்பு நசரசபை வட்டாரம், ஏருவூர் தெற்கு கிராமசங்க வட்டாரம், ஏருவூர் பட்டினசபை வட்டாரம் ஆகியவை இத் தொகுதியிலுள் அடங்கும்.

இங்கு வாழும் மக்கள் தொகை 80,600. இவர்களுள் 79,400 பேர் வாக்காளர். 55.3 சதவிகிதம் தமிழரும், 36 சதவிகிதம் சோனகரும், 5.2 சதவிகிதம் சிங்களவருமாவர். 47.4 சதவிகிதம் இந்துக்களும், 36.3 சதவிகிதம் இஸ்லாமியரும், 12.3 சத விகிதம் கிறிஸ்தவரும் இருக்கின்றனர்.

இத் தொகுதியும் இரு பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும்.

### தொகுதி இல 91 அம்பாறை

அம்பாறைத் தொகுதியின் எல்லைகள். வடக்கில்: வடமத்திய மாகாணம், ஏருவூர் பற்று, விந்தனைப் பற்றின் ஒரு பகுதியும், எருவில் போரைத் தீவு மண்முனைப்பற்று தெற்கு. கிழக்கில்எருவில்போரைத்தீவு, மண்முனைப்பற்று தெற்குஆகியவற்றின் பகுதிகளும் சம்மாந்துறைப் பற்றும், அக்கரைப்பற்றும், தெற்கில் பானமப்பற்று, ஊவா மாகாணம், மேற்கில் ஊவா மாகாணமும் மத்திய மாகாணமும்.

விந்தனை தெற்கு கிராம சங்க வட்டாரம், விந்தனை வடக்கு கிராமச் சங்க வட்டாரம், கொத்மலை கூட்டுறவுச் சங்கப் பிரிவு, 20, 31, 32 ஆகிய கல்ஓயா அபிவிருத்திச் சபை கிராமங்களின் பிரிவுகள், வேவகம்பற்று, சுங்கத்துறை விதானையின் 85ஆம் இலக்கப் பிரிவு வரிப்பத்தன சேனை, வளத்தாப்பிட்டி, கொண்டவட்டவான், காணன்காடு, அம்பாறை கிராம விதானையின் 89ஆம் இலக்கப் பிரிவு, மல்வத்தை, கல்ஓயா அபிவிருத்திச் சபையின் 3ஆம், 9ஆம் 10ஆம், 17ஆம், 18ஆம்,19 ஆம், 26ஆம் இலக்க கிராமங்களும் 16ஆம், 20ஆம் இலக்க கிராமங்களின் சில பகுதிகளும் இதிற் சேரும்.

இத் தொகுதியில் வாழும், 59,500 பேரில் 59,300 பேர் வாக்காளர். இவர்களில் 90.9 சதவிகிதம் சிங்களவரும், 6.3 சதவிகிதம் தமிழரும், 2சதவிகிதம் சோனகரும் இருக்கின்றனர். இவர்களில் 90.7 சதவிகிதமானேர் பௌத்தர்கள், 5.8 சதவிகிதம் இந்துக்கள். 2 சதவிகிதம் முஸ்லிம்கள்.

### தொகுதி இல. 92 பட்டிருப்பு

வடக்கில் மண்முனைப்பற்று வடக்கும், கிழக்கில் கடலும், தெற்கில் கரவாகு, நிந்தவூர் பற்று இவைகளின் பிரிவும், எருவில் போரைத் தீவு, மண்முனைப்பற்று தெற்கும், மேற்கில் எருவில் போரைத் தீவு, மண்முனைப்பற்று தெற்கு, வேவகம்பற்று ஆகியவற்றின் எஞ்சிய பாகங்களும் இதன் எல்லைகள்.

வட கரவாகு, கரவாகு மேற்கு கிராமச் சங்கத்தின் பிரிவுகளும், மண்முனை தென் மேற்கு கிராம சங்க வட்டாரமும், மண்முனை தென்கிழக்கு, எருவில் கிராமக்குழு வட்டாரமும், கல்ஓயா அபிவிருத்தி சபையின் 20ஆம் இலக்க கிராமத்தின் ஒரு பகுதியும், 31, 32, 36ஆம் இலக்க கிராமங்களும் இதனுள்ளடங்கும்.

இங்கு வாழும் 46,700 பேரில் 46,600 பேர் வாக்காளர். இவர்களில் 95.4 சதவிகிதம் தமிழரும், 2.8 சதவிகிதம் சோனகரும், 1.5 சதவிகிதம் சிங்களவரும் வாழுகின்றனர். இவர்களில் 92.3 சதவிகிதம் இந்துக்களும், 3.3 சதவிகிதம் கிறிஸ்தவர்களும், 2.9 சதவிகிதம் முஸ்லிம்களும் உளர்.

### தொகுதி இல: 93 கல்முனை

கரவாகு, நிந்தவூர் பற்றுகளின் எஞ்சிய பகுதி வடக்கிலும், கிழக்கில் கடலும், கரவாகு நிந்தவூர் பற்றுகளின் ஒரு பகுதி தெற்கிலும், மேற்கில் சம்மாந்துறைப் பற்றும் கல்முனைத் தொகுதியின் எல்லைகளாகும்.

கரவாகு தெற்கு கிராம சங்க வட்டாரம், வடக்கு, மேற்கு கரவாகு கிராமசங்கங்களின் பிரிவுகள், கல்முனைப் பட்டினசபை வட்டாரம் ஆகியவை இதன் பகுதிகள்.

இங்கு வாழும் 39,300 ஜனங்களில் 39,100 பேர் வாக்காளர்கள். இவர்களில் 68.1 சதவிகிதம் சோனகரும், 27.8 சதவிகிதம் தமிழரும், 1.9 சதவிகிதம் சிங்களருமாவர். இஸ்லாமியர் 68.6 சதவிகிதமும், 25.7 சத விகிதம் தமிழர்களும், 3.9 சத விகிதம் கிறிஸ்தவரும், 1.7 சதவிகிதம் பௌத்தரும் வசிக்கின்றனர்.

### தொகுதி இல: 94 நிந்தவூர்

வடக்கில் கரவாகு, நிந்தவூர் பற்றுகள் எஞ்சிய பாகங்களும், கிழக்கில் கடலும், தெற்கில் அக்கரைப்பற்றுவின் ஒரு பாகமும், மேற்கில் அக்கரைப்பற்று, சம்மான்துறைப்பற்று ஆகியவற்றின் எஞ்சிய பகுதிகளும் இதன் எல்லைகள்.

அக்கரைப்பற்று வடக்கு, மத்திய அக்கரைப்பற்று கிராம சங்க வட்டாரம், நிந்தவூர், காரைதீவு கிராம சங்க வட்டாரங்கள், கரவாகு, நிந்தவூர் கிராம விதானையின் 37ஆம் பிரிவு, நிந்தவூர் 38, 39, 41, 42, 43, 44, 45ஆம் இலக்க பிரிவுகள், இத் தொகுதியின் பிரிவுகள்.

இங்குள்ள மக்கள் தொகை 47,200. வாக்காளர்கள் தொகை 46,900. இவர்களில் 69.7 சத விகிதம் சோனகரும், 27.6 சத விகிதம் தமிழரும், 1.8 சதவிகிதம் சிங்களவரும் வசிக்கின்றனர். 69.8 சத விகிதமானேர் இஸ்லாமியர், 27.3 சத விகிதமானேர் இந்துக்கள், 1.8 சதவிகிதம் பௌத்தர்களுமாவர்.

### தொகுதி இல: 95 பொத்துவில்

எருவில்போரைத்தீவு,தெற்கு மண்முனைப்பற்று ஆகியவை வடக்கிலும், கிழக்கில் கரவாகு நிந்தவூர் பற்றும், அக்கரைப் பற்றின் ஒரு பிரிவும், கடலும், தெற்கில் தென்மாகாணமும், மேற்கில் ஊவாமாகாணம், வேகம்பற்று,சம்மாந்துறையின் எஞ்சியுள்ள பகுதிகள் இதன் எல்லைகளாகும்.

பானம, பொத்துவில் கிராம சங்க வட்டாரம், தெற்கு அக்கரைப்பற்று கிராமசங்க வட்டாரம், சம்மாந்துறை பட்டின சபைப்பிரிவு, கல்லோயா அபிவிருத்திச்சபையின் 3, 9, 10, 17, 18, 19, 26ஆம் இலக்க கிராமங்கள் ஆகியவை இதன் பிரிவுகள்.

இங்குவாழும் 41,600 பேரில், 41,400 வாக்காளர் உளர். இவர்களில் 56 சத விகிதம் சோனகரும், 32.8 சத விகிதம் தமிழரும், 7.6 சத விகிதம் சிங்களருமாவர். 56 சத விகிதம் இஸ்லாமியரும், 32.8 சத விகிதம் இந்துக்களும், 7.5 சத விகிதம்பௌத்தர்களும்,3.6 சத விகிதம் கிறிஸ்தவரும் இங்கிருக்கின்றனர்.

[ஆதாரம்: தொகுதி நிர்ணய கொமிஷன் அறிக்கை.]





உத்தரவாதமுள்ள

ஜெயிஸ் பிளூயிட்

நெருப்புத் தண்ணீரையே வாங்குங்கள்.

'ஜெயிஸ்'

— மார்க்கையும் --

'உதய சூரியன்'

அடையாளத்தையும் தாங்கிய லேபிளையும் மூடியையுமுடைய

ஜெயிஸ் பிளூயிட்

நெருப்புத் தண்ணீரே சிறந்தது.


கண்ணோட்டம் 22

## வதந்தீ பரப்பும் வல்லுநர்!

யாழ்ப்பாணம்-கொழும்பு விபத்தைப் பற்றிய செய்திகள் யாழ்ப்பாணத்தில் பல்வேறு விதமாகப்பரவின. இறந்தவர்களின் தொகை நூற்றுக்கணக்கில் கூறப்பட்டது. விபத்து நடைபெற்றதற்கான காரணங்களும் விதம் விதமாகப் புனையப்பட்டன; புனையப்படுகின்றன. சிலர் அரசியல் சதி என்று சொல்லுகிறார்கள்; சிலர் கொள்ளைக் கூட்டத்தார்செய்த வேலை என்கிறார்கள்.

இவ்வளவுக்கும், இறந்தவர் ஒருவரே. காயமுற்றவர் சிலரே. உண்மை இவ்விதம் இருக்கையில், பொய் வதந்திகள் பரப்புவதில் என்ன பலன் உண்டு? இதனல் யாருக்கு லாபம்? எத்தனையோ குடும்பங்கள் விபத்தைப் பற்றிக்கேள்விப்பட்டதும், நிலைகுலைந்து தவித்தனர். ஏனெனில், அவர்களுடைய நண்பரோ அல்லது உறவினரோ அந்த ரயிலில் பிரயாணம் செய்திருப்பார்கள். நூற்றுக்கணக்கில் மக்கள் உயிரிழந்துவிட்டனர் என்ற செய்தியைக் கேட்டதும், இவர்களுடைய உள்ளங்கள் எவ்வளவு வருத்தமடைந்திருக்கு மென்பதை, வதந்திகளை விநியோகம் செய்யும் விற்பன்னர்கள் உணரவில்லைப் போலும்!

இலங்கையில் வகுப்புக்கலவரங்கள் நடந்த காலத்தில் கூட, இந்த மாதிரியான புளுகுக் கதைகளும், புரட்டுப் பேச்சுக்களும் கலகத்திற்குப் புத்துயிர் அளித்து, அதன் ஆயுட்காலத்தை நீடித்தன. பல இடங்களில் விஷமிகளின் வதந்திகளே கலகம் எழுவதற்குக் காரணமாக அமைந்தன.

இந்த வதந்திகூறும் வல்லுநர்கள் ஒரே ஒரு உண்மையை மனத்தில் வைத்துக் கொண்டால் நலம். வதந்திகளினல் அவற்றைக் கூறுபவருக்கு எவ்விதநன்மையும் கிடைக்கப் போவதில்லை. அதே நேரத்தில், வதந்திகளைப் பரப்புபவர்கள், தமது போலி வேஷம் எந்த நேரமும் கலைந்தெறியப் படுமென்பதையும் உணர வேண்டும்.

# "தோட்டத்துரை வாக்குறுதியை மீறிவிட்டார்"

## செபஸ்தியான், லட்சுமி: வேலையும் நஷ்ட ஈடும் கைத்தொழில் நீதிமன்றத் தீர்ப்பு

வகாரக்கையிலுள்ள மாகலை தோட்டத்துரைக்கும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரசுக்குமிடையில், குறித்த தோட்டத்தைச் சேர்ந்த செபஸ்தியான், மனைவி லட்சுமி ஆகிய இரு தொழிலாளர் வேலை நீக்கம் செய்யப்பட்டது சம்பந்தமாக எழுந்த தகராறு, கைத்தொழில் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டது. நீதிமன்றத்தலைவர் திரு. ஆர். எல். புரோஹியர் தமது தீர்ப்பில், இவ்விருவரையும் வேலைநீக்கம் செய்தது முறையற்ற செயல் என்றும், அவர்களை உடனே மீண்டும் வேலையில் அமர்த்தும்படியும் கட்டளையிட்டிருக்கிறார்.

"260 ஏக்கர் விஸ்தீரணமுள்ள மாகலை றப்பர் தோட்டம் கடந்த 4 வருடங்களாக தற்போதைய முதலாளிகள் கையில் இருந்துவருகிறது. ஆனால், செபஸ்தியானும் லட்சுமியும் கடந்த 8 வருடங்களாக அதில் தொடர்ச்சியாக வேலை செய்து வந்தவர்கள். பொதுவாக, இத் தோட்டத்தின் நிர்வாகம் சரிவர நடைபெறவில்லை என்ற ஒரு அபிப்பிராயம் நிலவியிருக்கிறது.

1958ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி பெரிய குடும்பசாலியான செபஸ்தியானை அவன் 4 வருடங்களாகத் தங்கியிருந்த 'லயக் காம்பரா'வை விட்டு ஒரு சிறிய காம்பராவுக்கு மாற்றும்படி தோட்டத்துரை கட்டளையிட்டிருக்கிறார். செபஸ்தியான் இதை ஆட்சேபித்து முறையிட்டான். இதுவொன்றையும் கவனியாது தோட்டத்துரை காவலாளி பியதாசைக்கொண்டு செபஸ்தியானை வெளியேற்ற முயன்றார். இதைத் தொடர்ந்து ஏற்பட்ட கலகத்தில் செபஸ்தியானும் அவனது புத்திரர்கள் இருவருமாகச் சேர்ந்து காவலாளியை அடித்துப்போட்டனர். இது பொலிஸ் வழக்காகிற்று. இதற்கிடையில் மார்ச் மாதம் 11ஆம் திகதி வேலையை விட்டுப் போகுமாறு செபஸ்தியானுக்கு ஒருமாத நோட்டீஸ் வழங்கப்பட்டது.

"இதுசம்பந்தமாக அவிசாவலை உதவி தொழில் கொமிஷனர் ஒரு மாநாட்டை 1958ஆம் ஆண்டு ஜூலை 21ஆம் திகதி கூட்டினார். தோட்ட முதலாளிகளும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டனர். பொலிஸ்வழக்கு நடக்கிறபடியினால், தீர்ப்பை நீதிமன்றத்துக்கு விட்டுவிடுவதென்றும், செபஸ்தியான் சுற்றவாளி என்று கண்டுபிடிக்கப்பட்டால் வேலையைத்திருப்பிக்கொடுத்து சம்பள நஷ்டஈடு கொடுப்பதென்றும் முதலாளிகள் ஒப்புக்கொண்டனர். பொலிஸ் வழக்கில் செபஸ்தியான் முதலிய எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர். இதை ஜனநாயக காங்கிரஸ் தோட்டத்துரைக்குச் சுட்டிக்காட்டியபோது, அவர் தமது முந்திய வாக்குறுதியை நிறைவேற்ற மறுத்துவிட்டார்.

"பொலிசாரால் செபஸ்தியான்மீது குற்றம் காணாதிருந்தும், தோட்டத்துரை தனது வாக்குறுதி மொழியை மீறியது சரியா என்பதையே இக் கைத்தொழில் மன்றம் ஆராய்ந்தது. இது சம்பந்தமாகத் தோட்டத்துரை கூறிய சாட்சியத்தில் எனக்கு அவ்வளவு நம்பிக்கையுண்டாகவில்லை. தொழில் பகுதி உத்தியோகஸ்தர்களோடும் அவர் நேர்மையாக நடந்து கொள்ளவில்லையென்பது வெளிப்படுகிறது. அவருடைய சாட்சிகளும் சாதகமாயில்லை".

"தோட்டத்துரை மகாநாட்டில் உறுதி கொடுத்ததுபோல நடந்திருக்க வேண்டும். அவர் அப்படிச் செய்யாதுவிட்டது தவறு. ஆகையால் செபஸ்தியானையும் லட்சுமியையும் மறுபடியும்வேலைக்கெடுத்து சம்பள நஷ்டஈடும் கொடுக்கவேண்டுமென்று நான் உத்தரவிடுகிறேன். அவனுக்குச் சேரவேண்டிய தொகையை உதவி தொழில் கொமிஷனர் கணக்கிட்டு அவர் மூலமாகவே பணம் செலுத்தப்படவேண்டும்."

மேற்கண்டவாறு திரு. புரோஹியர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### சலவை—சலூன் தொழிலாளர் கூட்டம்

— அப்புத்தளை நிருபர் —

சமீபத்தில் பண்டாரவளை அர்ச். சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் தோட்ட சலவை-சலூன் தொழிலாளர் யூனியனின் வருடாந்த தேர்தல் கூட்டம் மாவட்ட தலைவர் திரு. என். சிங்காரம் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் திரு. ஆர். எம். மருதமுத்து குறிப்பிட்டதாவது:

"கடமையுணர்ச்சியுடனும் கட்டுப்பாட்டுடனும் நாம் உழைத்தால்தான் நமது இலட்சிய உரிமைப் போராட்டம் வெற்றி பெறும். இப்போதுள்ள கட்டுப்பாடு என்றுமே நிலவுமென நம்புகிறேன்." யூனியன் பொதுச் செயலாளர் திரு. ஆர். எம். பெருமாளும், அப்புத்தளை மாவட்ட இ. தொ. கா. அலுவலக திரு. எம். தங்கவேலுவும் பேசினர். பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

யூனியன் உறுப்பினருக்கு சேமலாபநிதி தேவை. வயோதிகருக்குப் பென்சன் வேலையை விட்டு நீங்குங்காலத்தில் சம்பளம் போனசாகத் தரவேண்டும். சலவை, சலூன் தொழிலாளர்களுக்குத் தனி வீடுகள். சலவைத் தொழிலாளிக்கு தனி'வெள்ளாவி' விடுதி சலவைக்குத் தோட்டக் கணக்கில் விறகு. பிரசவ சகாயப் பணம்.

நிர்வாகிகள் தேர்தல்:—

தலைவர்: திரு. என். சிங்காரம்.

உப தலைவர்கள்: திரு. கே. அங்கமுத்து, திரு. எம். கோவிந்தசாமி.

செயலாளர்: ஆர். எம். மருதமுத்து.

துணைச் செயலாளர்: பிச்சை பி. கருப்பையா.

பொருளாளர்: திரு. ஆர். பெருமாள்.

பதினொருபேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.


யாழ்ப்பாணம்

**ஐக்கிய இலாப நிதி**

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**
சிறுப்பர்

Std. 14.


நடந்த கதை

# சிங்களம் தெரியாதவர்கள் கள்ளத் தோணிகளா?

— பொ. கி. —

சமீபத்தில் ஒரு நண்பர் பொரளையில் அவரது உறவினருக்காகக் காத்து நின்றார். இவருக்குச் சிங்களம் தெரியாது. வெளியூரிலிருந்து புதிதாக வந்தவர். அங்கே ஓடித்திரியும் ட்ரொலி பஸ் போல நேரம் ஓடிக்கொண்டேயிருந்தது. அங்கு நின்றவரிடம் தேசிய உடையணிந்த ஒருவர் வந்தார்.

"இந்த பஸ் எங்கே போகிறது?" என்ற கேள்வி சிங்களத்தில் பிறந்தது. நண்பருக்கு கேள்வியை விளங்கிக் கொள்ளக் கூடிய அளவு சிங்களம் தெரியும். ஆனால் அம் மொழியில் பதில் கூற முடியவில்லை. "எனக்குத் தெரியாது" எனத் தமிழில் கூறினார். அந்த தேசிய உடை தரித்த 'தேசாபிமானி' எங்கோ சென்று மறைந்தார். மேலும் சில விநாடிகள் சென்றன.

சிறிது நேரத்தில் ஒரு பொலிஸ்காரர் சகிதம் 'தேசாபிமானி' திரும்பி வந்தார். பொலிஸ்காரர் ஆங்கிலத்தில் பேசினார்.

பொலிஸ்: "நீ எங்கிருந்து வருகிறாய்?"

நண்பர்: "பன்னிப்பிட்டியாவிலிருந்து"

பொ: "எங்கு செல்லவேண்டும்?"

ந: "பம்பலப்பிட்டியாவுக்கு".

பொ: "பம்பலப்பிட்டியா பஸ் நிறுத்துமிடம் இதுவல்லவே".

ந: "எனக்குத்தெரியும். நான் இங்கு ஒரு நண்பரைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்".

பொ: ஏதேனும் அடையாளப் பத்திரங்கள் வைத்திருக்கிறாயா?".

ந: "இல்லை. நான் போகுமிடமெல்லாம் அடையாளச் சீட்டுகளையும், நற்சாட்சிப்பத்திரங்களையும் எடுத்துச் செல்லும் வழக்கமில்லை".

(பொலிஸ்காரரின் கண்கள் நண்பரின் கையிலிருக்கும் ஒரு சிறிய காகிதப் பார்சலைக் கவனித்து விடுகின்றன)

பொ: "அது என்ன"?

ந: "காகிதம்"

(பொலிஸ்காரர் பார்சலை விரித்துப் பார்க்கின்றார்.)

"இதெல்லாம் என்ன?".

ந: "நான்தான் கூறினேனே காகிதம் என".

(பொலிஸ்காரர் செயலற்று நிற்கின்றார். நண்பருக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. உரக்கச் சிரித்து விடுகின்றார்.)

பொ: "ஏன் சிரிக்கிறாய்?"

ந: "என்னை என்ன கள்ளத் தோணியென நினைத்தீர்களா? .... அதை நினைத்துத்தான்".

(அங்கே குழுமியிருந்தவர்களும் சிரிக்கின்றனர். பொலிஸ்காரரின்முகம் கறுத்து விடுகின்றது. மெல்ல நடக்கின்றார்.)

அந்த நண்பருக்குமட்டும் சிங்களத்துடன் ஆங்கிலமும் தெரியாமல் இருந்திருப்பின், இந்நேரம் பலவந்தமாக இந்தியாவை நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டிருப்பார்.

---

# இலங்கை தி. மு. க. வேறு: "அகில இலங்கை" தி. மு. க. வேறு

"எதிர்வரும் பொதுத் தேர்தலில் இலங்கை தி. மு. கழகமும் கலந்து கொள்ளப் போவதாக சில தினசரிகள் தவறான செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகத்திற்கு நாட்டில் பொது மக்கள் ஆதரவு நிறைய உண்டு. ஆனால் எட்டு லட்சத்திற்கதிகமான திராவிட மக்கள் வாக்குரிமையின்றி அரசியல் அனாதைகளாகஆக்கப்பட்டிருக்கும் வேளையில் தி. மு. கழகச் சார்பில் தேர்தலில் போட்டியிடக் கழகம் விரும்பவில்லை. "நாட்டிலுள்ள வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை கிடைத்த பின்னரே தேர்தலில் ஈடுபடுவது சிறந்த செயல் எனக் கழகம் கருதுகிறது."

இவ்வாறு இ. தி. மு. கழகப் பொதுச் செயலாளர் திரு. ஏ. இளஞ்செழியன் கூறினார்.

இந்நாட்டின் பொருளாதாரத்தில் எழுபது வீதத்தைத் தருகின்ற, நாட்டின் முதுகெலும்பு போன்ற தொழிலாளர் இன்று "நாடற்றவர்" என அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் தம் ஒற்றுமையை உணர்ந்து முயற்சித்தால் ஒரே நாளில் இழந்த உரிமைகளைத் தனையையும் பெறமுடியும்.

உரிமையிழந்த நிலையில் வாழும் தமிழ்த் தொழிலாளர் சக்தியை தொழிற் சங்க வாதிகள் பிரித்து வேற்றுமையுண்டு பண்ணுகின்றனர். இது துரோகச் செயலாகும். இத் தொழிலாளரின் உரிமையைப் பெறவே தாம் தேர்தலில் நிற்பதாகக் கூறும் தொழிற்சங்க வாதிகள் பித்தலாட்டம் புரிபவர்கள். பாராளுமன்றம் சென்றுதான் உரிமை பெற வேண்டுமென்பதல்ல. அப்படிக் கூறுபவர்கள் ஏன் வெளியில் இருந்து கொண்டே தங்கள் சக்தியைக் காட்ட முடியாது?

தேர்தலில் ஈடுபடும் அகில இ. தி. மு. க.விற்கு தேர்தலில் நிற்க எதுவித யோக்கியமும் கிடையாது. அதன் செயலாளர் முன்னர் எங்கள் கழகத்திலிருந்து நீக்கப்பட்டவர் தான் கூட்டு சேர்ந்திருந்த கோஷ்டியிலிருந்து பிரிந்து சொந்த விளம்பரத்துக்காக இதைச் செய்கிறார். ஆறு வருடங்கள் இலங்கையில் அவர்கள் இயங்கி வருவதாகக் கூறுவது மிகப் பெரும் பொய்யாகும்" என்றும் விளக்கினார் திரு செழியன்.

# சினிமா உலகம்


## 1959 இல் நீங்கள் பார்த்த படங்கள் அவற்றின் தரமும் எங்கள் மதிப்பும்

**1959-ஆம் ஆண்டில் இலங்கையில் திரையிடப்பட்ட படங்களுள், 'ஈழநாடு' விமர்சனம் செய்த படங்களும், அவைபற்றிய விமர்சனக் குறிப்புக்களும் இங்கு தரப்பட்டுள்ளன. இக் குறிப்புக்கள், சென்ற ஆண்டு வெளிவந்த படங்களின் தரத்தைக் கணிக்க, வாசகர்களுக்கு உதவியாக இருக்கும்.**

**பதிபக்தி:** சிவாஜி கணேசன், சாவித்திரி இருவரினதும் திறமையான நடிப்புக்கும், சந்திரபாபுவுக்குமாகப் பார்க்க வேண்டிய படம் **"பதிபக்தி".**

**நீலாவுக்கு நெறஞ்ச மனசு:** 'நீலாவுக்கு நெறஞ்ச மனசு' நீலாவைப் பொறுத்த மட்டில் நெறஞ்ச மனசு தான். ஆனல், எங்களுக்கு மனசு நெறயறதா? அரைக்கரைவாசியாவது நெறயத்தான் செய்கிறது.

**சாரங்கதரா:** மொத்தத்தில் பாமர இரஞ்சிகமான பழைய அம்சங்கள் கொண்ட இப்படம் புதிய வார்ப்பில் தயாரிக்கப்பட்டுள்ளது.



**அம்மையப்பன்:** பாமரரஞ்சகம் ஏற்பட வேண்டுமென்ற எண்ணத்தினல், கதையில் சிறு சண்டை, கதைப்பாத்திரங்களைக் கொண்டே புகுத்திய விகடம் ஆகியவை இடம் பெற்றபோதிலும் சினிமா இரசிகர்களின் பூரண திருப்தியை இப்படம் பெற முடியவில்லை யென்றே கூறவேண்டும். நாஸ்திக வாதமும் இப்படத்தில் ஆங்காங்கு தலைகாட்டத் தவறவில்லை.

**திருமணம்:** சம்பாஷணை, புதுமையான அம்சம், தேர்ந்த நடிப்பு இவை நன்கு அமையவில்லையென்றே கூறவேண்டும். ஆடல் பாடல் **அற்புதம்.**

**மஞ்சள் மகிமை:** சலிப்பின்றிப் பார்க்கக் கூடிய பாமரரஞ்சக அம்சங்கள் உள. குடும்பப் பெண்கள் பார்க்க வேண்டிய அம்சங்கள் பல கொண்டது மஞ்சள் மகிமை.

**பொம்மைக் கல்யாணம்:** சிருங்கார கட்டங்களில் நெருக்கம் அதிகமாக வரவேண்டுமென்றஎண்ணம் தமிழ்ப்படவுலகில் வலுத்து வருவதற்கொப்ப இதிலும் அமைந்துவிடுகிறது.

**மந்திரவாதி:** தமிழ்ப்படவுலகில் 'மந்திரவாதி' போன்ற படங்கள் மலியத்தொடங்கிவிட்டால், தமிழ்த்திரை உலகின் கதி அதோகதிதான்!

**மாய மனிதன்:** விறுவிறுப்பும், சண்டைக் காட்சிகளும் நிறைந்த படம்.

**கூடிவாழ்ந்தால் கோடிநன்மை:** இப்படம், தலைவிரித்தாடும் சாதித்துவேஷத்துக்குத் தலையடி கொடுக்கும் கருத்தாழம் மீக்க ஒரு ஹாஸ்யச் சித்திரமாகும்.

**தாயின் அன்பு:** தாயின் அன்பு பெரிய கோவில் என்பதற்குச் சந்தேகமேயில்லை.

**நான் சொல்லும் இரகசியம்:** நான் சொல்லும் இரகசியம் என்னவெனில் எல்லோரும் பார்த்து இன்புற வேண்டிய படம் இது என்பதே.

**குவாய் ஆற்றின்மேல் பாலம் (ஆங்கிலப்படம்):** நாம் எதை மறந்தாலும், இராணுவ டக்டர் யுத்தத்தின் தத்துவத்தை இரண்டே இரண்டு வார்த்தைகளில் 'பைத்தியம், பைத்தியம்!' என்றுவிரக்தியுடன் கூறும் காட்சியை மறக்க முடியுமா?

**தங்கப்பதுமை:** இப்படத்தில் 'தங்கப்பதுமை' தோன்றவில்லையாயினும் தமிழ்ப் பெண்குலத்தின் பண்பாட்டுக்குத் திண்மை தரும் கற்பெனும் **தங்கம்** இதில் விரவியிருப்பதை நாம் போற்றத்தான் வேண்டும்.

**அன்பு எங்கே:** அன்பு எங்கே என்பதை நீங்கள் ஆராய விரும்பினல், அது பொறுமை உள்ள இடத்தில் தான் இருக்குமென இப்படம் விளக்கி வைக்கின்றது.

**சிவகெங்கைச் சீமை:** குறைந்த கால எல்லையுள் இப்படம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. பாடல்கள் இனிக்கின்றன; காட்சிகள் பரிமளிக்கின்றன.

**சம்பூர்ண இராமாயணம்:** படத்தைப் பார்த்துவிட்டு எழுந்த போது பக்கத்தில் இருந்தவர் கம்ப இராமாயணத்தோடு "சினிமா இராமாயண"மும் கொஞ்சம் கலக்கப்பட்டிருக்கின்றதென்ற கருத்தை நகைச்சுவையுடன் தெரிவித்ததை இங்கு குறிப்பிடாதிருக்கமுடியவில்லை.

**பிரசிடெண்ட் பஞ்சாட்சரம்:** விடுதலை வீரர் வ. உ. சிதம்பரனரின் கதையைப் பள்ளிக்கூட மாணவர்கள் சுருக்கமாக உருக்கமாக நடித்துக்காட்டும் காட்சியைக் கண்டுணரவாவது பிரசிடெண்ட் பஞ்சாட்சரத்தைப் பார்க்கலாம்.

**ஸ்ரீ ராமபக்த ஹனுமான்:** படம் முடிகின்றவரை ஹிந்திப்படம் ஒன்றைப்பார்க்கின்ருேம் என்ற உணர்ச்சியே எவருக்கும் உண்டாகவில்லை.

**புதுமைப் பெண்:** படத்தின் ஒலிப்பதிவு நன்ருக அமையவில்லை. ஒளிப்பதிவு பரவாயில்லை. டைரக்ஷன், சில இடங்களிற் தவிர, மற்றும்படி சோபிக்கவேயில்லை.

**வீரபாண்டிய கட்டபொம்மன்:** தமிழ்மக்கள் அனைவரும் பார்த்துப் பரவசப்பட வேண்டிய படம். யாராவது அப்படத்தைப் பார்க்காமல் இருந்தால், கட்டபொம்மனின் உள்ளம் நொந்துவிடும். கட்டபொம்மன் உள்ளத்தை நோகச்செய்ய எந்தத் தமிழ்மகனுக்குத்தான் மனம் வரும்?

**மனமுள்ள மறுதாரம்:** மனமுள்ள மறுதாரத்தை நீங்கள் விரும்பாவிட்டாலும், செவிட்டுப் 'பிள்ளைவாள்' தங்கவேலு உங்களுக்குப் பிடிக்கத்தான் செய்வார்!

**வாழ்க்கை ஒப்பந்தம்:** வாழ்க்கை ஒப்பந்தம் பார்க்கச் செல்வோர், அதைத்தாம் மூன்றரை மணிநேரம் பொறுமையுடன் பார்ப்பது பற்றித்தம் மனத்துடன் உறுதியானவோர் ஒப்பந்தம் செய்யவேண்டியது அவசியம்.

**நாடோடி மன்னன்:** படத்தின் அளவைக் குறைத்திருந்தால் இன்னும் விறுவிறுப்பாக இருந்திருக்கும். மக்கள் அனைவரும் பார்க்க வேண்டிய படம்.



**மின்னல் வீரன்:** சண்டைகள் நிறைந்த பொழுதுபோக்குப் படம்.

**கல்யாண பரிசு:** சகல அம்சங்களிலும் சிறப்புற்று விளங்கும் ஒரு நல்லபடமென்று பொதுவாகக் கூறிவிடலாம்.

**டில்லி-கா தக் (இந்தி):** இந்தி மொழி விளங்காவிட்டாலும் பரவாயில்லை; இந்தப்படம் நல்லவொரு இந்திப்படம்.

**12 மணி (இந்தி):** படத்தில் 12 மணியை எதிர்பார்க்கிருேம், அது வரவும்தான் செய்கிறது; ஆனல், எதிர்பார்த்த அளவுக்கு அதிர்ச்சியையோ, விறுவிறுப்பையோ அளிக்கவில்லை.

**பாக்கிய தேவதை:** பார்க்கலாம்-மனமிருந்தால்; நேரமுமிருந்தால்.

**மனைவியே மனிதனின் மாணிக்கம்:** இப்படத்தின் மூலம், கோல்டன் பிலிம்ஸ் கொம்பனி தமது 'மாணிக்கச் சரக்கை' மக்களிடம் செலுத்த எத்தனித்திருக்கிறது. இன்றைய தங்க வைர நகைகளிற்போல, இந்த மாணிக்கத்திலும் அசலும் நகலும் சேர்ந்து தானிருக்கின்றன.

**சுமங்கலி:** பொறுமையைச் சோதிக்கும் படம்; ஆனல், சில நல்ல கருத்துக்களுக்காகவும் வில்லன் நடராஜாவின் நடிப்புக்காகவும் பொறுத்துக் கொள்ளலாம்.

**பெண்குலத்தின் பொன் விளக்கு:** முதற்பாகம் ஜெமினி கணேசனும், நம்பியாரும்; இரண்டாவதுபாகம் ஜெமினி கணேசன், நம்பியாருடன் எம். என். ராஜமும்—அவ்வளவுதான்!

**பத்துக்கற்பனைகள் (கட்டளைகள்):** சிற்சில இடங்களில் ஓரளவுக்குச் சலிப்புத்தட்டினலும், இப்படம், படத்தயாரிப்பாளர் ஸெஸில் பி. டி. மில்லுக்கு மங்காத புகழ் தேடித்தரும் விதத்தில் அமைந்துள்ளது.


பார்க்காவிட்டால் 'பாவம்' என்றுகூடச் சொல்லலாம் போலிருக்கே!

**அதிசயப்பெண்:** காரத்தையும், இனிப்பையும் மாறி மாறிச்சாப்பிட்டுப் பழக்கமா உங்களுக்கு? அப்படியானல் அதிசயப்பெண் உங்களுக்குப் பிடிக்கலாம்.

—தொகுப்பு: மின்மினி

குதூகல தைப்பொங்கல் வெளியீடு!
இம்மாதம் 14-ந் திகதி தொடக்கம் ஐந்து திரைகளில்!
சென்ட்ரல் (கொழும்பு) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்) லிபேர்ட்டி (வதுளை) ஜோதி (திருக்கோணமலை)
இனிய பாடல்கள், பரபரப்பூட்டும் சம்பவங்கள் சேர்ந்தவொரு பொங்கல் விருந்து!
பானு பிலிம்ஸாரின்
சபாஷ் ராமு
நடிகர்கள்:
என். டி. ராமராவ், எம். என். ராஜம், தேவிகா, கிரிஜா, மாலினி, ஆர். நாகேஸ்வரராவ்.
வசனம்: உதயகுமார்
சங்கீதம்: ரி. எம். இப்றஹிம்

கடைசி வாரம்!
சென்ட்ரல் - ஓடியன்
லிபேர்ட்டி - ஜோதி
நாகேஸ்வரராவ், ஜமுன, ரேலங்கி
நடிக்கும்
கண் நிறைந்த கணவன்



இறுதி வாரம்! ராணி (யாழ்ப்பாணம்)
செஸில் பி. டி' மில்லின்
பத்துக் கற்பனைகள்

## வவனியா தேர்தல்
### தமிழரசு அபேட்சகரும் போட்டி

— நமது நிருபர் —

வவனியா

தமிழரசுக் கட்சியினர், வவனியாத் தொகுதிக்கு அபேட்சகரை நிறுத்தமாட்டார்களென்ற பேச்சு சில நாட்களாக வாக்காளர் பலரிடையே நிலவியது. திரு. வி. சுந்தரலிங்கம் போட்டியிடுவதால் தமிழரசுக் கட்சி பின் வாங்கியது என்ற முறையில் பிரசாரம் நடைபெற்றது. வவனியாவிலுள்ள தமிழரசுக் கட்சிக்கிளை தகுதியான ஒருவரை, உள்ளூரில் பிறந்தவரைப் போட்டியிடச் செய்வதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்தது. அது முடியாமற் போகவே, தமிழரசுக் கட்சியின் பொதுக் காரியதரிசி டக்டர் ஈ. எம். வீ. நாகநாதன் எப்படியாவது ஒரு அபேட்சகரை நிறுத்த வேண்டுமென்ற எண்ணத்தால் வவனியா பட்டின சங்கத் தலைவராக இருக்கும் திரு. எஸ். சுப்பிரமணியம் அவர்களை நேரில் கண்டு, அபேட்சகராக நிற்கவேண்டுமென வேண்டிக் கொண்டார். தேர்தல் என்பது ஒரு விளையாட்டான காரியமன்று என்பதை உணர்ந்து அவர்போட்டியிடமறுத்தார். எனினும் கட்சிப் பற்றுள்ள அவரால் காரியதரிசியின் கோரிக்கையைத் தட்ட முடியவில்லை.

உள்ளூரில் பிறந்த ஒருவரைத் தமிழரசு அபேட்சகராக நிறுத்துவதாயின் பட்டினசங்கத் தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம் போட்டியிடக் கூடுமென 'ஈழநாடு' குறிப்பிட்டு வந்ததை யாவரும் அறிவர். இலட்சியம் பெரிதே அன்றி வெற்றி தோல்வி பெரிதல்ல என்பதைஉணரும்பான்மையில் கட்சிபோய்க் கொண்டிருக்கின்றதென்று தான் பலரும் பேசிக் கொள்கின்றனர். வவனியாத் தொகுதியில் முதல் முறையாக தமிழரசுக்கட்சி அபேட்சகர் ஒருவர் இம்முறைதான் போட்டியிடுகின்றார்.

திரு. வி. சுந்தரலிங்கம்—சின்னம்: கப்பல் (ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி)

திரு. எஸ். சுப்பிரமணியம் — சின்னம்: வீடு, (தமிழரசுக் கட்சி).

திரு. பி. முத்தையா — சின்னம்: தோடம்பழம், (வன்னி நாட்டு விவசாயிகள் முன்னணி)

திரு: ரி. சிவசிதம்பரம்—சின்னம்: சூரியன், (சுயேச்சை).

—

### பிறமண்டு வித்தியாலய மாணவர் சித்தி

1959-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற வட இலங்கைத் தமிழாசிரிய சங்கத்தின் 5-ஆம் வகுப்புப் பரீட்சையில் முதல் முதலாகப் பங்கு பற்றிய, தாண்டிக்குளம் இராமகிருஷ்ணசங்க பிறமண்டு வித்தியாலய மாணவர் அனைவரும் சித்தியடைந்துள்ளனர்.

## அனுராதபுரத்தில் 6 தொகுதிகளில் 34 அபேட்சகர்

— நமது நிருபர் —

அனுராதபுரம்.

புதிய பொதுத் தேர்தல்களுக்கான அனுராதபுரமாவட்ட தொகுதிகளின் 34 அபேட்சகர்களின் நியமனப்பத்திரங்களைச் சென்ற திங்கட்கிழமையன்று அனுராதபுரக் கச்சேரியில் திரு. நிஸங்கா பி. விஜேரத்தின பெற்றுக்கொண்டார்.

ஐக்கியதேசியக்கட்சி, லங்கா சமசமாஜ கட்சி, கொம்யூனிஸ்ட் கட்சி, லங்கா பிரஜா தந்திரக் கட்சி, மகாஜன எக்ஸத் பெரமுன உட்பட பல்வேறு சுயேச்சை அபேட்சகர்களும் போட்டியிடுகிறார்கள். சமாஜவாடி பெரமுனை என்ற இரியகொல்லைக் கட்சி அபேட்சகர் ஒருவரின் நியமனப்பத்திரம் நிராகரிக்கப்பட்டது. அதுபோலவே லங்கா பிரஜா தந்திரக் கட்சியினர் இருவரும், சுயேச்சையாளர் ஒருவரும் தங்கள் நியமனப் பத்திரங்களில் பிரதிவைக்காத காரணத்தால், நிராகரிக்கப்பட்டனர்.

தொகுதிகளும் போட்டியிடுவோரின் தொகையும்வருமாறு: அனுராதபுரத் தொகுதி: 8; ஹொரவப்பொத்தானை: 5; மதவாச்சி: 3, காலாவெவ: 5; கெக்கிராவ: 5; மிகிந்தலை: 7; அபேட்சகர்கள் அனைவரும் சிங்களவர்களே.

போட்டிபலமானதாக இருக்கும் என்று எதிர்பார்ப்பதால் அநேகமாக எல்லா அபேட்சகர்களும் தங்கள் தேர்தல் பிரசாரத்தைமும்முரமாக்கியுள்ளனர்.

### சென்னைகோஷ்டி தோல்வி

சென்னை வைத்தியக்கல்லூரிக் கோஷ்டிக்கும் அனுராதபுரம் விளையாட்டுச்சங்கக் கோஷ்டிக்கும் சென்ற திங்கட்கிழமை நடைபெற்ற ஓர் உதைபந்தாட்டப் போட்டியில் அனுராதபுரம் கோஷ்டி சென்னைக் கோஷ்டியை 5-2 கோல்களால் சுலபமாகத் தோற்கடித்தது.

## தமிழ்ப் பல்கலைக்கழகம்
### கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவு

அண்மையில் கூடிய கொழும்புத் தமிழ்ச்சங்க ஆட்சிக் குழுக் கூட்டத்தில் நாவலர் சோமசுந்தர பாரதியாரின் மறைவு குறித்துப் பரிவினைத் தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தமிழ்ப் பல்கலைக் கழகம்**

தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காகத் திருக்கோணமலையில் உருவாகும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை வளர்ப்பதற்கு எவ்வித வேறுபாடுமின்றித் தங்களுடைய முழு ஆதரவையும் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்துக்கு நல்க வேண்டும்.

**தமிழியக்கம்**

தமிழ் மொழி மதிப்புடன் வாழுதற்கும், தமிழ் மக்கள் தாம் இழந்த மொழி உரிமையைப் பெறுதற்கும் தமிழிலேயே எல்லா அலுவல்களையும் நடாத்த வேண்டும்.

## தமிழர் தன்மானத்துடன் வாழ வழி

[7ஆம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ் அங்கத்தவரை மட்டுமே அனுப்ப முடியும். எனவே இவர்கள் எல்லோரும் ஒரு தலைவரின்கீழ் ஒருங்கே செயல்பட்டாலன்றி, நாட்டின் சட்ட அமைப்பிலோ நிர்வாகத்திலோ எத்தகைய பங்கும் வகிக்க முடியாது. எந்தச்சிங்களக்கட்சியும் தக்க பலமின்றி அரசியலை நிறுவினுல், அதனைச் சீர் குலைக்கவும் நம்மால் முடியும். அப்படியானல் மட்டுமே நாட்டின் அரசாங்கத்தின் போக்கைக் கட்டுப்படுத்தும் சக்தி ஈழத் தமிழருக்குக் கிடைக்கும்.

**தேர்தலின் முன்பு ஈழத்தமிழ் தலைவர்களிடையே ஒற்றுமையேற்பட வழிகளில்லை என ஈழத்தமிழ் ஒற்றுமை முன்னணி கருதுகின்றது. தேர்தலின் பின்னரே இத்தகைய ஒற்றுமையேற்பட முடியும்.**

4. எம். ஈ. பி. அரசாங்கம் பதவியேற்ற பிறகு நாட்டில் நடைபெற்ற கலவரங்களைப் பற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க, ஒரு கொமிஷனை—கூடுமானல் ஐக்கியநாடு சபையின் ஆதரவின் கீழ், நியமித்தல்.

5. பொதுவாக 1956 மே தொடங்கியும், குறிப்பாக 1958-ம் ஆண்டிலும் நடந்த கலவரங்களால், பொருள் இழந்தோருக்கு தக்க நஷ்டஈடு அளித்தல்.

6. அமெரிக்க ஜனதிபதி ரூஸ்வெல்ட் அமைத்த நான்கு வகைச் சுதந்திரங்களையும் பெற்று அவைகளைக் காப்பாற்ற, முன்னணி வழி செய்யும்.

7. இலங்கையின் தற்போதைய காணிச் சட்டங்களை மீறப்படாதென்று அரசாங்கத்தை வற்புறுத்துதல்.

8. ஈழத் தமிழினத்தின் குழந்தைகளுக்குஅவர்களின் தொன்மையான கலாச்சாரத்தையும், நாகரிகத்தையும், இன்றைய உலகில் அவசியமான விஞ்ஞானம், தொழிற்கல்வி ஆகியவற்றையும் படிப்பதற்கான வசதி செய்தல்.

9. ஈழத் தமிழர் அனைவருக்கும் வியாபாரநிலையங்கள், ஆலைகள் ஆகிய சகல துறைகளிலும் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் பட்ச பாதமற்ற நிர்வாகத்துடன் வேலை கொடுக்கப்படல் வேண்டும்.

10. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் சாசனத்தைப் பின்பற்றிச் சகல விதமான உரிமைகளையும் தமிழினத்துக்கு அளித்தல்.

இலங்கை அரசாங்கம் மனித உரிமைச் சாசனத்தை ஒட்டி நடக்கவேண்டிய வழிகளை ஈழத் தமிழ் முன்னணி செய்யும்.

## புதிய தேர்தல் ஒழுங்கு விதிகள்

[7ஆம் பக்கத் தொடர்ச்சி]

னப்படை முதலியவற்றைச் சேர்ந்தவர்களும் அரசாங்க அல்லது பிறஊழியர்களும் விரும்பினல் தமது வாக்குகளை தபால் மூலம் அளிப்பதற்கு புதிய தேர்தல்விதிகள் வகைசெய்கின்றன. தபால்மூலம் வாக்களிக்க விரும்புவோர் நியமனதிகதிக்குப்பின் ஒருவாரகாலத்திற்குள் தொகுதிக்குரிய பதிவு உத்தியோகத்தருக்கு விண்ணப்பிக்க வேண்டும். இது குறித்து பதிவு உத்தியோகத்தர் செய்யும் முடிவு இறுதியானது. தகுதியானவர்களுக்கு பதிவு உத்தியோகத்தர் வாக்குச்சீட்டுகளை அனுப்பிவைப்பார். இரகசிய வாக்களிப்பைப் பாதுகாப்பதற்கு "வாக்குச்சீட்டுக் காகித உறை" ஒன்று அனுப்பப்படும். பெரிய காகித உறையினுள் வாக்குச்சீட்டு உறையையும் ஆள்அடையாள உறுதிப்பத்திரங்கள் முதலியவற்றையும் வைத்து வாக்காளர் திருப்பி அனுப்பவேண்டும்.

### வாக்காளருக்கு விபரங்கள்

அடுத்த பொதுத்தேர்தலின் போது தேர்தல் தினத்துக்குக் குறைந்தது ஏழுநாட்கள் முன்னதாக ஒவ்வொரு வாக்காளருக்கும் குறித்த தொகுதியின் தேர்தல் அதிகாரியிடமிருந்து பின்வரும் விபரங்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்:-

(1.) தேர்தல் தொகுதியின் பெயரும் இலக்கமும் (2). வாக்காளர் இடாப்பில் உள்ளபடி வாக்காளரின் பெயர், விலாசம், பதிவிலக்கம். (3)வாக்காளருக்குரிய வாக்களிப்பு நிலையம். (4) தேர்தல் திகதியும் வாக்களிக்கும் நேரங்களும்.

இவ்விபரங்கள் தபால்மூலம் வாக்களிக்கும் உரிமைபெற்றவர்களுக்கு அனுப்பப்படமாட்டா. தபால்மூலம் இவ்விபரங்கள் கிடைக்காவிட்டால் தேர்தல் தினத்தன்று தபாற்கந்தோர்களில் இவற்றை குறித்த வாக்காளர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

### நடைமுறைக்கு வராதவிதிகள்

திருத்தம் செய்யப்பட்ட தேர்தல் விதிகளில் இரண்டு விதிகள் அடுத்த பொதுத்தேர்தலின்போது நடைமுறையில் இருக்கமாட்டாதென. தேர்தல் அதிகாரி கூறியிருக்கிறார். இவ் விதிகள் பின் வருமாறு:

1. 18 வயதுக்கும் 21 வயதுக்கும் இடையே உள்ளவர்களின் பெயர்கள் வாக்காளர் இடாப்புகளில் பதிவு செய்வதற்குப்போதிய நேரம் கிடைக்காத காரணத்தால் இப்பிரிவினர் வாக்களிக்க முடியாது. (1961 ஏப்ரலில் பொதுத் தேர்தல் நடைபெற்றிருக்குமாயின் இவர்களுக்கு வாக்குரிமை கிடைத்திருக்கும்.)

2. ஒவ்வொரு வாக்காளரையும் அடையாளம் தெரிந்து கொள்வதற்கு, தேர்தல் அதிகாரியினல் அங்கீகரிக்கப்படும் அடையாளப் புகைப்படம் வழங்குதல்.

இவ்விரு விதிகளையும் நடைமுறைக்கு கொண்டுவர முடியாமலிருப்பதற்குக் காரணம் பொதுத்தேர்தல் பதின்மூன்று மாதங்கள் முன்னதாகத் திடீரென நடைபெறுவதற்கு முடிவு செய்யப்பட்டிருப்பதேயாகும்.

### பொது விடுமுறை

3,600 வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றுவதற்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் தேவைப்படுவதால் தேர்தல் தினமாகிய 19-3-1960 ஒரு பொது விடுமுறை நாளெனப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது. சுமார் 8,000 பேர்களடங்கிய இலங்கைப் பொலிஸ் சேவைப்பகுதியினருக்கு உதவி புரிவதற்கு 30,000 விசேஷப் பொலிஸாரைத் திரட்டுவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

### தேர்தல் நிலையங்கள்

நாட்டுப் புறங்களில் சராசரியாக 1500 வாக்காளர்களுக்கு ஒரு வாக்களிப்பு நிலையம் வீதம் நிறுவப்படுமென்றும்கொழும்பிலும் வேறு பிரதான நகரங்களிலும் இச்சராசரி அளவு கூடுதலாக இருக்கும் என்றும் தேர்தல் அதிகாரி தெரிவித்திருக்கிறார். வாகனங்களை உபயோகிக்க முடியாதென விதிக்கப்பட்டிருப்பதால் வாக்களிப்பு நிலையங்களை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. பொதுத் தேர்தல் செலவுக்காக 50 இலட்சம் ரூபாய் ஒதுக்குமாறு தேர்தல் அதிகாரி அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார். புதிய பொதுத் தேர்தலில் 30 இலட்சம் மக்கள் வரை வாக்களிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பயிர், செடிகளுக்குண்டாகும்
சகல வியாதிகளையும் நிச்சயமாகத் தடுப்பது

பொலிடோல்

யாழ்ப்பாணத்தில் விநியோகிப்பவர்கள்:
கே. எஸ். செல்லையா
ரேயல் டிஸ்பென்சரி

ஏகவிநியோகஸ்தர்கள்:
சதாம் ஹவுஸ் லிமிடெட்
தபாற் பெட்டி இல. 743. கொழும்பு.
சகல தகவல்களும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

தைப்பொங்கல் வெளியீடு! 13-ந் உ புதன்கிழமை முதல்!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரெக்ஸி (வெள்ளவத்தை) வேல்ஸ் (கண்டி) வின்ஸர் (யாழ்ப்பாணம்) குயின்ஸ் (திருக்கோணமலை) இம்பீரியல் (மட்டக்களப்பு) கிங்ஸ் (பதுளை) நெல்சன் (திருக்கோணமலை)

மற்றும் ஆறு திரைகளில்!

ஜெமினி கணேசன் – ஜமுனா நடிக்கும்

# நல்ல தீர்ப்பு

செல்லமஹால் (கொழும்பு) மகத்தான நான்காவது வாரம்!

எம். ஆர். ராதா, அசோகன், சௌகார் ஜானகி, டி. கே. பாலச்சந்திரன்,
காகா ராதாகிருஷ்ணன், பத்மினி பிரியதரிசினி

நடிக்கும்

# தாமரைக்குளம்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரெக்ஸி (வெள்ளவத்தை) வின்ஸர் (யாழ்ப்பாணம்) வேல்ஸ் (கண்டி)

வைஜயந்திமாலா தோன்றும்

# அதிசயப் பெண்

தமிழ்த்திருநாளாம் தைப்பொங்கல் தினம் அன்று சினிமாஸ் திரைகளில் காட்சியளிக்கும்!

சிவாஜி கணேசன், சாவித்திரி, பாலையா, கண்ணம்பா, சந்திரபாபு, எம். என். ராஜம், தங்கவேலு, ஈ. வி. சரோஜா நடித்த

# காத்தவராயன்

தீக்கெட்டும் முழங்கீடும் 3-வது வாரம்!

காமினி (மருதானை) பிளாஸா (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு)


விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)

மற்றும் ஆறு திரைகளில்!

★ ரஞ்சன் ★ ராஜசுலோசனா
★ ராஜனலா ★ சௌகார் ஜானகி
★ சூரியகலா ★ ராஜகோபால்

மற்றும் பலர் திறம்பட நடித்த
வீரச்சித்திரம்!

முக்கிய பாகங்கள் சில கலரில்
காண்பிக்கப்படுகிறது!




வெற்றிகரமான 13-வது வாரமாகக் காட்சியளிக்கிறது!

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) **கல்யாண பரிசு** கிங்ஸ்லி (கொழும்பு)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1960-ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ந் திகதி வெளியிடப்பெற்றது.